கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



கையேந்தி நிற்கிறேன்

- திருமா உருக்கம்

KALKI • 01.11.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



அமெரிக்கா போகுது ஆரணி அரிசி!

கடவுள் காதலித்த இடம்!


வாத்தியார் கிராமம்

அவர்கள் குழந்தைகள் இல்லை

- கவிஞர் விவேகா

வரதட்சணையைத் தடைசெய்யும் கல்வெட்டு!

வேலூர் - திருவண்ணாமலை ஸ்பெஷல் - II



சிறுநீர் கசிவு பிரச்னையா?

இன்னும் ஏன் தயக்கம்?

"நீங்கள் அணுக வேண்டிய சிறப்பு மருத்துவர்

UROGYNECOLOGIST

இருமினாலோ,
தும்மினாலோ

சிறுநீர் கசிவு
ஏற்படுகிறதா?

"சிலிங் சிகிச்சை"

"வலியில்லாமல், இரத்தக் கசிவில்லாமல் ஒரே நாளில் வீடு திரும்புங்கள்". அமெரிக்காவில் UROGYNECOLOGY FELLOWSHIP பட்டம் முடித்த மருத்துவர்கள் உள்ள இந்தியாவில் முதல் ISO 9001:2000 Certified சிறப்பு மையம்

இப்போது கோவையில்

**பாலா மெடிக்கல் சென்டர்
அண்டு ஆஸ்பிட்டல்,**
901, திருச்சி ரோடு.
இராமநாதபுரம்.
கோயம்புத்தூர் 641 045.
0422-2323456, 2323333

தங்கள் பிரச்னையை மேற்படி மையத்திலுள்ள முறையான பயிற்சி பெற்ற நபரிடம் தொலைபேசியில் தெரிவித்து கவுன்சலிங் அல்லது ஆலோசனை பெறலாம்.
ஆலோசனைக்குக் கட்டணம் எதுவும் கிடையாது!

GUNA ASSOCIATES IN UROGYNECOLOGY & RESEARCH FOR INCONTINENCE (GAURI)

1, Crescent Park Street, T.Nagar, Chennai - 600 017. Ph : 24341055, 24322591
E-mail : gunasek@gmail.com Web : www.urogynecology.in



ஹாய் தேங்க்ஸ்!

வேலூர் - திருவண்ணாமலை சிறப்பிதழ்களைச் சிறப்பாகத் தயாரிக்க ஆலோசனை வழங்கி, குன்றென கடிதங்கள் குவிந்தன. அதில் தேர்ச்சியான நம்பகத்தன்மையான விவரங்கள், படங்கள் அளித்த வாசகர்களால்தான் இச்சிறப்பிதழ்களைத் தயாரிக்க முடிந்தது. அவர்களுக்கு ராயல் சல்யூட்!

- (ஆர்)

என். சண்முகம்	ராஜா	
சித்ரா மூர்த்தி	ஜெயராமன்	வே.ந.கதிர்வேல்
என்.எஸ்.மணிமாறன்	மணி	கே.சுலோசனா
க.மோகன்	பவித்ரா நந்தகுமார்	எல்.மாறன்
உமாதேவி பலராமன்	வசந்தி ராமசாமி	இரா.கணேசன்
ந.முத்துலட்சுமி	கே.எஸ்.சத்தீஷ்	ஆர். சுஜாதா
என். சுந்தரராஜ்	முத்து ஆனந்த்	சுஜாதா கணேஷ்
அ.ப.மலர்க்கொடி பலராமன்	எஸ்.வெங்கடேசன்	ஆர்.பஞ்சவர்ணம்
இரா. பார்த்திபன்	எல்.பாபு	போளூர் சி.ரகுபதி
கே. கனகராஜ்	செல்வி காந்த்	சி.கலைவாணி
ஏ.சேகர்	மா.சுந்தரமூர்த்தி	ஜி.வெங்கட்ராமன்
பி. மல்லிநாதன்	ர.பிரகாஷ்	அ.யாழினி பர்வதம்
பெ.விஜயசேனன்	ஆர். முத்துமாணிக்கம்	கார்த்திகா ஆதித்தன்

வேலூர் - திருவண்ணாமலை மாவட்டச் செய்திகள்:
❖ ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு ❖ ப்ரியன்



* ஸ்ரீகாந்த்



* வெங்கடேஷ் பிரசாத்



* சச்சின்

தேர்வுக்குழு... தேறாத குழு!

"நான் கேப்டனாக இருந்த முதல் தொடரில் (பாகிஸ்தானுக்கு எதிராக) ஒரு போட்டியில்கூட தோற்கவில்லை. நான்கு டெஸ்ட்டுகளையும் டிரா செய்துவிட்டு பாகிஸ்தானிலிருந்து ஊர் திரும்பினேன். என்னை கேப்டன் பதவியிலிருந்து இறக்கிவிட்டார்கள்'' என்று இன்றும் பழைய நினைவுகளைக் கிளறி சோகமாகிப் போவார் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த். ஆனால், அடுத்த வீரருக்கு மட்டும் வேறு நியாயங்கள், வேறு தீர்ப்புகள் வைத்திருக்கிறார் அவர்.

சச்சினை விடவும் ராகுல் டிராவிட் ஒரு விஷயத்தில் மிகவும் உயர்ந்தவர். அணிக்காக தண்டவாளத்தில் தலையை வைக்கச் சொன்னாலும் தயங்காமல் முன் வருவார். ஓபனிங்குக்கு வேறு ஆள் இல்லையா, கூப்பிடு டிராவிடை. கூடுதலாக பேட்ஸ்மேன் வேண்டுமா, டிராவிட் கையில் கிளவுஸை மாட்டு. எகிறும் பிட்ச்சுகளில் தாக்குப் பிடிக்க வேண்டுமா, இருக்கவே இருக்கார் டிராவிட். விடலைப் பயல்கள் எகிறும் பந்துகளுக்கு அலறுகிறார்களா... மீண்டும் கூப்பிடு டிராவிடை. ஆனால், இதுபோல சச்சினை இழுத்த இழுப்புக்கெல்லாம் சுலபமாக வளைக்க முடியாது. ஆத்திர அவசரத்துக்கு உதவுகிறார் என்பதற்காக டிராவிடை இப்படி பந்தாடியிருக்கக் கூடாது.

டிராவிடை மீண்டும் ஒரு நாள் போட்டிகளுக்குத் தேர்வு செய்ததே பெரிய தவறு. ஆனால், கிடைத்த வாய்ப்புகளில் சோடை போகாத மனிதனை மீண்டும் அணியிலிருந்து வெளியேற்றுவது என்பது டிராவிடின் தோல்வி அல்ல. தேர்வுக்குழுவின் மோசமான செயல்பாடு. பவுலிங் கோச் வெங்கடேஷ் பிரசாத்தையும், ஃபீல்டிங் கோச் ராபின் சிங்கையும் கழற்றிவிட்டுப் பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது தேர்வுக்குழு. ராபின் சிங்கின் சீட் ஒரு வருடத்துக்கு முன்பே கிழிக்கப்பட்டிருக்க வேண்டியது. இது ஆமை வேக நடவடிக்கை. ஆனால் பிரசாத் மீது கல்லெறிந்திருப்பது அநியாயம். இந்திய அணியில் இப்போது இடம்

பிடித்துள்ள அத்தனை பந்து வீச்சாளர்களும் பிரசாத்தின் பங்களிப்பைப் பல பேட்டிகளில் பாராட்டியிருக்கிறார்கள். இஷாந்த் சர்மா மீதான கோபத்தை பிரசாத் மீது காட்டியதால் யாருக்கு நஷ்டம்?

7-0 என்கிற விகிதத்தில் ஒருநாள் போட்டிகளை ஜெயிப்போம் என்கிறார் ப்ரெட் லீ. ஆஸ்திரேலியா திடீரென ஃபார்முக்கு வந்துவிட்டது. நாளைய வார்னே, மெக்ராத், ஹேடன்களை ஆஸ்திரேலிய அணி கண்டுபிடித்துவிட்டது. ஆனால், இந்திய அணியில் வீரர்கள் தேர்வுக் குழப்பத்திலிருந்து வெளிவரவே நாளாகிறது. நன்றி ஸ்ரீகாந்த்! ○



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின்
உண்மைத் தன்மைக்கு
கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

"இலங்கையிலிருந்து இதயம் ரணமாகித் திரும்பியிருக்கிறேன்" என்று சொல்லும் திருமாவளவனிடம் பேசியதிலிருந்து...

இலங்கைக்குச் செல்ல நீங்கள் நிர்பந்திக்கப்பட்டீர்களாமே?

"எந்த நிர்பந்தமும் இல்லை. நான் இலங்கை போகும் குழுவில் இருக்கிறேன் என்று தெரிந்தவுடன் போக வேண்டாம் என்றுதான் நூற்றுக்கணக்கான குறுந்தகவல் கள். இவை தவிர ஓயாத தொலைபேசி அழைப்புகள். நான் மிகுந்த மன உளைச் சலுக்கு ஆளானேன். தோழர்களுடன் கலந்து பேசினேன். அங்கு முள்வேலி முகாம்களில் வதைபட்டுக் கொண்டிருக்கும் தமிழர்களை நான் தனியாகச் சென்று பார்த்து ஆறுதல் சொல்ல முடியாது. எனவே இந்த வாய்ப் பைப் பயன்படுத்துவதில் தவறில்லை என்று முடிவு செய்தோம்."

ராஜபக்ஷே மீது வெறுப்பு நிறைந்த விமர்சனங்களை, வன்முறைச் சொற்களைக் கூட பயன்படுத்தியவர் நீங்கள்...

"ஆம். அவரைப் போய்ப் பார்க்க நேர்ந்தது குறித்து வேதனைப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. தமிழர்கள் முள் வேலி முகாம்களிலிருந்து விடுபட்டுச் சொந்த ஊருக்குத் திரும்ப வேண்டும். இதற்காக இலங்கை அரசிடம் கையேந்தும் நிலைக்குத் தான் தள்ளப்பட்டிருக்கிறோம். முகாம்களைப் பார்த்துவிட்டு வந்து விடுவதுதான் முதலில் என் நோக்கமாக இருந்தது. ஆனால் ஒரு குழுவாகப் போகும்போது நாகரிகம் கருதி சில சங்கடங்களைச் சந்திக்க வேண்டியிருக் கிறது. இலங்கை அதிபருடனான சந்திப்பு

கையேந்தி

அத்தகைய ஒன்று."

ராஜபக்ஷேவுடன் கை குலுக்கியது உங்கள் தொண்டர்களைக்கூட கோபப் படுத்தியுள்ளதே?

"நான் கொஞ்சம் தூரவேயிருந்து கை கூப்பவே நினைத்தேன். ஆனால் அருகில் வந்து அவரே கையை இழுத்துப் பிடித்தார். மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு நான் கேட்க நினைத்த இரு கேள்விகளை அவரிடம் கேட் டேன். ஒன்று, 'சொல்லொண்ணா துயரம் அனுபவித்துக் கொண்டிருக்கும் தமிழர்களை எப்போது அவர்கள் ஊருக்கு அனுப்பி வைக்கப் போகிறீர்கள்? அடுத்து 'தமிழர்கள் மீண்டும் சுயமரியாதையுடனும், சம உரிமை



யுடனும் வாழ என்ன அரசியல் தீர்வு வைத்திருக்கிறீர்கள்?' இதற்கு, 'நிலக்கண்ணி வெடிகளை எடுத்த பிறகே அவர்கள் அனுப்பி வைக்கப்படுவார்கள்' என்று சொன்னார் ராஜபக்ஷே. அது சரியான நொண்டிச் சாக்கு. யாழ்ப்பாணம் இப்போது ராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அங்கே கண்ணி வெடிகளில்லை. அந்தப் பகுதியைச் சேர்ந்த 45,000 பேரை முகாமைவிட்டுத் தங்கள் வாழ்விடங்களுக்குத் திருப்பி அனுப்பவில்லை. உண்மை என்னவென்றால் ஒவ்வொருவராக இவர் புலியா, அவர்கள் ஆதரவாளரா என்று தீவிர விசாரணை செய்கிறார்கள். இதுவரை 8000 பேரைத்தான் விசாரித்துத் திருப்தியடைந்திருக்கிறார்கள். 20,000 பேரைக் காணவில்லை. மேலும் அமைச்சர் தலைமை

நிற்கிறேன்!

- திருமா உருக்கம்

யில் அமைந்த கமிட்டி, அரசியல் தீர்வுக்கான அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அதையும் ஓரங்கட்டிவிட்டார்கள். அதைப் பற்றிக் கேட்டால் அது என் வேலை என்று சொல்கிறார் ராஜபக்ஷே. ஆனால், எங்களிடம் வாக்கு கொடுத்தபடி 58,000 பேரை மீண்டும் அவர்கள் ஊர்களுக்கு அனுப்புவார்களா என்பதும் சந்தேகமே. கோடிக்கணக்கில் நாம் உதவிப் பணம் கொட்டுகிறோம். இந்தப் பணம் எப்படி பயன்படுகிறது என்பதற்கு எந்தச் சோதனையும் கிடையாது. மனித உரிமைகளை மீறியதற்காக உலக நாடுகள் இலங்கைக்குப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். ராஜபக்ஷே போர்க்குற்றவாளியாக அறிவிக்கப்பட வேண்டும். ஆனால் உலகம் வேடிக்கை பார்ப்பதை நினைத்து வேதனையாக இருக்கிறது. அது ஏன் என்றும் புரியவில்லை. இந்தியா

ஏமாறுவதை நினைத்தால் வயிற்றெரிச்சலாக இருக்கிறது.''

நீங்கள் நினைத்த முகாம்களைப் பார்க்க முடிந்ததா?

''சென்னையில் விமானத்தில் ஏறி உட்கார்ந்த உடனேயே டி.ஆர்.பாலு 'அப்பாடி குதிரையை லாயத்தில் போட்டுப் பூட்டியாகிவிட்டது' என்று என்னைப் பார்த்துச் சொன்னார். இருந்தும் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் தமிழர்களைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்புடன் இருந்த நான் ஏதும் சொல்லவில்லை. ஆனால் இந்தியத் தூதரக அதிகாரிகள் என்னை இலங்கையில் எங்கேயும் தனியே விடவில்லை. மக்களைப் பார்த்துப் பேச அனுமதிக்கவில்லை. பத்திரிகையாளர்களைப் பார்க்க அனுமதிக்கவில்லை. இந்தியத் தூதரக அதிகாரிகளோடு சேர்ந்து கொண்டு, சில இடங்களுக்குப் போவதைத் தவிர்த்த குழுவின் போக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. இலங்கைத் தமிழர்கள் நமது மத்திய, மாநில அரசுகள்மீது கடும் கோபத்தில் இருப்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. நான் அந்தக் குழுவில் இடம்பெற்றிராவிட்டால் முகாம்களில் இருந்த தமிழர்கள், எம்.பி.க்கள் குழுவையே புறக்கணித்திருப்பார்களோ என்றுகூட நினைக்கிறேன்.''



பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்ற உங்கள் கருத்து இப்போதும் மாறவில்லையா?

''ஆம். அந்த நம்பிக்கை தொடர்கிறது. அதை மூடநம்பிக்கை என்று சொன்னால் அதுபற்றி கவலை இல்லை!''

கலைஞருக்கு ஈழ விவகாரத்தில் நீங்கள் பி.ஆர்.ஓ. என்று கிண்டலடிக்கிறார்களே?

''நாங்கள் ஒரு கூட்டணியில் இருக்கிறோம். பல விஷயங்களில் என் கருத்துக்களை கலைஞரிடம் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறேன். வெளிப்படையாகச் சிலவற்றைப் பேச முடியாது. காங்கிரஸுடன் கூட்டணியாய் இருப்பதால் கலைஞர் பழி சுமக்கிறார். கலைஞரோடு கூட்டணியில் இருப்பதால் என்மீதும் வீண் பழி விழுகிறது.''

கலைஞரோடு கூட்டணியில் இல்லாமல் இருந்திருந்தால், வீண்பழி விழுந்திருக்காதோ!

''சென்ற அக்டோபரிலிருந்து ஈழத் தமிழர்களுக்காகப் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். உச்சகட்டமாக உண்ணாவிரதம் இருந்தேன். ஈழத் தமிழர்களுக்காகப் போராடும் தா.பாண்டியனும், வைகோவும் என் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு காட்டியிருந்தால் போராட்டம் வலுப்பெற்றிருக்கும். ஆனால் ஜெயலலிதாவுக்குப் பயந்து கொண்டு பேசாமல் இருந்து விட்டார்கள். தி.மு.க.விலிருந்து வெளியே வந்த மருத்துவர் ராமதாஸ் கம்யூனிஸ்ட், வைகோவோடு எங்களையும் சேர்த்து மூன்றாவது

“இந்திய தூதரக அதிகாரிகள் என்னை மக்களைப் பார்த்துப் பேச அனுமதிக்கவில்லை”

அணி கட்டியிருக்கலாம். செய்யவில்லை. ஜெயலலிதாவோடு போய்ச் சேர்ந்தார்கள். ஈழத்தமிழர்களுக்குத் தொடர்ந்து துரோகம் இழைத்த ஜெயலலிதாவோடு நான் எப்படிச் சேர முடியும்?''

ஈழப் போரின் உச்சகட்டத்தில் (மே மாதம்) உங்கள் நிலைப்பாட்டுக்கு கலைஞர் ஆதரவு தரவில்லை. ஆனாலும் நீங்கள் அவருடன் கூட்டணி வைத்துக் கொண்டீர்கள்..?

''இப்போது உங்களிடம் சில உண்மைகளைப் பகிர்ந்து கொள்கிறேன். ஈழப் பிரச்னையில் எனது போராட்டங்கள் காங்கிரஸை மிகவும் சங்கடப்படுத்தியதால், என்னைக் கூட்டணியில் வைத்திருப்பதில் கலைஞருக்கு ஒரு தயக்கம் இருந்திருக்கிறது. அவர் மருத்துவமனையில் இருந்தபோது, நான் சந்திக்க விரும்பினேன். ஆனால், ஆற்காடு வீராசாமியை மட்டுமே பார்க்க முடிந்தது. கலைஞரிடம், 'சிறுத்தைகள் உங்களோடு இருக்கிறார்களா?' என்ற கேள்விக்கு, 'இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம்' என்று பதில் சொன்னார். நாங்கள் வெறுத்துப்போய் தனியாக நிற்பதென முடிவு செய்துவிட்டோம். இதைப் புலனாய்வுத்துறை மூலம் அறிந்து கொண்ட கலைஞர் மறுநாள், 'சிறுத்தைகள் எங்களுடன்தான் இருக்கிறார்கள்' என்றார்! இப்படித்தான் அமைந்தது கூட்டணி. ஆனால் பெருந்தன்மையாளர் கலைஞர். காங்கிரஸார் மற்றும் போலீஸாரின் எதிர்ப்பையும் மீறி நாங்கள் தமிழீழ அங்கீகார மாநாடு மற்றும் 'எழும் தமிழீழ மாநாடு' நடத்த அனுமதி கொடுத்தார். அந்தச் சமயத்தில் காங்கிரஸில் இருந்த சிலர் தமிழகத்தில் ஆட்சியைக் கவிழ்க்கக்கூட சதி செய்தார்கள். ஆனால் சோனியா - கலைஞர் நட்பு உறுதியானதாக இருந்ததால் அந்த முயற்சி கருகிப் போனது. தலித்துகளின் உயர்வுக்காகப் பாடுபடும் நாங்கள், அரசியலில் எங்களைத் தக்கவைத்துக் கொள்ள சில முடிவுகள் எடுக்கும்போது அது விமர்சிக்கப்படுவது இயற்கையே.''

ஈழப் பிரச்னைக்காக டில்லியில் வெளியுறவுத் துறை அதிகாரிகள் மற்றும் பிரதமரைச் சந்தித்துப் பேசியிருக்கிறீர்களா?

''நான் எம்.பி. ஆக இருந்தாலும் பிரதமரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது! ராகுல் காந்தியைப் பார்த்து விளக்கலாம் என்று விருதுநகர் பாராளுமன்ற உறுப்பினர் மாணிக் தாகூரிடம் அனுமதி வாங்கச் சொன்னேன். இன்னமும் கிடைக்கவில்லை.''

ஈழத் தமிழர்களுக்கு என்றுதான் விடிவுகாலம்?

''அங்கே தமிழ்ச் சமுதாயம் அச்சத்தோடும் பீதியோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. நான் அங்கு சென்றபோது என்னுடன் பேசிய தமிழர் இருவர் 'காணாமல்' போய் இருக்கிறார்கள். தந்திரக்காரரான ராஜபக்சே தமிழ் அமைப்புகளையும், மலையகத் தமிழர்கள் அமைப்பையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் அமைப்பையும் இரண்டு, மூன்று துண்டுகளாகப் பிளந்து துரோகிகளை உருவாக்கி வைத்திருக்கிறார். இலங்கையில் ஓர் உறுதியான தமிழர்கள் அமைப்பு கட்டப்பட வேண்டும். அதன் மூலமே தமிழர்களின் தன்மானத்தையும் சமஉரிமையையும் மீட்டெடுக்க முடியும்.''

- ப்ரியன்

மாம்ஸ்—ன்னு கூப்பிடுற ஃப்ரண்ட்ஸ்!

பட்டாசு, பலகாரம், பட்டி மன்றம் - இந்த மூன்றும் இல்லாத தீபாவளி, மேகம் இல்லா வானம் போல வெறிச்சோடி இருக்கும் போலும். எல்லா சேனல்களிலும் இது எதிரொலித்தது. இதுபற்றி ஜானகி எம்.ஜி.ஆர். காலேஜ் ஸ்டூடன்ட்ஸின் தீபாவளி ஒபீனிய னைக் கேட்டபோது...





துளசி பாய்:

வாழ்க்கைக்குத் தேவை உறவா நட்பான்னு ஒரு பட்டிமன்றம். நடுவர் சுகி.சிவம். அதுல ஒருத்தர் பேசினாரு. பேருக்கு முன்னாடி போட்டுக்கற அப்பா இனிஷியலைவிட ரொம்ப பவர்ஃபுல் ஃப்ரெண்ட்ஸ்களோடு கனெக்ஷன்தான். ''கல்யாணப் பத்திரிக்கையில பேரு போடலைன்னா கல்யாணத்தையே நிறுத்துறவன் உறவுக்காரன். சாதி, மதம் பாக்காம மாம்ஸ்னு கூப்பிடற ஃப்ரண்ட்ஸ் பிரதிபலன் பாக்காம கடைசி வரை கூட இருக்கிற உறவுக்காரன். ஆக ஃப்ரண்ட்ஸ்தான் முக்கியம்''னாரு. நடுவரா சுகி.சிவம் தூள் கிளப்பிட்டாரு.

கவிதா:

புதுப்படங்கள் ட்ரெய்லரைப் போட்டு, ஈஷியா மைசூர்பாக் செஞ்சு காட்டி தலை தீபவாளி மாதிரி அழகா கொண்டாட வெச்சது பொதிகை டி.வி. பிள்ளைங்களை நம்பிப் பாக்கச் சொல்லலாம் இந்த டி.வி.யை. சென்சார் வொர்க் சரியா இருக்கும். சன் டீ.வி.யில நயன்தாராவின் பேட்டியில Personal life, Roll model எதிர்காலம் பற்றி கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் தயங்காமல் நேர்மையாகப் பதில் சொன்னது ரொம்பப் பிடிச்சிருந்தது. சேனல்லயே கலர்ஃபுல்லா ஜனங்களை இழுத்தது சன் டீ.வி.தான்! ஆனாலும் ஒரு சேனலையும் உருப்படியா பார்க்காம திருப்பிக்கிட்டே இருக்கிற புத்தி போகணும்.



ஸ்டெஃபி

அண்ணா நூற்றாண்டு விழா காட்சிகளை கலைஞர் டி.வி.யில் பார்த்தேன். நாம போக முடியாத, பாக்க முடியாததைத் தானே ஃபர்ஸ்ட் பாக்கணும். இதுவரை நான் 'மானாட மயிலாட' நிகழ்ச்சியைப் பார்க்கல. தீபாவளிக்கு அவங்க எல்லாரையும் மீண்டும் ஒருமுறை ஆட வெச்சாங்க. நாமளும் ஆடிப்பார்க்கலாம்னா குடும்பமே ஹாலில் கொட்ட கொட்ட தியேட்டர் மாதிரி உட்கார்ந்திருக்கு. ச்சே... தனியா எனக்குன்னு ஒரு டி.வி. வாங்கணும்.



விமாலட்சுமி :

விஜய் டி.வி.யைத் தவிர நான் எதையும் பார்க்க மாட்டேன். விஜய் டி.வி.யைப் பார்த்துதான் மத்த சில டி.வி.கள் காப்பியடிச்சு, பேரை மாத்தி ப்ரோகிராம் செய்யுது. நடிகர் சிவகுமார் 'கண்ணின் மணிகள்' என்ற தலைப்பில் பேசினாரு. 'காதலிங்க... கல்யாணம் பண்ணிக்கங்க... இரண்டு வருஷம் பொறுத்து பிள்ளை பெத்துக்கங்க... (அதுக்குள்ள ஒத்துவந்தா) தயவு செய்து குழந்தை பெத்துட்டு விவாகரத்து செஞ்சு அதைத் தவிக்க விடாதீங்க. நீங்க சம்பாதிச்சா அப்பா அம்மாவுக்கு ஒரு பங்குன்னு தைரியமா சொல்லுங்க'. அட! அடா! சூப்பர் பேச்சு. அக்மார்க் தீபாவளி அதுதான்.



ஜெயஸ்ரீ:

ஜெயா டீ.வி.யில கு.ஞானசம்பந்தன் பட்டிமன்றம். இன்னொரு டீ.வியில சாலமன் பாப்பையா, இன்னொன்றில் சுகி.சிவம், விஜய் டி.வி.யில் சின்னத்திரை நடிகர் - நடிகையர் பட்டிமன்றம் (கேப்சூல்தான் வேற மருந்து ஒண்ணுதான்) மற்றொன்றில் வியோனி. ஆணைப் பெண் குறை சொல்றது, பெண்ணை ஆண் கிண்டலடிக்கிறதுன்னு சமூகமே குற்ற உணர்ச்சியில் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கோன்னு பரிதாபமா தோணுது. என்ன கொடுமை ஸார் இது!

செய்திச் சித்திரம்: **ஆர்.பாலா**



டாக்டர் **ஏ.வி.ஸ்ரீனிவாசன்**

வியர்க்க விறுவிறுக்க வீட்டுக்குள் நுழைந்தவன் சட்டை பட்டனைக் கழட்டி விட்டுக்கொண்டே சோபாவில் பொத்தென விழுந்தான். டீ.வி. ஓடிக்கொண்டிருந்தது. அதை வெறித்தபடி அப்படியே கிடந்தான்.

''என்னங்க இன்னைக்கு நம்ம அபார்ட்மெண்டுல என்ன நடந்தது தெரியுமா?'' வழக்கம்போல நீட்டி முழக்கிக்கொண்டு ஆரம்பித்தாள் சுமதி.

சுவாரசியமின்றி கடனே என்று கேட்டு முடித்தான்.

''அப்பா எனக்கு ஸ்டார் குடுத்தாங்க எங்க டீச்சர்'' திவ்யா குட்டி ஓடி வந்தாள். ''ம்...வெரி குட்'' என்றபடி சிலையாய் இருந்தவனை முறைத்தாள் சுமதி. ''குழந்தை எவ்வளவு ஆசையா வந்து சொல்லுது. இப்படி ஜடமா இருக்கீங்களே...சரி. டிபனுக்கு என்ன சட்னி அரைக்க? தேங்காயா? வெங்காயமா?''

டீ.வி.யிலிருந்து கண்ணை எடுக்காமல், ''வெங்காயமே அரைச்சுடு'' என்றான்.

சாப்பிட உட்கார்ந்தவன், ''என்ன சுசிலா, தக்காளி சட்னி வெச்சிருப்பேன்னு பார்த்தேன்'' என்றான்.



அரை மணி நேரம்

''உங்ககிட்டே கேட்டுத்தானே செஞ்சேன். நெனைப்பெல்லாம் ஆஃபீஸ்லேயே இருந்தா நான் என்ன பண்ண? இங்க ரெண்டு பேர் உங்களை நம்பி இருக்கோம். ஞாபகம் இருக்கட்டும்.''

எல்லா ஆண்களும் ஏன் இப்படி இருக்கிறார்கள்?

ஓய்வின்றி உழைத்து ஓய்ந்த ஒரு நாளின் இறுதியில், ஆண்களால் உடனே பேச முடியாது. அரை மணி ஓய்வு தேவை. அதற்குப் பிறகுதான் அவனால் வார்த்தைகளை நன்கு உபயோகிக்க முடியும். ஏன்?

லட்சக்கணக்கான ஆண்டுகளாய்த் தொடர்ந்த அவனது மூதாதையரின் செயல்தாக்கம்தான் காரணம். ஆச்சர்யமாக இருக்கிறதா?

பூமி தோன்றி லட்சக்கணக்கான ஆண்டுகளாகிவிட்டன. கற்கால மனிதன் என்ன செய்வான்? வேட்டைக்குச் செல்வான். காட்டிலும் மேட்டிலும் அலைந்து திரிந்து மாமிசத்தைக் கொண்டு இருப்பிடம் சேரும்போது கிட்டத்தட்ட இருட்டி விடும். மழையும் குளிரும் வாட்டி எடுத்தாலும் வேட்டைக்குச் செல்ல வேண்டும். குடும்பத்துக்கு உணவு கொண்டு வர வேண்டும்.

இருப்பிடம் வந்து சேர்ந்தவுடன் அவன் வேலை

அவகாசம் ப்ளீஸ்!

முன் மூளையை பெருமூளை, இடைமூளை என்றும் பின் மூளையை சிறு மூளை, பான்ஸ், முகுளம் என்றும் வல்லுநர்கள் பிரித்திருக்கிறார்கள். இடை மூளையில் தலாமஸ் மற்றும் ஹைறப்போ தசைகள் உள்ளன. இந்த மூளை கபாலத்தின் உள்ளே பத்திரமாக பொக்கிஷமாக உட்கார்ந்து கொண்டிருக் கிறது.

உட்கார்ந்திருக்கிறது என்பதைவிட மிதந்து கொண்டிருக்கிறது என்பதே மிகச் சரி. ஏனென்றால் கபாலத்துடன் மூளை உராய்ந்து விடாமல் இருக்க மூளைத் தண்டுவடத் திரவம் எனும் லூப்ரிகேஷன் திரவம் மூளையைப் பாதுகாக்கிறது.



முடிந்துவிடும். குளிருக்கு இதமாக நெருப்பை மூட்டி அனைத்து ஆண்களும் உட்கார்ந்து விடுவார்கள். என்ன செய் வார்கள்? ஒன்றும் செய்ய மாட் டார்கள். நெருப்பை வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருப்பார் கள். இப்படி சில மணிகள் கழித்த பிறகுதான் அன்றைய பொழுது சந்தித்த சவால், நெருக்கடி, வேட்டையாடிய விதம் இவற்றைப் பகிர்ந்து கொள்வார்கள். அப்போதுதான் இறுக் கம் தளர்ந்து அவர்களால் பேச முடி யும்.

காலம் உருண்டோடி விட்டாலும் மனித மூளையின் அமைப்பில் படிந்து விட்ட பதிவுகள் மாறவில்லை. அன்று வேட் டைக்குப் போனான். இன்று ஆஃபீஸுக்குச் செல்கிறான். வித்தியாசம் அவ்வளவே.

சாப்பிட்டு ஒரு மணி நேரத்தில் மெதுவாக ஆரம்பிப்பான். ''இன்னைக்கு எங்க மேனேஜரை எப்படி டீல் பண்ணினேன் தெரியுமா? ரொம்ப நாளா இம்சை கொடுத்துட்டிருந்த கஸ்டமரை எப்படி ஸ்மூத்தா ஹேண்டில் பண்ணினேன் தெரியுமா?'' என்றெல்லாம் லிஸ்ட் போடுவான்.

''உங்களுக்கென்ன, இப்ப குறட்டை விட்டுருவீங்க. நாளைக்கு டிபன், சாப்பாடு என்னன்னு யோசிச்சிட்டிருக் கேன். குழப்பாதீங்க. கொஞ்சம் பேசாம இருங்க'' என்பாள் மனைவி.

'சரி, பெண்களும்தான் இன்று வேலைக்குப் போகிறார்கள். ஆனால், வீட்டுக்கு வந்ததுமே அவர்களால் மூன்றாவது ஷிஃப்ட்டில் குதித்து முழுகி, மொத்தமாகக் களம் மாற எப்படி முடிகிறது...?' என்கிறீர்களா? பொறுங்கள்... பெண்கள் வேலைக்குப் போக ஆரம்பித்து நூறு-நூற்றைம்பது ஆண்டுகள்தானே இருக்கும்...? மூளையின் பதிவுகள் இன்னும் ஆழப்பட காலம் பிடிக்கும். மேலும், இயற்கையிலேயே அமைந்து விட்ட multi-tasking ஆற்றல் (அதாங்க ஃபோன் பேசிக்கிட்டே, சப்பாத்தி மாவு உருட்டிக்கிட்டு குழந்தைக்கு ஹோம் வொர்க் கத்துத் தர்ற அசகாய சூரத்தனம்) பெண்களின் சூப்பர் ஸ்பெஷாலிட்டி. இந்த பலம் அவங்களுக்குள்ளே எப்படி பரிணாம வளர்ச்சி அடைகிறது? கற்காலத்துக்குத் தான் திரும்பிப் போகணும்... போய் அடுத்த வாரம் பார்ப்போம்...

இயற்கையிலேயே அமைந்துவிட்ட multi-tasking ஆற்றல்தான் பெண்களின் சூப்பர் ஸ்பெஷாலிட்டி.

(அலசுவோம்)

எழுத்தாக்கம்: **லக்ஷ்மி மோகன்**


ஸின்த்தால் சின்ன பேக்
இப்போது ரூ.6-ல்
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
அம்மா சொல்றாங்க இது சருமத்துக்கு நல்லதுன்னு
மேலும் அப்பா சொன்னாங்க அற்புதமான
நறுமணமுள்ளதுன்னு. டாக்டர் ஆன்ட்டி சொன்னாங்க
இதை எல்லோரும் உபயோகிக்கனும்னு. அதனாலதான்
ரூ 6/-ல் நான் பெற்றேன் என்னோட சின்ன ஸிந்தால்.
தலைமுறை தலைமுறையாக உங்கள் ஸ்கின் ஸ்பெஷலிஸ்ட்



கல்கி



2009 நவம்பர் 1
விரோதி ஐப்பசி 15
மலர் : 68
இதழ் : 14

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

நெறிப்படுத்துங்கள் தொண்டு நிறுவனங்களை!


சுனாமி நிவாரண நிதியைக் கையாடல் செய்ததாக ஒரு கிறிஸ்தவ அமைப்பின் முன்னாள் செயலாளர் - பாலீன் சத்தியமூர்த்தி என்ற பெண் - ஆதாரபூர்வமாகக் குற்றம் சாட்டப் பெற்றிருக்கிறார். இதைத் தொடர்ந்து, சமீபத்தில் சிவகாமி என்கிற பெண் 'சமூக சேவகர்' அதே குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கிறார். சிவகாமி கைதாகி யிருக்கிறார். பாலீன் சத்தியமூர்த்தி தலைமறைவாகிவிட்ட போதிலும் அவரது குடும்பத்தினர் கைதாகியுள்ளனர்.

ஏழை - எளிய மக்கள் துன்பத்திலும் வறுமையிலும் வாடி, சகலத்தை யும் இழந்து தவிக்கிற சூழலில், அவர்களுக்கு உதவுவதற்கென்று அளிக்கப்பட்ட நிதியை மோசடி செய்து அபகரிக்க இந்தப் பெண் களுக்கு எப்படி மனம் துணிந்தது என்பதே அதிர்ச்சியாக இருக்கிறது!

இரண்டு சம்பவங்களிலுமே உள்ள இன்னொரு ஒற்றுமை, நிதி யுதவியானது அயல்நாட்டு/சர்வதேசத் தொண்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டது என்பதே. அயல்நாட்டுத் தொண்டு நிறுவனங்களும் அமைப்புகளும் இந்தியாவுக்குப் பெருந்தொகைகளை ஒதுக்கி, அவற்றை இங்குள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் (என்.ஜி.ஓ.க்கள்) மூலம் மக்களுக்குக் கிடைக்கச் செய்து வருகின்றன. இந்தப் பணத்தைக் கொண்டு, அற்புதமாக சேவை வழங்கி, புனர்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றும் என்.ஜி.ஓக்கள் இருக்கவே செய்கின்றன.

ஆனால், கிடைக்கும் அயல்நாட்டுப் பணத்தைக் கொண்டு சொந்த ஆதாயம் தேடிக் கொள்ளலாம் என்கிற நோக்கிலேயே என்.ஜி.ஓ.க்களை ஆரம்பித்து நடத்துவோரும் இருக்கிறார்கள். இத்தகைய என்.ஜி.ஓக்களை,





டெல்லி, உ.பி போன்ற வட மாநிலங்களில், கல்யாணச் சீர்வரிசையாக (வரதட்சணை?) வழங்கும் அவலம்கூட நிலவுவதாகத் தகவல்கள் கிடைக்கின்றன! அதாவது, பெண்ணைப் பெற்றவர்கள், மாப்பிள்ளைக்குச் சீர்வரிசையாக ஒரு சமூகத் தொண்டு நிறுவனத்தைப் பதிவுசெய்து வழங்குவது; அதற்கு அயல்நாட்டு உதவித் தொகையும் கிடைக்க வழிவகை செய்வது!

ஏறத்தாழ ஒரு குடும்ப பிஸினஸ் போலவே என்.ஜி.ஓ. கருதப்படுகிற நிலைமை உருவாகியிருக்கிறது. என்.ஜி.ஓ செயலர் அல்லது தலைவர் என்கிற சமூக அந்தஸ்துடன், கோடி கோடியாக வரும் நிதியிலிருந்து கிள்ளியும் அள்ளியும் அனுபவிக்கும் வாய்ப்பும் கிடைக்கிறது.

அரசின் சமூக நலத்துறை இதையெல்லாம் கண்டும் காணாமல் இருப்பதுதான் பாலின்களுக்கும் சிவகாமிகளுக்கும் தப்பு செய்ய தைரியமும் துணிவும் தருகிறது. இவர்களைப் போன்றவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, விரைவில் உரிய தண்டனை பெற வேண்டும். அது மட்டும் போதாது. இவர்களுக்கு எப்படி இந்தத் துணிவு வந்தது? இதற்கு அரசியல் பின்னணி உண்டா என்பதும் ஆராயப்பட வேண்டும்.

என்.ஜி.ஓக்கள் மீதான அரசின் கண்காணிப்பும் கட்டுப்பாடும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். தவறுகளே நடக்காத ஒரு சூழல் என்பது சாத்தியமற்றதாக இருக்கலாம்; ஆனால், தவறுகள் - குற்றங்கள் மலிந்துள்ள சூழல் என்பது கேவலமானது.

என்.ஜி.ஓக்களை நெறிப்படுத்த ஒரு சான்றோர் குழுவை அரசு உடனே நிறுவி, அதன் அறிக்கையின் அடிப்படையில் நிலைமையைச் சீர் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், 'ஏழைகளின் நாடு இந்தியா' என்கிற சர்வதேச அனுதாபமும் ஆதரவும் 'இது ஏமாற்றுக்காரர்களின் நாடு' என்கிற அருவருப்பாக மாறிப் போகும். அதைவிடத் தலைகுனிவு நமக்கு வேறென்ன இருக்க முடியும்?

தெரியாமத்தான் கேட்கறேன்...



சுருளிப்பட்டி தைலா

பாளையங்கோட்டை அரசு ஆஸ்பத்திரி வளாகத்தில் ஒரே நாளில் 110 பாம்புகள் பிடிபட்டன!

- காப்பீட்டுத் திட்டத்துல அதுங்களுக்கும் இலவச சிகிச்சை உண்டா?

டிக்கெட் வாங்கச் சொல்லி வற்புறுத்திய சென்னை மாநகரப் பேருந்து கண்டக்டருக்குக் கத்திக்குத்து!

- கண்டக்டர்களுக்கு ஏதாச்சும் காப்பீட்டுத் திட்டம் தனியா கொண்டு வரலாமா கலைஞரே?

காலங்கள்கூட - முன்னே
இவன்போல ஒருவனைத் தோற்றாததால்
இவனே ஆதி என்பேன்!

இனிவரும் காலமும் இவனுக்குப்
பின்னும்
எவனும் இவன் போலத்
தோற்றற்கியலாததால்
இவனே அந்தம் என்பேன்.

- கருணாநிதியைப் போற்றி இளையராஜா இயற்றிய பாடலின் சரணம்.

- இது என்ன சரணமா, சரணாகதியா இசைஞானியாரே?

இருபது கோடி கொடுத்தால் துணை வேந்தர் பதவி!

- விதைக்கறது இரு பதுன்னா அறுவடை எவ்வளவு?

கோழி வியாபாரியை மிரட்டி 500 ரூபாய் தீபாவளி இனாம் வாங்கிய திருச்சி மாநகராட்சி அதிகாரி கைது!

- கோழி மிதிச்சு குஞ்சு சேதமாயிடாதுன்னு நம்பி ஏமாந்துட்டாரா?

''**செ**ன்னைப் பல்கலையில் அண்ணா சிந்தனை, பெரியார் சிந்தனை, கலைஞர் சிந்தனை படிப்புகள் அறிமுகப்படுத்தத் திட்டம்.''

- துணைவேந்தர் திருவாசகம்

அடுத்த வருஷம் புது சப்ஜெக்ட் ஸ்டாலின் சிந்தனையா? அழகிரி சிந்தனையா? இல்லாட்டி கனிமொழி சிந்தனையா? ○

• த.கி.நீலகண்டன் •



'மெய்'யில் உதித்த மணிகள்!

ஆய கலைகள் அறுபத்து நான்கில் 'இரத்தினப் பரீட்சை' என்ற கலையும் ஒன்று. நவமணிகளில் குற்றம் குறைவின்றி சுத்தமானதாக இருப்பவை அணிபவர்களுக்கு நன்மை செய்யும் என்றும், தோஷமுள்ள மணிகள் தீமையை விளைவிக்கும் என்றும் ஆழமான நம்பிக்கை மக்களிடத்தில் உண்டு.

இந்த இரத்தினப் பரிசோதனையைப் பற்றியும் தமிழ் இலக்கியங்களில் ஏராளமான செய்திகள் உண்டு. சிலப்பதிகாரத்தில் கோவலன் மதுரை நகரின் வீதிகளில் நடந்து சென்றபோது ''வகைதெறி மாக்கள் தொகை பெற்று ஓங்கிப் பகை தெறல் அறியாப் பயங்கெழு வீதி''யாக இரத்தினக் கடைத் தெரு விளங்கியதைப் பதிவு செய்கிறார் இளங்கோ அடிகள். மதுரை மாநகரம் நவரத்தினங்களுக்குப் பெயர் போனதாக இருந்திருக்க வேண்டும்!

பின்னாளில் மதுரை நகரில் சொக்கநாதப் பெருமான் ஆடிய திருவிளையாடல்களைப் பாட வந்த பரஞ்சோதி முனிவர் இந்தக் குறிப்பைப் பயன்படுத்தி, மிக விரிவான பல செய்திகளை நமக்குத் தருகிறார்.

வீரபாண்டியன் என்னும் பாண்டிய மன்னன் காட்டில் வேட்டையாடச் சென்றபோது ஒரு புலியால் கொல்லப்பட்டான். இதுதான் சந்தர்ப்பம் என்று அவனைச் சார்ந்த சிலர் சூழ்ச்சி செய்து அவன் கஜானா முழுவதையும் சூறையாடி விட்டனாரம். அரச மகுடமும் களவாடப்பட்டு விட்டது. இளவரசனுக்கு மகுடாபிஷேகம் செய்ய, புதிய மணிமகுடம் செய்வதற்கான மணிகளை இறைவனே வணிகனாக வந்து, விலை மதிப்பற்ற நவரத்தினங்களைத் தந்து இளவரசனுக்கு அபிஷேகப் பாண்டியன் என்ற பட்டத்தையும் சூட்டி வாழ்த்தி மறைந்தானாம்! மாணிக்கம் விற்க வந்த எம்பெருமான் நவமணிகளின் தோற்றம், தன்மை, நிறம், குணம், தோஷமற்ற மணிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை, அவற்றை அணி

வதன் பலன் இவற்றைப் பற்றி விரிவாக எடுத்துரைத்ததாகப் பாடுகிறார் ஆசிரியர்.

வலன் என்ற அசுரன் அழியா வரம் பெற வேண்டி சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் செய்தானாம். பெருமானும் அவன் தவத்தைக் கண்டு மனமிரங்கி, "உன் உடல் அழிந்தாலும் அதிலிருந்து அழியாப் பொருளான நவமணிகள் தோன்றும்" என்று வரமளித்தானாம். அதன்படியே மாணிக்கம், முத்து, வைரம், பவழம், நீலம், வைடூரியம், மரகதம், கோமேதகம், புஷ்பராகம் என்கிற நவரத்தினங்கள் தோன்றினவாம்!

மாணிக்கம் நான்கு வகைப்படும். சிவப்பு நிறத்தின் ஒன்பது விதமான சாயல்களில் இது கிடைக்குமாம்! மாதுளை மலர், தாமரை மலர், செங்குவளை மலர், மாதுளை முத்துக்கள், நெருப்பு, மின்மினிப் பூச்சி, இந்திர கோபம் என்னும் பூச்சி, நாரத்தம் பழம், விளக்குச்சுடர் ஆகிய ஒன்பது விதமான செவ்வண்ணச் சாயல்களைச் (shades) சொல்கிறார். கல்வி, செல்வம், ஆட்சி, அதிகாரம், புகழ், நோயின்மை ஆகியவை மாணிக்கத்தை அணிவதன் பலன். நவமணிகளில் மிகவும் அதிக விலை மதிப்புள்ளது மாணிக்கமே! சங்கு, மேகம், மூங்கில், பாம்பு, பன்றி, மீன், யானை, சிங்கம் ஆகியவற்றில் கூட முத்து விளைகிறதாம்! சங்கு, சிப்பியில் விளையும் முத்து வெள்ளை நிறத்திலும், மேகம் ஈன்ற முத்து செந்நிறத்திலும், மூங்கில் ஈன்ற முத்து மழைத் துளி போன்ற நிறத்திலும், பாம்பு ஈன்ற முத்து நீல நிறத்திலும் இருக்குமாம். சூரியன், மகாவிஷ்ணு, வருணன், வாயு, எமன், இந்திரன் ஆகிய தெய்வங்கள் முத்துக்குரிய அதிதேவதைகள்!


கருடப் பச்சை, பிதுகம், சதோடம், மந்ததோடம் ஆகியவை மரகதத்தின் வகைகள். அருகம்புல்லின் இதழ், நெற்பயிரின் பச்சை, பச்சைக்கிளி, துளசி, தாமரை இலை, எலுமிச்சை இலை, அரளி இலை, கருங்குவளை மலர், மயிலிறகு ஆகிய பச்சை நிறத்தின் பல்வேறு சாயல்களில் (shades) மரகதம் கிடைக்கிறதாம்! மரகதம் நீண்ட ஆயுளைத் தரும் மணியாம்!

இந்திர நீலம், மாநீலம் என்று இரண்டு வகைப்படும் நீலமணி. இதில் இந்திர நீலம் என்னும் மணியை பசும்பால் நிறைந்த குடத்தில் போட்டால் பால் முழுவதும் நீலமாய் ஒளிருமாம்! கிடைத்தற்கு அரிய மணி வகை இது! நெய்த்துளி, தேன் துளி, பசுவின் கோமயம் ஆகிய வண்ணச் சாயல்கள் உடையது கோமேதகம். பாவம் தொலைக்கும் மணி கோமேதகம். பகைவரை அழிக்கும் மணி புஷ்பராகம். வைடூர்யம், பூனைக் கண்ணைப் போல இருக்கும். கிளியின் மூக்கு, முருக்க மலர், செவ்வரத்த மலர், கோவைப்பழம் ஆகிய இளஞ்சிவப்பு நிறத்தின் சாயல்கள் உடையது பவழம். குற்றமற்ற பவழத்தை அணியும் பெண்களுக்கு மகப்பேறு வாய்க்குமாம்!

சுத்தமான இடத்தில், மணையை வைத்து அதன் மேல் வெள்ளைத் துணியை விரித்து, மாணிக்கத்தை மத்தியில் வைத்து மற்ற எட்டு மணிகளையும் அதற்குரிய திக்கில் வைத்து நவகிரகங்களையும் இந்த ஒன்பது மணிகளில் ஆவாஹனம் செய்து, ஒன்பது விதமான மலர்களால் பூஜை செய்து பின்னரே இந்த நவரத்தினங்களை அணிகலனாகச் செய்து அணிய வேண்டுமாம்!

அடேயப்பா! எத்தனை சுவாரஸ்யமான தகவல்கள்! ஒரே ஒரு சிந்தனை! துர்மரணம் அடைந்த வீரபாண்டியன் அணிந்திருந்த மணிமகுடத்தில் அவன் இராசிக்கேற்ற மணிகள் இல்லாமல் இருந்திருக்கலாம்! அதனால் அவனுக்கு அந்த முடிவு நேர்ந்திருக்கலாம் என்று நினைப்பவர்கள் உண்டு. ஆனால் அபிஷேகப் பாண்டியனுக்கு இறைவன் அளித்தவை இராசிக் கற்கள் மட்டுமல்ல; ஆசிக்கற்களும்கூட!

(நிறைந்தது)


இறைவனே வணிகனாக வந்து
விலைமதிப்பற்ற ரத்தினங்களைத்
தந்தான்


சொர்ணபாரதி
ஓவியம் : மாயவன்

கடாட்சம்

பள்ளிக்கோடம் படிக்கும்போது
பத்து காசு தருவார் அப்பா
தினமும் வாங்கித் திங்க

வெல்லம், பொட்டுக்கடல,
இல்லயின்னா மரவள்ளி, சக்கரவள்ளி,
பள்ளி வரைக்கும் தானும்
எனக்கும் ஜெகதீசனுக்கும்

நல்லாப் படிச்சாலும்
நல்ல துணி இருக்காது போட்டுக்க
மாதா கோயில் சாமியார்கிட்ட போய்
வெளிநாட்டு சட்டை, கால்சராய்க்கு
வரிசையில் நிப்பேன்
அவரு இந்து பையன்னு தெரியாம
கன்னத்தில அறைஞ்சிட்டாரு
'ஏண்டா பையின் கிளாசுக்கு வரல?'ன்னு
அப்புறம் தெரிஞ்சதும்
கையைப் பிடிச்சிக்கிட்டு மன்னிப்பு கேட்டாரு.
ரெண்டு சட்டையா கொடுத்து, கூடவே
வெளிநாட்டு பிஸ்கட் பாக்கட், சீஸ் டின்னும் தந்தாரு

அத வெளில அங்கேயே வித்துப்புட்டு, அம்மாவோட
அழுதுகிட்டே மோர்மார்க்கெட் போய்
பழைய புத்தகம் வாங்கிப் படிச்சேன்.
எட்டாம் வகுப்பு லீவுல டீக்கடையில வேலை பாத்தேன்.
பதினஞ்சு ரூவாக்கு துணி வாங்கி சட்டை தைச்சு
கையை மடக்கிவுட்டு காலர்ல கர்ச்சிப் வைச்சு
எனக்கே பெருமையா இருக்கும்.

பள்ளில மொத மார்க் வாங்கி
எச்செம்கிட்ட நின்னப்ப 'ஆறு வருஷம் கழிச்சு உன்ன
டாக்டராப் பாக்கணும்டா'ன்னாரு

பியுசில ரெக்காடு நோட்டு வாங்கக் காசில்லாம
புத்தகத்தெல்லா கடையில போட்டுப்புட்டு
கூட்ஸ் ஷெட்ல கரியள்ளப் போய்ட்டேன்
முந்தாநேத்து, 'புத்தகம் வாங்கக் காசுகேட்டதுக்கு
அப்பன் அடிச்சிட்டான்'னு அழுத முனுசாமி மகனுக்குப்
புத்தகம் வாங்கிக் குடுத்தப்ப அவன் மொகத்துல பாத்த
சிரிப்பு
நானே பட்டம் வாங்கினமாதிரி இருந்துச்சு!

பொதுவாக நடிகர் - நடிகைகளைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவர்களிடம் அப்பாயிண்மெண்ட் வாங்கி விட்டுப் போய்ப் பார்ப்பதுதான் சரியான முறை. ஆனால், இந்த முறையில் அவர்கள் எளிதில் கிடைப்பதில்லை.

ஃபோன் செய்யும்போதெல்லாம் 'சார் ஊரில் இல்லை'; 'நாளைக்குப் பேசுங்க'; 'அடுத்த வாரம் பேசுங்க' போன்ற பதிலே வரும். இதெல்லாம் நமக்குச் சரிப்பட்டு வராது. எனவே சினிமா ஸ்டுடியோக் களுக்குப் போய் விடுவேன். அங்கு எந்த நட்சத்திரம் இருந்தாலும் பேசி, செய்தி சேகரித்துக் கொண்டு திரும்புவேன். இதுதான் என் போன்ற சுதந்திரப் பத்திரிகையாளனுக்குச் சௌகர்யமானது.

நேற்றைய செய்தியாளர்கள் பெரும் பாலும் இப்படித்தான் ஸ்டுடியோ ரவுண்ட்ஸ் செய்து கொண்டிருப்பார்கள். வாகினி, விஜயா கார்டன், ஏவி.எம். செந்தில், அருணாசலம், கற்பகம், சாரதா என, அன்று பல படப்பிடிப்புத்தளங்கள் இருந்தன. (தற்போது மிஞ்சி இருப்பது ஏவி.எம். மட்டுமே)

இதிலும் ஒரு சங்கடம் உண்டு. அதாவது ஒரு படப்பிடிப்பில் ஹீரோ, ஹீரோயின் என இரு பிரபலங்களும் ஒரே இடத்தில் இருந்தால் நம் வேலை ஈஸி. முதலில் யாரிடம் பேசுவது என்பதில்தான் கவனம் அவசியம்.

''முதலில் ஹீரோயினிடம் பேசி, பேட்டி எடுத்துக் கொண்டு பின்னர் ஹீரோ விடம் சென்றால் ஈகோ இடிக்கும். 'நாளைக்கு வாங்க பேசுவோம்' என்று தொங்கலில் விட்டுவிடுவார். அதனாலே முதலில் ஹீரோவிடம் சென்று பேசிவிட்டு வருவதுதான் நல்லது'' - இது சீனியர் சினிமா நிருபர் எனக்குச் சொன்ன தொழில் ரகசியம்.

மாதமிருமுறை இதழ் ஒன்றில் வாசகர்களின் கேள்விகளுக்கு சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் பதிலளிப்பதாக இருந் தது. ''முந்நூறுக்கும் மேற்பட்ட போஸ்ட் கார்டுகள் வந்திருக்கின்றன. உங்களிடம்



சபீதா ஜோசப்

பதில் வாங்க வேண்டும்'' என்று அவரிடம் ஃபோனில் கேட்டபோது.

''நாளைக்குக் கோவை எக்ஸ்பிரஸ்ஸில் மௌனம் ரவி பி.ஆர்.ஓ. கோபிசெட்டிப் பாளையம் வருகிறார். அவருடனே நீங்களும் வந்துடுங்க'' என்றார் சரத்குமார்.

மறுநாள் கோபியிலிருந்தோம். 'நாட்டாமை' படப்பிடிப்பில் அண்ணன் சரத் குமாருக்கான ஒல்டு கெட்டப் மேக்கப் நடந்து கொண்டிருந்தது. அன்றைக்குப் பாடல் காட்சி எடுப்பதால் ஆல் ஆர்ட்டிஸ்ட்ஸ் (குஷ்பூ, மீனா, சங்கவி, செந்தில்) இருந்தனர். ஆளுக்கொரு பேட்டி எடுத்து விடலாம் என சில

முத்தத்தைத் துடைத்த மீனா!

கேள்விகளைத் தயார் செய்திருந்தேன். பெரும்பாலான நட்சத்திரங்கள் இன்டோரைவிட அவுட்டோரில் கொஞ்சம் ரிலாக்ஸாக இருப்பார்கள்.

மேக்கப் செய்து கொண்டே நான் கேட்ட வாசகர்களின் கேள்விகளுக்கு சரத் பதிலளித்தார்.

அப்போது மீனாவிடம் யாரோ, 'இன்ன... பத்திரிகையிலிருந்து பேட்டியெடுக்க நிருபர் வந்திருக்கிறார்' என்ற தகவலைச் சொல்ல, அவர் என்னிடம் சண்டை போடத் தயாராக இருப்பது

3 இவர்கள் இப்படித்தாங்க..!

எனக்குத் தெரியாது.

கேள்வி பதிலுக்கு நடுவே சரத்குமார் ஷாட்டில் நடிக்கப் போனபோது மீனாவும் அவரது தாயாரும் வந்தார்கள். எனக்கு ஏக சந்தோஷம். இங்கேயே மீனா பேட்டியையும் பெற்று விடலாம் என்று.

வந்தவர்கள் என்னைப் பார்த்து, ''நீங்க அந்த... பத்திரிகையா?'' என்று கேட்டார்கள். முகத்தில் டென்ஷன் தெரிந்தது.

''ஆமா! அதுலேயும் நான் எழுதுறேன்''

''உங்க மனசுல என்ன நெனைச்சிருக்கீங்க... கையில பேனா இருந்தால் என்ன வேணும்னாலும் எழுதுவீங்களா... இதெல்லாம் சரியில்லை'' என்றார் மீனாவின் அம்மா கோபமாக.

''நீங்க என்ன சொல்றீங்க... எனக்குப் புரியலை...''

''என்ன புரியலை, 'மீனாவின் கன்னத்தில் குஷ்பூ முத்தம் கொடுத்தார். உடனே மீனாவின் அம்மா குஷ்பூ முத்தம் கொடுத்த இடத்தை கர்சீப்பால் துடைத்து விட்டு, முணுமுணுத்தார்'னு எழுதி, எங்களுக்கு நடுவில் சிண்டு முடிஞ்சு விட்டுட்டு, இப்ப புரியலைன்னா சொல்றீங்க...?'' - மீனாவின் அம்மா சத்தமாய்க் கேட்டார். என்னை முறைத்துக் கொண்டிருந்த மீனாவின் பெரிய கண்களில் கோபத் தீ.

''ஓ... அந்தத் துணுக்கு பத்தி சொல்றீங்களா...?''

''ஏன் அது நீங்க எழுதலேன்னு சொல்லப்போறீங்களா?'' - மீனா கேட்டார்.

''உண்மையாகவே அதை நான் எழுதலேங்க, ஒரு பத்திரிகைன்னா அதில் நாலு நிருபர்கள் இருப்பார்கள். அவர்கள் கொடுக்கிற தகவல் உண்மையாக இருக்கும்னு அவர்களை நம்பி பத்திரிகை நிறுவனம் வெளியிடும். இதில் யாரோ ஒரு

"கையில பேனா இருந்தால் என்ன வேணும்னாலும் எழுதுவீங்களா..? இதெல்லாம் சரியில்லை"

நிருபர் தனிப்பட்ட கோபத்தில் ஏதாவது எழுதிவிட்டால், அதனால் அந்தப் பத்திரிகை மீதும், அந்தப் பத்திரிகை பேர் சொல்லி வருகிறவர்கள் மீதும் சினிமாக் காரங்க கோபப்படறது சகஜமாகிவிட்டது. தயவு செய்து நம்புங்க அதை நான் எழுதலை.''

''அப்போ வேறே யார் எழுதினாங்க?''

''ஸாரி... அது எனக்குத் தெரியாது, ஆசிரியருக்குத்தான் தெரியும்...''- என்றேன்.

''மம்மி நீங்க வாங்க, இவர்கிட்ட இனி பேச வேண்டாம்'' என்று கோபமாக, வேகமாக கழுத்தை ஒரு பக்கம் வெட்டிய படி மீனா அம்மாவுடன் போனார்.

சற்று தூரத்தில் நின்று இந்த வாக்கு வாதத்தைக் கவனித்த குஷ்பூ என்னை வெறுப்பாய்ப் பார்த்துவிட்டு நகர்ந்தார்.

'என்னடா இது, யாரோ எழுதிய துணுக்குச் செய்திக்கு நாம திட்டு வாங்க வேண்டியிருக்கே' என்ற வருத்தம் ஒரு பக்கம். ஒரு மாதம் போன பிறகுதான் அவர்களைப் பேட்டிக்கு அணுக முடியும் என்ற சோகமும் அதில் கலந்திருந்தது. அன் றைக்கு இந்த விஷயத்தை சரத்குமாரும் விசாரித்தார்.

பின்னாளில் நான் அதே மீனாவின் நல்ல நண்பனாகிவிட்டேன். உபயம்: கார்த்திக்.

அந்த நிகழ்ச்சிக்குப் பல படப்பிடிப்பு களில் மீனாவைப் பார்த்தபோதும் பேச வில்லை. ஊட்டியில் மலை உச்சியில் 'மீனா பொண்ணு' என்ற பாடலைப் படமாக்கும் போதும் அவர் கண்டு கொள்ளவில்லை.

சில மாதங்களுக்குப் பின் ஒரு பட ஷூட்டிங்கில் ஏற்பாடாகியிருந்த பிரஸ் மீட்டில், ''நோ...நோ... ஹி இஸ் வெரி நைஸ் மேன். இவர் அப்படியெல்லாம் எழுத மாட்டார். மை பெஸ்ட்ஃபிரண்ட்'' என்று கார்த்திக் என்னைப் பற்றி பலமாக சொல்ல, மீனா முகத்தில் சிநேகமாய் ஒரு புதுப்புன்னகை தோன்றியது.

கார்த்திக் முன்னிலையில் இருவரும் கை குலுக்கிக் கொண்டோம். அன்று முதல் இன்று வரை நான் மீனாவின் நல்ல நண்பன்!

(அடுத்த வாரம்: நடிகை ரம்பா)

துக்கடா நியூஸ்



திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர் வட்டத்தில் ஜவ்வாது மலை உள்ளது. இங்கே தான் பீமன் நீர்வீழ்ச்சி இருக்கிறது. பீமன் குளித்துவிட்டு போனதாக கூறப்படும் இவ்விடம் குளுமைமிக்க சுற்றுலா தளம்.

- ஆர்.முத்துமாணிக்கம், கீழ்பென்னாத்தூர்

"சாமி தலையில் இருந்த தங்கக் கிரீடத்தை திருடினியா?"

"ஆமாம் சார்... சாமிக்கு மொட்டைப் போடறதா வேண்டிக்கிட்டேன்!"

- கல்தானா



"அவர் அடிக்கடி தூக்கத்தில் நடக் கிறார் டாக்டர்!"

"பகல் தூக்கத்திலா? இரவு தூக் கத்திலா?"

- எஸ்.வெங்கடகிருஷ்ணன்



சாமிக்கு மொட்டை!



"ஆந்திரா, கர்நாடகாவில் வெள்ளம்... அமெரிக்காவில் சுனாமி..."

"புரியுது... புரியுது... என்கிட்டே கை மாற்று வாங்கின பணத்தை அடுத்த மாசம் கொடு போதும்!"

- ஜி.சுந்தரராஜன்



"மேடம் ஒரே ஒரு கேள்வி..."

"என் 'மேரேஜ்' பத்தி மட்டும் கேட்கக் கூடாது!"

"சரி மேடம், எப்போ உங்க 'டைவர்ஸ்'?"

- வெ.சீதாராமன்



அக்னி

'பஞ்சாயத்துலே குத்தவாளியா தலை தொங்கிப் போய் நிக்கற மகனோட பேரப் பயலுக்கு என்ன தீர்ப்பு கிடைக்குமோ?' என்பதில் எல்லாரைவிட கூடுதலான ஆவலோடு காத்துக்கிடக்கிறாள், அங்காளம்மாள்.

''எடுக்காத எடுப்பை எடுத்துட்டான், மகனோட பேரன். தேவையில்லாத வேலைதான். என்ன செய்ய? செஞ்சுட்டான். அதுக்காக தண்டிச்சிர்றதா?''

அங்காளம்மாளின் மன நினைவுகள், வாய் முணுமுணுப்புகளாக வெளிக் கசிகின்றன. மகனும், மருமகளும் பதறித் தவித்துப் புலம்புகின்றனர். அவர்களின் மகனும் மருமகளும் 'கோ,குலை' யென்று கதறியழுகின்றனர்.

''மணிக் கொத்து மாதிரி... ஒத்தைப் புள்ளை பெத்து வளர்த்தோம்... அதையும் ஊர்ப்பஞ்சாயத்துலே தொலைச்சிரணுமா? அட, ஆயிரங்கண்ணுடையாளே... அங்காள பரமேஸ்வரியம்மா... நீதான் எங்க

நட்சத்திர சிறுகதை 3

வாசம்!

மேலாண்மை பொன்னுச்சாமி

புள்ளையைக் காப்பாத்தனும்மா...''

அவநம்பிக்கையும் விரக்தியுமாக அழுது அங்கலாய்க்கிற பேரனின் பெஞ்சாதியின் கண்ணீரைப் பார்க்கிற அங்காளம்மாள்.

''என்னத்துக்கு அழுகுறே? கண்ணைத் தொடைச்சுக்கோ. ஓம்புள்ளைக்கு நல்லது தான் நடக்கும்!'' தைர்யம் சொல்கிற அங்காளம்மாள்.

குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருக்கிறாள், அங்காளம்மாள். தொண்ணூறைந்துக்கும் மேலே வயது. எப்போதோ உதிர்ந்திருக்க வேண்டிய நெற்று. இன்னும் பூமியில் தொங்கி உட்கார்ந்திருக்கிறது, அழுகின பழமாக.

குத்துக்கால் உயரத்துக்குள் மொத்த உடம்பும் துவண்டு சரிந்து கிடக்கிறது. கழுத்தில் நிற்கமாட்டாமல் ஆடுகிற தலை. சதையெல்லாம் கால முதுமையில் கரைந்து போக... ஈரத் துணியாக சுருக்கங்கள் நிறைந்த தொலி, ஒட்டிக்கிடக்கிறது. கண்ணில், குன்றாத ஒளி. நடுங்கித் தொங்குகிற உதடுகளுக்குள், சிதைவுபடாத வரிசைப் பற்கள். இப்பவும், பட்டாணியை கொண்டா, கொண்டா என்கும். 'கடீர், கடீ'ரென கடித்து மெல்லும். பாம்படமில்லாத வெறும் காது, கயிறாகத் தொங்குகிறது.

''பஞ்சாயத்து பண்ணுற நாட்டாமை யாரு...?''

தலையாட்டம். கையாட்டம். கழுத்தாட்டம். கேட்கிற கேள்வியில் குரலும் நடுங்கியாடுகிறது.

''ரெங்கசாமிதானா?'' அவளது தொடர் கேள்வி.

நிதானமும், சீர்குலையாத தைரியமுமாகக் கேள்வி கேட்கிற அவளிடம் யாரும் பேசத் தயாரில்லை. பதற்றமும் திகிலுமாகப் பேயறைந்து நிற்கின்றனர். 'வரப் போகிற தண்டனை எத்தனை கடுமையாக இருக்குமோ' என்ற கிலி. பீதிபடிந்த கண்ணீரும் கதறலுமாக அவர்கள்.

அங்காளம்மாளின் நிதானமும் தைரியமும் காலச் சூழலுக்குப் பொருந்தாமல் தனித்து நிற்கின்றன, தண்ணீரில் எண்ணெயாக. 'கெழட்டுமுண்டம்... நெலைமை தெரியாம கொஞ்சிக் குலாவுது' என்று வெறுப்பாகப் பார்க்கிற அவர்கள்.

அங்காளம்மாவுக்குள் மேளச்சத்தம். தவிலின் முரட்டதிர்வுகள். உறுமி மேளத்தின் உறுமல்கள், நெஞ்சுக்குள் ஆழத்தில் அறுக்கின்றன... பின்னோக்கி பின்னோக்கி... காலப் பெருவெள்ளம் பாய்ந்து பெருக்கெடுத்தோடி வந்த வாழ்க்கை நதியின் பழைய கதியில் நினைவு...

அங்காளத்துக்கு அப்ப வயது முப்பதுக்கும் மேல். மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குள் காங்கிரஸ் பார்ட்டி லீடர் வைத்தியநாத அய்யர் தலைமையில் நாடார்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் ஆலயப்பிரவேசம் பண்ணி சாமி கும்பிட்டது, ஒரே பரபரப்பாகப் பேசப்பட்ட காலம். எங்கு திரும்பினாலும் இதுதான் பேச்சு.



''அப்பவும் அய்யருக்கு எதுக்கு இம்புட்டுச் சேட்டை?''

''எல்லாம்... முத்துராமலிங்கத் தேவரு குடுத்த தைரியம். அவரு பக்கபலமா இருக்குற தெம்பு.''

''சாமியைப் பாக்கப் போய் வெட்டுப் பட்டுச் செத்த மூக்கநாடாரு கதையெல்லாம் நடந்த மதுரையிலே... இப்ப எல்லாத் தாழ்ந்த சாதிகளும் சாமி முன்னாலே...''

''கலிகாலமப்பா... காலம் செய்ற கூத்து.''

''சுயராஜ்யம் மட்டும் கேட்டுக்கிட்டிருந்த காங்கிரஸ் பார்ட்டிக்கு இதெல்லாம் என்னத்துக்கு?''

''சுயராஜ்யம் கேக்குறதுக்கு எல்லா சாதி சனமும் தங்களோட வரணும்லே? அதுக்குத்தான் இந்தச் சமூகச் சீர்திருத்தம்.''

''இருந்தாலும்... இது கடவுளுக்குப் பொறுக்காது.''

எல்லா ஊர்களிலும் இதே பேச்சு. ஆதரித்தும் எதிர்த்துமாக பல்வேறு தொனியிலான பேச்சுகள். நாடுநகரமெல்லாம் இதன் அதிர்வுகள். சிறிய சிறிய அளவிலான ஆலயப்பிரவேசங்கள். சிறு தெய்வ சன்னிதிகளுக்குள்ளும் துணிச்சலான கலவர நிலவரத்துடன் பிரவேசிப்புகள்.

இந்த ஊருக்குள்ளும் அதன் அதிர்வுகள். அதன் மங்கலான சத்தங்கள். ரெங்கசாமி அப்ப முழுத்த இளவட்டம். இருபத்திரண்டு வயது. துடிப்பான காங்கிரஸ்காரன். ரெங்கசாமி நாடார். அவனுடன் கூடச் சேர்ந்த காங்கிரஸ் பார்ட்டி நண்பர்கள், பொன்னையா பிள்ளையும்... பெருமாள்சாமி நாயக்கரும்...

ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு ஊர்க்கிணறு. வட்டக்கிணறு. நாயக்கர், தேவர், நாடார், மூன்று சாதியினருக்கும் கிணறுகள். வட்டச்சுவர், உருளை மாட்டப்பட்டிருக்கும். கயிறும் வாளியும் போட்டு 'கீச்சி, மூச்சி' என்று இழுப்பார்கள்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு கிணறுகள் கிடையாது. ஊரை ஒட்டியுள்ள விவசாயக் கிணறுகளின் வாய்க்கால் தண்ணீர்தான் அவர்களுக்கு. அதுவும் கெஞ்சிக் கூத்தாடி 'ஐயா, சாமி' என்று கூழைக் கும்பிடு போட்டுத்தான் தண்ணீர் மோக்க முடியும்.

ரெங்கசாமி வந்து அங்காளம் வாசலில் நின்றான்.

''என்ன சாமி...?''

''நானும், பெருமாள்சாமி நாயக்கரும், பொன்னையா பிள்ளையும் கூடி, ஒரு முடிவுக்கு வந்துருக்கோம்.''

''என்னன்னு?''

''எங்க காங்கிரஸ் பார்ட்டி தலைமையிலே நாயக்கமாரு கெணத்துலே நீ போயி தண்ணி இறைச்சு எடுக்கணும்...''

''நானா? எங்க சாதியாளுக அந்தக் கிணத்துகிட்டேயாச்சும் நெருங்க முடியுமா? நெருங்கிட்டு, உருப்படியாத் திரும்பிர முடியுமா?''

''உங்க சாதியிலேயே நீதான் துணிச்சலானவனு நாங்க

அங்காளத்தின் நெஞ்சம் பகீரென்றது. பதற்றத்தில் ஈரல் குலை நடுங்கியது. கண்ணில் அச்ச வெலவெலப்பு.

''என்னை வுட்ருங்க சாமி...''

ரெங்கசாமி சிலிர்ப்போடு கொந்தளித்தான்.

''சாமி, கீமிங்கிறதை மொதல்லே நிறுத்து. மனுசனுக்கு மான மரியாதை வேணும். சூடு சுரணை வேணும். ஈனத்தனமான சாதி, என்னத்துக்கு? ஒசத்தி,

தாழ்த்திங்குற ஏற்றத்தாழ்வு என்னத்துக்கு? எல்லாரும் ஒண்ணுதான். சரிநிகர் சமானம் தான்... இதான் காந்தியோட கொள்கை.''

''ஒங்க கொள்கையெல்லாம் உங்க ளோட இருக்கட்டும். பெரிய சாதியாளுக பகையிலே என்னை இழுத்துத் தள்ளாதீக... பட்டிக்காடு. இங்க... நாங்க தாங்க மாட்டோம்.''

''உங்க சாதியிலேயே நீதான் துணிச்சலானவனு நாங்க ஒன்னை முடிவு பண்ணுனோம். நீயே இப்படிச் சொன்னா... எப்படி? நாங்க பக்க பலமா இருக்கோம். எங்க காங்கிரஸ் பார்ட்டி இருக்கு. மண்டலக் காங்கிரஸ் அக்ராசனர் வரப் போறாரு...''



ன்னை முடிவு பண்ணுனோம். நீயே இப்படிச் சொன்னா... எப்படி?"

ரொம்ப நேரம் பேசினான். துடிப்பான லட்சியப் பற்றுறுதியோடு, எச்சில் தெறிக்க, அனல் பறக்கப் பேசினான். கரைப்பார் கரைத்தால், கரையாததும் கரைந்துவிடுமே. எறும்பு ஊரஊர... கல்லும் தேயுமே. அங்காளமும் சம்மதித்தான், ஆகக் கடைசியில்.

''தாழ்ந்த சாதிப் பொண்ணை நாயக்க மாரு கெணத்துலே தண்ணியெடுக்க வைக்கப்போகுதாம், காங்கிரஸ் பார்ட்டி. பெருமாள்சாமி நாயக்கரே இதுக்கு பக்கபலமாம்...''

நாயக்கமார் ஆட்கள் கொந்தளித்தார்கள். அரிவாள், கம்புகள் தயாரித்தார்கள்.

''இன்னிக்கு நாயக்கமார் கெணறு. விட்டுட்டா... நாளை நம்ம கெணறு'' என்ற கொந்தளிப்பில் பிற சாதியினரும் கொதித்தனர்.

ஊரின் தட்பவெப்பமே மாறிற்று. 'வெட்டணும், குத்தணும், வேல்கம்பைச் சொருகணும்' என்று வீரச் சவடால்கள். வெப்ப அலைகளின் வேனல் தகிப்புகள்.

குறித்த நாளில்...

ஜில்லா காங்கிரஸ் பிரமுகர்கள் வில்வண்டிகளில் வந்து இறங்கினார்கள். கொடியும் நடையுமாக ஏகப்பட்ட தலைக் குல்லாக்கள். எல்லாரும் சேரியில் வந்து சேர்ந்தனர்.

சமபந்தி போஜனத்துக்கு பொன்னையா பிள்ளை வீட்டில் தடபுடலாக சமையல் நடந்து கொண்டிருந்தது.

ஆள்மாறி ஆளாக நாயக்கமார்கள் அங்காளத்தை வந்து பார்த்தனர். ''தொலைச்சிருவோம்...'', ''தொலியை உரிச்சிருவோம்'' என்று நெருப்புச் சீறல்கள். மிரட்டல் வார்த்தைகளின் அரிவாள் வீச்சுகள்.

ஊர்த்திருவிழாவுக்கு வருகிற மாதிரி மேளக்கோஷ்டி வந்து சேர்ந்தது. ஒயிலாட்டக் கோஷ்டியும் வந்தது.

ஊரே... 'ஜேஜே' என்றிருந்தது. கோலாகலமும், கொந்தளிப்புமாக... குதூகலமும் கொதிப்புமாக... சந்தோஷ உற்சாகக்

களிதுள்ளலும், சண்டை மூள்வதற்கான மனத்திமிறல்களுமாக முரண்பட்ட ஜேஜேஜே...

ஜில்லா அக்ராசனர் கோஷம் போட்டார். எல்லோரும் பின்பற்றி கூட்டுக் குரல்கள் எழுப்பினர்.

''பாரதமாதா கீ... ஜே...''


''சுயராஜ்யம் அடைந்தே தீருவோம்''

''வந்தே மாதரம்''

''காங்கிரஸ் பார்ட்டி ஜிந்தாபாத்''

''சாதி எனும் அரக்கனை ஒழிப்போம்''

கோஷம் முழக்கியவாறு அவர் முன் நகர... பின்னால் அணிவகுக்கிற ஊர்வலக் கொடித் தொண்டர்கள். பின்னால்... உயரத்தில் ஏந்திப் பிடித்த சமுக்காளப் பந்தல். அதன் நிழலில் மூவர்ணச் சேலையும், குடமும், கயிற்று வாளியுமாக வருகிற வீராங்கனையாக அங்காளம்.



அவனைச் சுற்றி பக்கபலமாக பெருமாள்சாமி நாயக்கர், ரெங்கசாமி, பொன்னையா பிள்ளை மற்றும் உள்ளூர் காங்கிரஸ் தொண்டர்கள். அவர்களுக்குப் பின்னால், நாதஸ்வர முழக்கத்துடன் கொட்டு மேளப் பேரிடிகள். அடுத்து வருகிற ஒயிலாட்டக்குழு. லயம் தப்பாத தாளகதியுடன் கூடிய ஒயிலாட்டம்.

சேரியை விட்டுப் புறப்பட்ட ஊர்வலம், ஓடையைக் கடந்து, ஊருக்குள் நுழைந்து... நாடார் தெரு, தேவர் தெருவைக் கடந்து, நாயக்கமார் தெருவுக்குள் பிரவேசிக்க...

ஊர்வலத்துக்குப் பக்கபலமாக ரெங்கசாமியின் உறவுக்காரர்கள். எல்லாரும் சிலம்பாட்ட மாவீரர்கள்.

உணர்ச்சிமயமான கொள்கை முழக்கங்கள். சுயநலமில்லாத லட்சியப் பெருக்கு. ஊர்வலத்தின் தொண்டர்கள் படை ஏகமாயிற்று. சிலம்பாட்ட வீரர்களின் இரும்புக் கம்பிகள் ஆகாயத்தில் சுழன்று சாகசம் செய்ய...

அரிவாள், கம்பு பம்மிற்று. வேல் கம்புகள் ஒதுங்கிற்று. அங்காளம் நாயக்கமார் கிணற்றில் நீரிறைத்து, குடம் நிரப்பி, இடுப்பில் தூக்கி வைக்கிறபோது...

அவளுக்குள் ஒரு புதிய பரவசப் பெருக்கு. ஆனந்தத் துள்ளல். இடுப்பில் உலகையே தூக்கி வைத்த மாதிரியோர் கம்பீரப் பெருமிதத் ததும்பல்... சமத்துவத்தின் மதுர ருசி.

அந்த ரெங்கசாமிதான் எண்பத்தைந்து வயது நாட்டாமை. அங்காளம் மாளுடைய மகனின் பேரனுக்குத் தீர்ப்பு சொல்லப்போகிற ஊர்த்தலைவர்.

உயர்சாதிக் குடும்பத்துப் பெண்ணைக் காதலிக்கிற பேரன். காதலில் பிடிவாத

துக்கடா நியூஸ்

காட்பாடி அருகே உள்ள 'திருவலம்' சிவன்கோயில் திருஞான சம்பந்தரால் பாடல் பெற்றது. எல்லா சிவன்கோயிலிலும் நந்தி சிவனை பார்த்தபடி இருக்கும். ஆனால் இங்குள்ள நந்திமட்டும் சிவனை பார்க்காமல் எதிர் திசையில் பார்த்தபடி அமர்ந்திருக்கும்.

- வாசகர் யோசனை: வே.ந.கதிர்வேல்

மாக நிற்கிற வாலிபன். ''கட்டினால், அவளைத்தான் கட்டுவேன்'' என்று ஒற்றைக் காலில் நிற்கிறான்.

அவன் துணிச்சலுக்குக் கொஞ்சமும் குறையாமல் அந்தச் சிறுபெண்ணும். பயமறியாத இளங்கன்றுகள்.

ஊர்க்கூட்டம், பெருங் கூட்டமாகி யிருந்தது. மனித வெக்கையின் அலை வீசுகிற அளவுக்கு, பெரும் கூட்டம். விசாரணையெல்லாம் முடிந்துவிட்டது. ரெங்கசாமி தீர்ப்பு சொல்லப் போகிறார்.



"காலமும் வயசும் ஏற ஏற மனுசனுக்கு அறிவு பக்குவப்பட வேண்டாமா? ஒடம்பு கெழடான மாதிரி... மனசுமா கெழடாகணும்!"

''சாதியைத் தாண்டிக் காதலிச்ச பாவத்துக்கு நாலாயிர ரூபாய் அபராதம். அத்துடன் இந்தக் காதலன், 'யாதொரு சம்பந்தமுமில்லை' என்று கையெழுத் திட்டுவிட்டு, ஊரை விட்டே ஓடிப்போய் விடவேண்டும்...''

உயர்மட்டக் குழுவின் கூட்டு முடிவாகத் தயாராகிவிட்ட தீர்ப்பை விளக்கிப் பேசுவது, ரெங்கசாமி பொறுப்பு.

வார்த்தைகளை உள்ளுக்குள் தயாரித்துக் கொண்டிருந்தார். 'தத்துவம் மாறலாம். கட்சி மாறலாம். மதம் மாறலாம். ஊர் மாறலாம். நாடு மாறலாம். எது மாறினாலும் தடையில்லை. சாதி மட்டும் மாற முடியாது. ஏனெனில் பிறப்பினால் வருவது, அது.'

பாயிண்டுகளை உள்ளுக்குள் அடுக்கிக் கொண்டிருந்தார். வரிசை மாற்றி அடுக்கிப் பார்த்தார். யோசனையின் அழுத்தத்தில் முகத் தீவிரம். தளர்ந்த உடம்பில், தாராளமாக விளையாடியிருக்கிற முதுமை. காலப் பயணத்தின் ரேகைகளாக முகச் சுருக்கங்கள். சத்தம் உயர்த்தி... தொண்டையைச் செருமினார்.

''எது வேணும்னாலும் மாத்திக்கலாம். சாதி மட்டும் மாத்திக்க முடியாது.''

அப்போது...

கூட்டத்தைப் பிளந்து கொண்டு முன்னேறுகிற இரண்டு பேர். அவர்களால் தூக்கி வரப்படுகிற சதைப் பொட்டலமாக அங்காளம்மாள்.

''எளிய சாதிப் பொண்ணுகளை நேர்மையேயில்லாம கள்ளத்தனமாக மேய்ற மேல்சாதி ஆம்பளைக. அவுக வீட்டுப் பொண்ணை எளிய சாதிப் பையன் நேர்மையா ஆசைப்படக் கூடாதா? அது தப்பா? மேல்சாதிக் கெணத்துலே எளிய சாதிப் பொண்ணு தண்ணி எடுக்கலாம். பொண்ணு எடுக்கக் கூடாதா? இது என்னய்யா... ஞாயம்? காலமும் வயசும் ஏற ஏற மனுசனுக்கு அறிவு பக்குவப்பட வேண்டாமா? ஒடம்பு கெழடான மாதிரி... மனசுமா கெழடாகணும்?''

அங்காளம்மாளின் பல் போகாத வாயிலிருந்து நடுக்க அதிர்வுகளோடு தெறித்தது இரண்டாம் சுயராஜ்யப் போராட்டத்தின் அக்னி வாசமாய் அந்த முழக்கம்! துணிந்த மனசின் சத்தியச்சீறல்கள்.

ரெங்கசாமி தர்மசங்கடமானார். கூட்டம் குணமிழந்து, திசை தவற... குழப்பமும் சண்டை சச்சரவுகளுமாக பூசல் புயல் கிளம்ப... இருகூறாக கூட்டம் பிளவுபட்டுக் கொண்டிருந்தது.

நூல் அறிமுகம்

அரசியல் செய்ய விரும்பு!







அறிவியல் இதழியல்

டாக்டர் மனோஜ் பட்டேரியா, வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி, ப.எண்.244, ராமகிருஷ்ணா மடம் சாலை, த.பெ.எண்.617, மயிலாப்பூர், சென்னை - 600 004. விலை ரூ.210/-

பத்திரிகைகள் இன்று வாழ்வின் அங்கமாகிவிட்டன. தினசரி முதல் காலாண்டிதழ் வரையாக பலப்பல பத்திரிகைகள் வந்துகொண்டே இருக்கின்றன. இந்த நூல், பத்திரிகை என்பதன் மகத்துவம் என்ன? எவை செய்தி? முதல் பத்திரிகை எது? பத்திரிகையாளர் யார்? அதன் தொடர்பான சட்டம் என்ன? என்று தெளிவான விளக்கங்களைத் தருகிறது. மொழிபெயர்ப்பு நூல் என்றாலும், சரளமான நடை வாசிக்க வைக்கிறது.

ஒவ்வொரு மழையிலும்

க.ஆனந்த் வெளியீடு: அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், 41, கல்யாண சுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. விலை ரூ.60/-

கவிதை, தனக்கான வடிவத்தை தானே தேர்வு செய்து கொள்கிறது. அந்த வகையில், தான் சந்தித்தவைகளை, போகிற போக்கில் பதிவு செய்திருக்கிறார் ஆனந்த். ஆங்காங்கே சில ஆச்சரிய அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன பல கவிதைகள். குறிப்பாய், 'வலி பொறுத்து வலி பொறுத்து வாழ்ந்து காட்டுவதே வலிமை' என்று வலிமைக்குத் தரும் வடிவம் சிறப்பு! இவரின் 'அரசியல் செய்ய விரும்பு' புதிய ஆத்திச்சூடியாய் வாசிப்போருடன் கைகுலுக்குவதை உணரமுடிகிறது.

ஆயிரத்தில் ஒருவன்

'மாஃபா' கே.பாண்டியராஜன், வெளியீடு: விகடன் பிரசுரம், 757 அண்ணாசாலை, சென்னை - 600 002. விலை: ரூ.55/-

'கல்கி' வாசகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்ற தொடர் இது. இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள், அதை அடையும் முறை, அதற்குரிய தகுதிகள், அந்தத் துறையில் வெற்றியாளனாக விளங்குவதற்கான பிற விஷயங்கள்... ஆகியவற்றையும், அப்படி வெற்றி பெற்றவர்கள் பற்றிய சிறு குறிப்புகளையும் தொடர்ந்து எழுதினார் மாஃபா. வெற்றியை நோக்கி இளைஞர்களை ஈர்த்துச் செல்லும் காரணியாக அமைந்த எழுச்சியூட்டும் புத்தகம்!

- ராகவன்ஜி

முதல் கலகம்!

ஒரு மாவட்டத்தின் தலைநகராக விளங்கும் வேலூர் மாநகரம், நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கிராமமாகத்தான் இருந்துள்ளது. வேலூர் லாங் பஜார், மணிக் கூண்டு. அதில் '1914 முதல் 1919 வரை நடைபெற்ற முதல் உலகப் போருக்கு, இக்கிராமத்தில் (வேலூர்) இருந்து 277 பேர் சென்றுள்ளனர். அவர்களில் 14 பேர் தங்கள் உயிரை ஈந்தனர்' என்று பொறிக்கப்பட்டுள்ளது!





ராணுவக் கட்டுமானத்தோடு தென்னிந்தியக் கோட்டைகளிலேயே மிகச் சிறந்ததாயிருக்கும் இக்கோட்டையை விஜயநகரப் பேரரசைச் சேர்ந்த பொம்மி ரெட்டி, பதினாறாம் நூற்றாண்டில் கட்டியுள்ளார்.

வேலூர்க் கோட்டை பிற்காலத்தில் கர்நாடக நவாப் வசமானபோது, ராபர்ட் கிளைவ் சூழ்ச்சி காரணமாக மெல்ல மெல்ல ஆங்கிலேயரின் பாசறையாகிப் போனது.



கர்நாடகாவில் நான்காம் மைசூர் போரில் திப்பு சுல்தான் வீழ்ச்சியுற்றார். அவருடைய உறவினர்களைக் கொண்டு வந்து வேலூர்க் கோட்டைக்குள் சிறை வைத்தனர் ஆங்கிலேயர்கள்.

வேலூர்க் கோட்டையில் இருந்த சிப்பாய்களுக்கு 1806 ஏப்ரல் - மே மாதங்களில் புதிய சீருடை கொண்டு வந்தனர் ஆங்கிலேயர். வேலூர்ச் சிப்பாய்களுக்குப் புதிய சீருடை பிடிக்கவில்லை. அதனை ஏற்க அவர்களுக்கு மனமில்லை என்பதால் சிப்பாய்களைக் கடுமையாக நடத்தினர் ஆங்கிலேய அதிகாரிகள். இதனைத் தெரிந்து கொண்ட திப்புவின் உறவினர்கள் வேலூர்ச் சிப்பாய்களின் மனங்களில் கிளர்ச்சியைத் தூண்டி விட்டனர்.

1806 ஜூலை 10ம் தேதியன்று கோட்டைக்குள்ளிருந்த பல ஆங்கிலேய அதிகாரிகள், வேலூர்ச் சிப்பாய்களால் கொல்லப்பட்டனர். சிப்பாய்களின் வசமானது வேலூர்க் கோட்டை. வெளியிலிருந்து வந்த ஆங்கிலேயர் படை, இந்தியச் சிப்பாய்களைக் கொன்று, கோட்டையை மீண்டும் தன்வசப்படுத்தியது.

ஆக, பின்னர் இந்தியாவில் 1857ல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்தின் முன்னோடி 1806ல் நடந்த வேலூர் சிப்பாய்க் கலகம்!

பட்டா கேட்டுப் பதறும்

''விவசாயிகளுக்கான இலவச மின்சாரம் பயன்படுத்தாத ஒரே கிராமம், தமிழ் நாட்டிலேயே எங்க ஊராகத்தான் இருக்கும்'' என்கின்றனர் நல்லாக் - புளியங்கண் கிராமத்தினர். அவர்களுக்குத் தோட்டம் இருக்கு; காடு இருக்கு; வயல் இருக்கு; கிணறு இருக்கு; அதில் மோட்டார் பம்ப் செட்டும் இருக்கு; ஆனால், அதற்கான தமிழக அரசின் இலவச மின்சாரம் மட்டும் இல்லை. காரணம், அவர்களிடம் முழுமையான பட்டா இல்லை!

முழுமையான பட்டாவுக்காக பல ஆண்டுகளாக மாவட்ட நிர்வாகத்திடமும், தமிழக அரசிடமும் கோரிக்கை மனு அளித்துப் போராடி வருகின்றனர். அதற்கு முன், நல்லாக் - புளியங்கண் கிராமம் குறித்தான ஃப்ளாஷ் பேக்...

நல்லாக் ஊராட்சி மன்றத்தின் தாய் கிராமம் புளியங்கண். நல்லாக் - புளியங்கண் ஏரியா முழுவதும் ஆற்காடு நவாபுக்குச் சொந்தமாக இருந்துள்ளது. அப்போதைய ஆற்காட்டு அரசர், அந்தப் பகுதியில் ஒன்பது லட்சம் மரங்கள் நட்டு வைத்து வளர்த்துள்ளார். அதன் காரணமாகவே நல்லாக் - புளியங்கண் என்கிற பெயர் நிலைத்துப் போனது. அது இப்போது விஷயம் அல்ல.


வேலூர் - திருவண்ணாமலை மாவட்ட

ராபர்ட் கிளைவ் காலத்தில், ஆற்காடு நவாப் கப்பம் கட்டவில்லை என்றதால் அப்பகுதியை ஏலம் விட்டது பிரிட்டிஷ் அரசு. லார்ட் கோவிந்த தாஸ் எனப்படும் பெரும் வைர வியாபாரி, 1868ல் ஒரு லட்சத்துப் பதினைந்தாயிரம் ரூபாய்க்கு ஏலம் எடுத்து, அவரும் அவரது சந்ததியினரும் அந்தக் காலகட்டத்தில் கிராமவாசிகளிடம் நிலவரி மட்டும் வசூலித்து வந்துள்ளனர். அவரது பிற்கால சந்ததியினரின் உரிமைக் குழப்பங்களாலும், யார் நிஜமான வாரிசு என்கிற பிரச்னையாலும் குடியிருப்புவாசிகள் மற்றும் விவசாயிகளிடம் நிலவரி வசூலிப்பது நின்று போய்விட்டது. சுதந்திரத்துக்குப் பின்னர் நிகழ்ந்த ஆட்சி அதிகாரத்தில் அவரவர்கள் ஊராட்சி வரி



செலுத்தத் தொடங்கினர். வருவாய்த் துறையினரும் வரி வசூலித்து வருகின்றனர்.

''பத்து ஏக்கர் காடு, பதினைஞ்சு வருஷமா தரிசா போட்டு வைச்சிருக்கோம். எங்களால அதுகளை வைச்சு எந்த நன்மையும் அடைய முடியலை!'' என்கிறார்

பிள்ளையார் கோயில் தெருவில் வசித்து வரும் ஜெயந்தி.

"**வீ**ட்டுப் பத்திரம் இருக்கு. வீட்டைப் புதுப்பிச்சுக் கட்டணும்னு பேங்க்ல கடன் கேட்க முடியலை. கேட்டாலும் இதுக்கு eligible இல்லேன்னு சொல்றாங்க!'' எனக் கூறுகிறார் தனியார் அலுவலக ஊழியரான பி.டி.ராஜேந்திரன்.

ராமம்!



"**எ**ன் கேள்வி ஞானத்துல நாங்க இந்த ஊர்ல ஆறாவது தலைமுறை. அதாவது இருநூறு வருஷம். எங்களுக்கு வீடும் இருக்கு. காடும் இருக்கு. என்ன பிரயோஜனம்? வெள்ளாமைக் காட்டுக்கு வருவாய்த் துறைகிட்டே வரி கட்டறோம். ஆனா, விவசாயிகளுக்கான இலவச மின்சாரத்துக்கு மனு தந்தா, உங்ககிட்ட முழுமையான பட்டா இல்லேனு தள்ளுபடி பண்ணிடறாங்க. ஊர்ல பாதிக்கும் மேற்பட்ட காடுகள் கட்டாந்தரையா மாறிக்கிட்டு வருது!'' எனச் சொல்கிறார் பி.ஜி.கோபால்.

"**ந**ல்லாக் - புளியங்கண் என்பது ஆயிரத்து அறுநூற்றைந்து ஏக்கர். இதில் அரசுப் பண்ணை மட்டும் நானூறு ஏக்கர். மீதம் ஆயிரத்து இருநூற்றைந்து ஏக்கர் கிராம மக்களின் வீடுகள் மற்றும் விளை நிலங்கள். இவற்றுக்கு அவரவர் பெயர்களில் அரசு 1986ல் பட்டா தந்துள்ளது. அதனை நில அளவை ஆணையர் ஏற்க மறுக்கிறார். காரணம், அப்போது அரசு தந்த பட்டா முழுமையானது அல்ல. அவரவர் வீடு மற்றும் விளைநிலங்களுக்கான சர்வே எண்கள் மற்றும் வரைபடம் வருவாய்த் துறையின் ஏ ரிஜிஸ்டர், எஃப் எம் ஸ்கெட்ச், கம்ப்யூட்டர் சிட்டா போன்றவற்றில் முறைப்படி பதிவாகவில்லை என்பதால், எங்களுக்கு முழுமையான பட்டா கிடைக்கவில்லை. சுமார் ஆயிரம் குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. நிரந்தர முழுமையான பட்டா கிடைத்தால்தான், அவர்கள் வாழ்வில் ஏற்றம் பெற முடியும். தமிழக முதல்வரின் நேரடி கவனத்துக்கு இப்பிரச்னையைக் கொண்டு சென்றால் எங்களுக்கு விடிவு பிறக்குமென நம்புகிறோம்!'' என்கிறார் நவ்லாக் - புளியங்கண் ஊராட்சி மன்றத் தலைவர் சிவஞானம். ○



● ஜெயந்தி



● ராஜேந்திரன்



● கோபால்



● சிவஞானம்



அயல்நாட்டவர்கள் தேடும் ஆன்மிக ஒளி!



திருவண்ணாமலையில் ரமணாஸ்ரமம், யோகி ராம்சுரத்குமார் ஆஸ்ரமம் மற்றும் கிரிவலப் பாதையில் பல வெளிநாட்டுக்காரர்களைக் காண முடியும். தவிர குட்டி, குட்டி ஆஸ்ரமங்களிலும் நிறைய வெளிநாட்டுக்காரர்கள் மாதக்கணக்கில் தங்கி யோகம், தியானம் என்று தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே தங்கியிருக்கும் அவர்கள் மலைச் சரிவுகளில் மணிக்கணக்கில் தியானத்தில் ஈடுபட்டு உள்ளுக்குள் இருக்கும் ஆன்மிக ஒளியைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் உள்ளூர் மக்களுக்கு இவர்களைப் பற்றிய ஒரு சந்தேகம் வரும். எல்லா வெளிநாட்டுக்காரர்களும் ஆன்மிகப் பாதையில் பயணம் செய்ய வருபவர்கள்தானா என்று! இது பற்றி திருவண்ணாமலையில் சிலரிடம் பேசினோம்.

''பொதுவாக வெளிநாட்டவரால் எந்தத் தொந்தரவும் இல்லை. அவர்களில் பெரும்பாலோர் பேசும்போது, 'இந்த மலை எங்களுக்கு ஆன்மிக அதிர்வலைகளைத் தருகின்றது. இங்கு உறைந்துள்ள மகான்களும், சித்தர்களும் எங்கள் தத்துவ விசாரணைக்கு வழி காட்டுகிறார்கள்'' என்றே பெருமையுடன் சொல்கிறார்கள். சில சின்னப் பிரச்னைகள் அவ்வப்போது வரும். உதாரணமாக வெளிநாட்டுப் பெண்ணும், இளைஞரும் திருமணம் செய்துகொள்ள விரும்பினார்கள். கிரிவலப் பாதையில் உள்ள தட்சிணாமூர்த்தி சுவாமி சன்னிதியில் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால்,

சன்னிதிகளுக்குள்ளே மேற்கத்திய இசைக் கருவிகளை இயக்கி, மோதிரம் மாற்றி மணம் செய்துகொள்ள முனைந்தார்கள். இதனால் கடுப்பான இந்து இயக்கங்கள் இந்த விஷயத்தைப் பிரச்னையாக்கினார்கள். மற்றபடி சமீபகாலங்களில் அவர்களைப் பற்றி எந்தத் தவறான செய்திகளும் இல்லை. பன்றிக்காய்ச்சல் பரவலாக வந்த போதுகூட சோதனை செய்ததில் அவர்களில் யாருக்கும் காய்ச்சல் இல்லை'' என்கிறார் ஸீனியர் பத்திரிகையாளர் ஒருவர்.




* கோவிந்தா நடத்தும் மூலிகைப் பண்ணை

''அவர்களின் தேடல் ஆன்மிகம்தான்'' என்கிறார் ஊரின் பிரபல வழக்கறிஞர் பழநிராஜ். ''பலரிடம் நான் பழகியிருக்கிறேன். அவர்கள் இங்கு வருவதன் நோக்கம் மிகத் தெளிவானது. வாழ்நாள் முழுவதும் இங்கே தங்க வேண்டும் என்ற ஆசையில் தான் நிலம் வாங்கி, ஆஸ்ரமங்களை அமைக்கிறார்கள். அவர்களில் பலர் நகர வளர்ச்சியிலும் அக்கறை காட்டுகிறார்கள். வெளிநாட்டவரால் நிர்வகிக்கப்படும் சாந்தி மலை டிரஸ்ட், சுற்றுவட்டார 47 கிராமங்களில் பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் சொந்தக் காலில் நிற்க வைக்கிறது. நகராட்சிக்குக் குடிநீர், குப்பை லாரிகள் வாங்கிக் கொடுத்திருக்கிறது. மலைப் பாதையில், அரசிடமிருந்து நிலம் பெற்று காட்டைத் திருத்தி, அங்கே மூலிகைப் பண்ணை நடத்துகிறார் கோவிந்தா என்னும் லூக்பங்லி. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். அவர்களில் பெரும்பாலோரைச் சுண்டியிழுப்பது ரமணரின் தத்துவம்தான்'' என்கிறார் பழநிராஜ்.



''நமது நாட்டுக்கு வரும் வெளிநாட்டவர்கள் எங்கு தங்கப் போகிறார்களோ அங்கே உள்ள காவல் நிலையத்தில் முதலில் பதிவு செய்துகொள்ள வேண்டும். எங்கள் ஆவணங்களின்படி இந்த நகரத்தில் 300 வெளிநாட்டவர்கள் தங்கியிருக்கிறார்கள். இது தவிர, ஒன்றிரண்டு நாள் தங்கிப் போகும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நூற்றுக் கணக்கில் உண்டு. எந்த வில்லங்கமான விவகாரத்திலும் அவர்கள் ஈடுபட்டதாக சமீபகாலங்களில் எந்தக் குற்ற வழக்கும் கிடையாது. விசா காலம் முடியும் முன்னரே அதைப் புதுப்பித்துக் கொள்ளும் முயற்சிகளில் இறங்கி விடுவார்கள். தங்கள் இறுதி மூச்சு வரை இங்கேயே இருக்க வேண்டும் என்றுதான் அவர்களில் பலர் விரும்புகிறார்கள். எனவே அதற்கேற்ற வகையில் சட்டப்படி நடந்து கொள்கிறார்கள்'' என்கிறார் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாண்டியன்.



* பாண்டியன்



* பழநிராஜ்

ஆன்மிக அனுபவங்களை அள்ளிக் கொடுக்கும் அருணாசலம் தொடர்ந்து அயல்நாட்டவர்களை ஈர்த்துக் கொண்டிருக்கிறது. ○



திகில் கல்லூரி!



ஆரணி நகரை ஒட்டியுள்ளது சத்திய விஜய நகரம் என்ற பகுதி. அந்தப் பகுதியை ஆண்ட ஜாகிர்தார்களின் தலைமையிடம் அது. அங்கே இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட மாளிகைகளும், கட்டடங்களும் உள்ளன. சுதந்திரம் பெற்ற பிறகு அரசு, அந்த வளாகத்தை எடுத்துக் கொண்டுவிட்டது. பின்னர் எந்தவிதப் பராமரிப்புமின்றி கட்டடங்கள் காலப் போக்கில் இடிந்து போயின. இந்த நிலையில் நடப்பு ஆண்டில் தொடங்கப்பட்ட அண்ணா பல்கலையின் அரசு பொறியியல் கல்லூரியை இந்த வளாகத்தில் தற்காலிகமாக இங்கே இரண்டு கொட்டகை போட்டு அமைத்து விட்டார்கள். இடம் கிடைத்த மாணவ, மாணவிகள் முகப்பில் உள்ள பாழடைந்த மாளிகை மற்றும் சிதிலமடைந்த கட்டடங்கள், இடிபாடுகளுக்கிடையே புதிதாய் வளர்ந்த செடி, கொடிகள், சுற்றிலும் காடு போன்ற சூழல் ஆகியவற்றைப் பார்த்து, பேய் பங்களாவில் படிக்க வந்தது போன்று பயந்துபோய் விட்டார்கள்.

''எந்தவிதப் பராமரிப்புமின்றி, பகலிலேயே விஷப் பாம்புகள் நடமாடும், சமூக விரோதச் செயல்கள் நடக்கும் பாழடைந்த பங்களா... பயமாகத்தான் இருக்கிறது'' என்கிறார் ஒரு மாணவி. 'அரசுக் கல்லூரியின் அவல நிலை' என்று லோக்கல் மீடியா செய்தி போட்டுவிட்டது. ''தச்சூர் என்ற பகுதியில் கல்லூரிக்கென்று புதிய வளாகம் கட்டப்படும் என்று அண்ணா பல்கலை சொன்னாலும், அதற்கான எந்த வேலைகளும் துவங்கவில்லை'' என்று ஆரணி பிரமுகர்கள் சொல்கிறார்கள்.

''முதல் வருடத்துக்குத் தேவையான எல்லா கட்டுமான வசதியும் உருவாக்கி விட்டோம்'' என்கிறார் பேராசிரியர் சம்பத்குமார். 220 மாணவ மாணவிகள் படிக்கும் வகுப்புகள் தகரக் கொட்டகைக்குள் அமைக்கப்பட்டிருந்தாலும், புதிய டெஸ்க்குகள், கணிப்பொறிகள் என்று அட்டகாசமாகத்தான் இருக்கின்றன. ஆனாலும் வளாகத்தைக் கல்வியிருக்கும் திகிலைப் போக்கத்தான் வேண்டும் நிர்வாகம்.



வாசகர் யோசனை :

மல்லிநாதன்

கடவுள் காதலித்த இடம்!

முருகனுக்கு வள்ளின்னு ஒரு காதலி. அவங்க ரெண்டு பேரும் நின்ன இடம், உட்கார்ந்த இடம், ஓடிப் பிடிச்சு விளையாண்ட இடம், விளையாடி காதல் வளர்ந்து கனிந்துருகி கல்யாணம் பண்ணிக் கிட்ட இடம்... இதாங்க வள்ளிமலைக் கோயில். தமிழ்க் கடவுள் முருகப்பெருமானை அடியொற்றி இப்பவும் இளங்காதலர்கள் ஆங்காங்கே கண்ணில் தென்படுறாங்க. வேலூர் மாவட்டத்தில் இளசுகளின் அடைக்கல பூமி இதுதான்னு சொல்றாங்க.

அரக்கோணம் - காட்பாடி ரயில் பாதை. அங்கே திருவலம்ங்கற ஊர்லேருந்து பத்து கி.மீ தூரத்துல இருக்கு வள்ளிமலைக் கோயில். புள்ளிமானைத் தேடி வந்த முருகன், வள்ளிக் கொடியாளிடம் சரண் புகுந்த தலம்தான் இது. இந்தத் தலத்துலேருந்து ஒரு கி.மீ தூரத்துல வள்ளிமலை சுவாமிகள் சமாதி இருக்கு. அருணகிரிநாதரோட திருப்புகழை இசையமைத்துப் பரப்பியவர் அவர்.



அந்த சுவாமிகளின் சமாதியிலிருந்து மலை நோக்கி மேலேறி வர்றோம். சமணப் படுக்கைகள் போல அடுக்குகளில் கல் பரண்கள். அந்தக் கல் பரண்களின் மேலமர்ந்துதான், வள்ளி தினைப்புனம் காக்கும் பணியாக பறவைகளை விரட்டி விட்டிருக்கான்னு சொல்லப்படுது. தாகம் கொண்டு தவித்த முருகனுக்கு, வள்ளி தண்ணீர் மொண்டு தந்த சுனையும் உள்ளது.



வள்ளி மஞ்சள் உரசிக் குளித்த இடம், நாலு கால் மண்டபங்கள், மலையடிவாரத் தெப்பக்குளம்னு மனசைப் பறி கொடுக்க பல இடங்கள் வள்ளிமலையில் இருக்கு.

மலையுச்சியில் கல் மலையைக் குடைந்தே கோயில் அமைக்கப் பட்டிருக்கு. இதனால இந்த மலைக்கோயில், ஒரு குகையைப் போல காட்சி தருது. இது வள்ளிமலைக் கோயில் என்றாலும், கருவறையில் முருகப்பெருமான், வள்ளி தெய்வயானை சமேதராராகவே எழுந்து நின்று, அருள்பாலிக் கிறார். கருவறை கோபுரமும் ஒரு பெரிய பாறை மீது வடிவமைக்கப்பட்டிருக்கு. இந்தக் கோயில் (907-953) முதலாம் பராந்தக சோழ மன்னனால் கட்டப்பட்டிருக்கு. பின்னர் (985 - 1014) ராஜ ராஜ சோழன் காலத்தில் திருப்பணி செய்துள்ளதாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறு கின்றன.

வாசகர் யோசனை:
கார்த்திகா ஆதித்தன்

அமெரிக்கா போகுது ஆரணி அரிசி!



ஆரணி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதில் முக்கியப் பங்கு வகித்து வருவது அரிசி ஆலைகள்தான். ஆரணி தவிர அருகிலுள்ள களம்பூர் பகுதிகளில் இருநூறுக்கும் மேற்பட்ட அரிசி ஆலைகள் உள்ளன. நாள் ஒன்றுக்கு 750 முதல் 1000 டன் வரை நெல் அரைக்கப்பட்டு அரிசி எடுக்கப்படுகிறது. ஆரணி அரிசி, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி ஆகிறது. தமிழ்நாடு மற்றும் தென்மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகிறது. ''ஆரணி அரிசியின் ஸ்பெஷாலிட்டி தரமும் ருசியும்தான்'' என்கிறார் நவீன அரிசி ஆலை அதிபர் கே.ராஜேந்திரன்.

இரண்டு தலைமுறைகளாக அரிசி ஆலை நடத்தி வருகிறது ராஜேந்திரன் குடும்பம். ''எங்கள் பகுதி அரிசி சூப்பராக இருப்பதற்குக் காரணம் நாங்கள் தரமான நெல்லைக் கொள்முதல் செய்து அரைப்பதுதான். தொழில்நுட்பம் மிகவும் முன்னேறிவிட்டதால் கணிப்பொறி உதவியுடன் செயல்படும் நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி அரிசி எடுக்கிறோம். ஆலையில் கைகளால் எதையும் செய்ய வேண்டியதில்லை. எல்லாம் இயந்திரங்கள் பார்த்துக் கொள்ளும்'' என்கிறார் ராஜேந்திரன்.



* ராஜேந்திரன்

உயர்தர நெல் வகைகளான சம்பா, நவரை, பொன்னி மசூரி, பாபட்லா, சோனா ஆகியவற்றைக் கொள்முதல் செய்கிறார்கள். முதலில் நெல் ஆலைக்கு வந்தவுடன், பெரிய, பெரிய தொட்டிகளில் மணிக்கணக்கில் ஊற வைக்கப்படுகிறது. அப்படிச் செய்யும்போது பதர் தனியாக மிதந்துவிடும். அதன் பிறகு காய வைத்து, வெப்பம் காட்டி இயந்திரங்களுக்குள் அனுப்பி விடுவார்கள். பின்னர் இருநூறு அடி தள்ளி, பளீர் அரிசி குழாயில் வருவதைப் பார்க்கிறோம். இடையில் செய்யப்படும் நடைமுறையில், அரிசியில் இருந்து





இருக்கின்றன. முன்பெல்லாம் மூட்டை, மூட்டையாக வியாபாரிகளுக்கு விற்று வந்தார்கள். ஆனால், இப்போது, 25 கிலோ கொண்ட மினி மூட்டைகளை நேரடியாக சில்லறை விற்பனைக் கடைகளுக்கு அனுப்பி விடுகிறார்கள். ''ஆந்திரா, கர்நாடகாவில் மழை வெள்ளம் காரணமாக, வெளி மார்க்கெட்டில் அரிசி விலை மேலும் உயருவதற்கு வாய்ப்பில்லை'' என்று சொல்கிறார் ராஜேந்திரன். அரிசி ஆலையில் முதல்கட்டமாக நெல்லிலிருந்து முற்றிலும் ஈரத்தை எடுக்க, வெப்பம் உண்டாக்கப் படுகிறது. இதற்காக பெரிய, பெரிய, மரக் கட்டைகள் எரிக்கப்படுகின்றன. ஆலையின் ஒரு மூலையில் கட்டைகள் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பார்க்கும் போது அரிசி ஆலைகளின் தேவைகளுக்காக ஆயிரக்கணக்கான மரங்கள் வெட்டப் படுகின்றன என்கிற நிஜம், நம்மைச் சுடுகிறது. எல்லா நடைமுறைகளையும் நவீனமாக்கிய அரிசி ஆலைகள், எரிவாயு உலைகளை (Furnace) அமைக்கலாமே!

வாசகர் யோசனை: **பவித்ரா நந்தகுமார்**

கல், குருணை, சுருட்டி, நொய் ஆகியவை நீக்கப்படுகின்றன. தரமான அரிசி தயாரிப்புக்காக உணவு பதப்படுத்துதல் துறையின், தேசிய அளவிலான ஜெம் விருதை இரு முறை பெற்றிருக்கிறார் ராஜேந்திரன்.

ஆரணி அரிசி மில்காரர்கள் கர்நாடகா-ஆந்திராவிலிருந்தும்கூட நெல் கொள்முதல் செய்கிறார்கள். எல்லா ஆலையிலும் மூன்று மாதத்துக்குத் தேவையான நெல் ஸ்டாக் வைக்கப்பட்டிருக்கிறது. லாரிகளில் நெல் எடுத்துக்கொண்டு வர இப்போது எந்த அரசுக் கட்டுப்பாடும் இல்லை. ஆரணிக்கு அடுத்தபடி திருச்சிக்கு அருகில் மணச்சநல்லூரில்தான் அதிக ஆலைகள்



இமயமலைக்கு அண்ணன் அண்ணாமலை!



★ அண்ணாமலையாருக்கு, சோணாசலேஸ்வரர், அருணகிரீஸ்வரர், சோணாத்திரீஸ்வரர், வேதமூர்த்தி, அருணாசலேஸ்வரர் என்ற பெயர்களும் உண்டு. நினைத்தவுடன் முக்தி தரும் தலம் திருவண்ணாமலை. பஞ்சபூதத் தலங்களில் அக்கினிக்கு உரிய தலம்.

★ கோயில் 3000 ஆண்டுகள் பழைமையானது என்று புராணங்கள் சொல்கின்றன. கல்வெட்டுக்கள் 1200 ஆண்டு பழைமையான கோயில் என்று சொல்கின்றன.




★ பரப்பளவு 24 ஏக்கர் ஆகும். ஆறு பிராகாரங்கள். ஒன்பது கோபுரங்கள். கிழக்கு கோபுரத்தின் உயரம் 216 அடி. இதைக் கட்டியவர் கிருஷ்ண தேவராயர். மேற்கு கோபுரம் பேய் கோபுரம், தெற்கு கோபுரம் திருமஞ்சன கோபுரம். வடக்கு கோபுரம் அம்மணி அம்மாள் கோபுரம். ஊரெங்கும் நன்கொடை பெற்று அம்மணி என்ற பெண்மணி கட்டிய கோபுரம் இது.

★ கிழக்கு கோபுரம்தான் ராஜகோபுரம். இதன் வழியாக உள்ளே நுழைந்தால் வலப் பக்கம் ஆயிரங்கால் மண்டபம். இங்குதான் பாதாள லிங்கேசர் சன்னிதி உள்ளது. அண்ணாமலையாரைத் தேடி இளமையிலேயே இங்கே வந்த ரமணர் இந்த பாதாள லிங்கத்தின் பக்கத்தில் அமர்ந்துதான் பல வருடங்கள் தியானத்தில் இருந்தார்.

★ இதன் இடது பக்கம் கம்பத்து இளையனார் சன்னிதி. இங்கேதான் மயில்மீதமர்ந்து அருணகிரிநாதருக்குக் காட்சியளித்தார் முருகப் பெருமான்.

★ கோயிலில் சிவகங்கைத் தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் என்ற இரு திருக்குளங்கள். பிரம்மாவே நீராடி பாபவிமோசனம் பெற்றதுதான் பிரம்ம தீர்த்தம். ஆனால் மக்கள் குளத்தைப் பாழ்படுத்திவிடுகிறார்கள் என்று, கம்பி வேலி போட்டு வைத்துவிட்டார்கள். குளத்தில் நீராடி அண்ணாமலையாரை வழிபட முடியவில்லையே என்று அடியார்கள் ஏங்குகிறார்கள்.

★ சிவகங்கைத் திருக்குளத்தை ஒட்டி



உள்ள சர்வசித்தி விநாயகரை வழிபட்டு, பின்னர் பெரிய நந்திகேசுவரரைப் பார்க்கிறோம். இந்தப் பிராகாரத்தில் உள்ள கோபுரத்தைக் கட்டியவர் வல்லாள மகாராஜா. அடுத்து வருவது கிளிகோபுரம். அருணகிரிநாதர் கிளி உருவத்துடன் கந்தர் அனுபூதி பாடியதைக் குறிப்பிடும் பெயர் கொண்ட கோபுரம்.

★ கோயிலின் நான்காவது வாசலைக் கடந்து அதிகார நந்திகேசுவரரை வழிபட்டு அண்ணாமலையார் சன்னிதிக்குள் நுழைய வேண்டும். அக்கினி லிங்கமாக இங்கே உறைகிறார் ஈசன். திருப்புகழில் 'தீப மங்கள ஜோதி நமோ நம' என்று முருகனைப் பாடுகிறார் அருணகிரிநாதர். அந்த மங்கள ஜோதியின் தந்தை ஞானப் பேரொளி அல்லவா! அறியாமையையும், அஞ்ஞானத்தையும் போக்கும் தத்துவக் குறியீடாக இங்கே காட்சியளித்துக் கொண்டிருக்கிறார் சிவபெருமான். அவரைத் தரிசித்துவிட்டு வைகுந்த வாயில் வழியாக உண்ணாமலை அம்மன் சன்னிதிக்குச் சென்று அவரை வழிபட

அறியாமையையும், அஞ்ஞானத்தையும் போற்றும் தத்துவக்குறியீடாக காட்சியளிக்கிறார் ஈசன்!



வேண்டும்.

★ கார்த்திகை தீபத்தன்று கோயிலில் உள்ள பஞ்சமூர்த்தி மண்டபத்துக்கு அர்த்த நாரீஸ்வரர் ஆடிக் கொண்டே வந்தவுடன் தான், மலையில் தீபம் ஏற்றப்படும்.

★ இமயமலையைவிடப் பழைமை யானது அண்ணாமலை என்று சிவனடி யார்கள் சொல்வார்கள். பிரபஞ்சத்தின் துவக்கத்தில் எரிமலையாக இருந்த அண்ணாமலை, பின்னர் குளிர்ந்து இறுகி மலையாகியதாம். உயரம் 2634 அடி.

★ பௌர்ணமியன்று லட்சக்கணக்கில் மக்கள் கிரிவலம் செய்கிறார்கள். மலை யைச் சுற்ற சித்திரை முதல் நாள், சிவராத்திரி, மாதாமாதம் வரும் கார்த்திகை ஆகியவை உகந்த நாட்கள்.

★ மலையைச் சுற்றி அஷ்டதிக்கு பாலகர்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார்கள். தென்கிழக்கு திசைக்கு அதிபதியாக அக்கினி பகவானும் அமர்ந்திருக்கிறார். கிரிவலம் செல்லும் பக்தர்கள் அக்கினி யுடன் செல்ல வேண்டும் என்பது ஐதிகம். எனவேதான் பலர் ஊதுவத்தியோடு செல் கிறார்கள்.

★ கிரிவலம் செல்லும்போது வட கிழக்கு மூலையிலிருந்து பார்த்தால் ஐந்து சிகரங்களைக் கொண்ட மலை என்பது புரியும். ஈசானம், தத்புருஷம், வாம தேவம், ஸத்யோஜாதம் மற்றும் அகோரம் ஆகியவைதான் ஈசனின் ஐந்து முகங்கள். இதைத்தான் மலைச் சிகரங்கள் உணர்த்து கின்றன.

வாசகர் யோசனை : **சித்ரா மூர்த்தி**





உஷா

பூரி டு திருவண்ணாமலை

வழி பாண்டிச்சேரி

சேஷாத்திரி ஸ்வாமிகள் ஆஸ்ரமம் எதிரில் உணவகம் நடத்தி வருபவர் உஷா. ஒரிஸ்ஸாவில் உள்ள பூரியைச் சேர்ந்தவர், வெளிநாட்டுக்காரரான பீட்டரைக் காதலித்து மணந்தவர். குடும்பச் சூழல் காரணமாக, விசாகப்பட்டினம், பாண் டிச்சேரி என்று அலைந்து இறுதியில் அண்ணாமலையில் 'செட்டில்' ஆகிவிட் டார். அவரது ஆன்மிக அனுபவம் அசா தாரணம்!

''பாண்டிச்சேரிக்கு வந்தபோதுதான் அந்த அனுபவம் நிகழ்ந்தது. அன்று மதர் பிறந்தநாள். எனவே என் மகனைத் தூக்கிக் கொண்டு மதர் சமாதியில் தியானம் செய்யச் சென்றேன். ஏகக் கூட்டம். வீட் டுக்குத் திரும்பிவிட்டேன். அன்றிரவு கனவில் ஒரு துறவி வந்தார். 'நீ இருக்க வேண்டிய இடம் திருவண்ணாமலை, அங்கே நான் இருக்கும் இடத்துக்கு எதிரில் நீ உணவகம் நடத்து' என்று சொல்லி மறைந்தார். எனக்கு திருவண்ணாமலை பற்றி எதுவும் தெரியாது. ஒருமுறை ரமணர் ஆஸ்ரமத்தைத் தரிசித்துவிட்டு பக்கத்தில் இருந்த சேஷாத்திரி ஸ்வாமிகள் ஆஸ்ரமத் துக்குச் சென்றோம். அங்கே படத்தைப் பார்த்தால் அதிர்ச்சி. கனவில் வந்த அதே துறவி புன்னகைத்துக் கொண்டிருந்தார். அதன் பின் எதிரேயே நிலம் வாங்கி உண வகத்தைச் சிறிய அளவில் துவக்கினோம்'' என்கிறார் உஷா.

''எனது கனவில் வரும் மகான் களின் வழிகாட்டுதலில்தான் வாழ்க் கையை அமைத்துக் கொள்கிறேன்'' என்று சொல்லும் உஷா, ஒவ்வொரு வாரமும் 133 சிவனடியார்களுக்கு வடை, பாயசத் துடன் அன்னதானம் செய்து வருகிறார். ''இனி இறுதிவரை திருவண்ணாமலை தான்'' என்கிறார் கண்கள் பனிக்க. திருவண்ணாமலை வரும் பெரும்பாலான வெளிநாட்டு பக்தர்களுக்குப் பிடித்த உண வகமாக இருக்கிறது உஷா நடத்தும் உண வகம்.



வாத்தியார் கிராமம்!

"அம்மா - அப்பா படிக்காதவங்கங்கறதால, எங்க அஞ்சு பேரையும் சொல்லிச் சொல்லி வளர்த்தாங்க. எங்க அப்பன் - பாட்டன் தலைமுறையில நாங்கதான் படிக்கலை. நீங்களாவது கஷ்டப்பட்டுப் படிச்சு வாழ்க்கையில மேல வாங்கன்னு. அவங்க வாய்முகூர்த்தமா நல்லா படிச்சோம். எங்க குடும்பத்துல நாங்க அஞ்சு பேருமே ஆசிரியர்கள்!" எனச் சொல்கிறார் மோர்தானா ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றி வரும் என்.ரவி.

"எங்க வேலை விவசாயக் கூலிதான். எனக்கு நான்கு பெண்கள். அவர்களை நல்லா படிக்க வைத்துள்ளேன். மூத்தவள் எம்.ஏ., எம்.ஃபில்., அடுத்தவள் எம்.எஸ்சி, மூன்றாமவள் எம்.எஸ்சி, எம்.ஃபில்., பி.லிட். மேற்கண்ட மூவரும் தேர்ச்சி பெற்று ஆசிரியர்களாகிவிட்டனர். கடைசிப் பெண் தற்போது எம்.பி.பி.எஸ் படித்து வருகிறாள். வருவாயிலும் வாழ்க்கைத் தரத்திலும் மிகவும் பின்தங்கிய குடும்பத்தில் பிறந்தவர்கள் நாங்கள். எங்கள் குடும்பத்தினர் கல்வியிலும், ஆசிரியப் பணியிலும் இந்தளவு இடம் பிடிப்போம் எனக் கனவிலும் நினைக்கவில்லை" எனக் கூறுகின்றனர் டி.பட்டம்மாள் மற்றும் டி.நாகமணி.

இப்படியான ஆசிரியர்களும் கல்வியின் அவசியம் உணர்ந்த மக்களும் உள்ள





வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு அருகே செண்டத்தூர் கிராமம். இந்த ஆதி திராவிடர் காலனியில் சுமார் மூன்றூறு குடும்பங்கள். அதில் இருபத்து நான்கு பேர் அரசு அலுவலர்கள். நாற்பத்து மூன்று பேர் ஆசிரியர்கள். கிராமத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து மட்டும், இந்தளவு எண்ணிக்கையில் ஆசிரியப் பணிக்குச் சென்றிருப்பது வியக்க வைக்கிறது. சுற்றுவட்டார கிராமத்தினர், செண்டத்தூர் கிராமத்தினை 'வாத்தியார் கிராமம்' என்றே செல்லமாக அழைக்கின்றனர்.

இந்தக் கிராமத்தின் ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து 'செண்டத்தூர் கிராம கல்வி வளர்ச்சிக் குழு' என்கிற அமைப்பினை நடத்தி வருகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் வெவ்வேறு ஊர்களில் பணியாற்றி வந்தாலும், செண்டத்தூர் கிராமத்தில் பிரதி மாதம் விடுமுறை தினத்தில் ஒன்று கூடி விடுகின்றனர். ஏழை மாணவ - மாணவியர்க்கு மேற்படிப்பு கல்வி வழிகாட்டிகளாக விளங்குகின்றனர். தேர்ச்சி பெற்றவர்களுக்கு அரசு வேலை வாய்ப்புகளுக்காக சர்விஸ் கமிஷன் தேர்வு பயிற்சி அளிக்கின்றனர். 'யாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்' என்ற புதிய வரிகளை எழுதி விளக்கவுரை தருகிறது இந்த வாத்தியார் கிராமம். ●

பிரம்மபுரம்


காட்பாடி அருகே பிரம்மபுரம் என்ற சிற்றூரில் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில். ஒரே கல்லில் செதுக்கப்பட்ட நாற்பதடி உயர கருடகம்பம் சிறப்புக்குரியது. பதினாறு கால் மகா மண்டபம், ஏழடி உயரத்தில் கண்முன்னே வந்து நிற்பது போல் நின்ற நிலையில் ஆதிகேசவப் பெருமாள், ஏழு தலை நாகம் மீது அமர்ந்த நிலையில் பெருமாளின் இன்னொரு தோற்றம் என சிந்தையைக் கவரும் திருவுருவங்களுடன் பக்தி கமழும் திருத்தலம். பக்தர்களைக் காப்பதில் பிரம்மபுரம் பெருமாள் பெத்த பெருமாள் என்கிறார்கள். ஒருமுறை போய்க் கேட்டுத்தான் பாருங்களேன்!

வாசகர் யோசனை : **க.ஸ்ரீதர், வேலூர்**













நோ ப்ளானிங்!





• அன்புகதிர்

வேலூரிலுள்ள விருப்பாச்சிபுரத்தில் பிறந்து சென்னை கவின் கலைக் கல்லூரியில் 1997 முதல் 2003 வரை பயின்ற இந்த ஓவியர் பெயர் - அன்புகதிர். 'சுனாமி'யை மையப்படுத்தி இவர் வரைந்த ஓவியங்கள் பரவலான கவனத்தை ஈர்த்தன. ''எப்படி நீங்க வரைவீங்க! இப்ப என்ன வரைஞ்சிக்கிட்டு இருக்கீங்க?''ன்னு கேட்டோம்.

''வரைய உட்கார்ந்ததும் அந்தச் சூழலில் மனம் எதைத் தீர்மானிக்கிறதோ அந்த கருப்பொருளில் அந்த க்ஷணத்தில் மனம் தேர்வு செய்யும் வண்ணம், யுக்தியைக் கொண்டு வரைவேன். எனவே ஓவியத்தில் பெரிய திட்டமிடல் இல்லை. நோ பிளானிங். காலேஜில் படிக்கும்போது என்னோட படிச்சவரையே காதலித்துத் திருமணம் செஞ்சுக்கிட்டு ரெண்டு பேரும் இப்போ 'பிளாக் பென்சில்' என்ற நிறுவனத்தைத் தொடங்கியிருக்கிறோம். இப்போ நான் தாயாகியிருப்பதால் குழந்தையின் ஒவ்வொரு அசைவையும் அருப ஓவியமாய் வரைஞ்சுக்கிட்டு இருக்கேன்'' என்கிறார் 29 வயதாகும் அன்பு கதிர்.

- அமிர்தா

படங்கள்: **சின்னராஜ்**

''இப்ப உன் சந்தேகத்தைக் கேளடா'' என்று மகன் சேகரிடம் சொன்னார், குடும்பத்தோடு காரில் திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கும் முக்கியத் திருத் தலங்களுக்குச் சென்றுவிட்டு திண்டிவனத் துக்குத் திரும்பிக் கொண்டிருந்த கண்ணன்.

''அப்பா இந்த மாவட்டத்தில் போளூர் அருகே திருமலை, வந்தவாசி அருகே பொன்னூர், திறாக்கோல் ஆகிய இடங் களில் சமணர் ஆலயங்கள் இருக்கிறதே! இதன் பின்னணி என்னப்பா?'' என்றான்.

காரை ஒரு மர நிழலில் ஓரங்கட்டினார் கண்ணன். ''உன்னோட கேள்விக்குச் சுவையான பதில் இருக்கு. அதைத் தெரிஞ்சுக்கணும்னா கால இயந்திரத்தில் ஏறி ஆறாம் நூற்றாண்டுக்குச் செல்ல வேண்டும்'' என்றார்.



✱ மேல்சித்தாமூர் கோயில்

காஞ்சிபுரம் முதலாம் மகேந்திர வர்மன் அரசவைக்குள் வந்த சமண முனிவர்கள் அழாத குறையாக, ''மன்னா... பாடலிபுத்திரத்தில் நமது மையத்தின் தலைமை குருவாக இருந்த தர்மசேனர் சைவ சமயத்துக்கு மாறிவிட் டாராம்'' என்றனர்.



''இது எப்படி நடந்தது?'' - கர்ஜித்தார் சமணரான பல்லவ ராஜா.

''கொஞ்ச காலமாக சூலை நோயில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த அவருக்கு, அவரது சகோதரி திலகவதி அம்மையார் வயிற்றில் திருநீறு தடவி திருவதிகை ஈஸ்வரனை வேண்டியிருக்கிறார். நோய் குணமாகிவிட்டது. உடனே தர்மசேனர் சகோதரி வழியில் சைவ சமயத்தில் இணைந்துவிட்டார். நமது மதத்துக்குத் துரோகம் செய்த அவரை மன்னர் தண்டித்தே ஆகவேண்டும்.''

''அவரை இழுத்து வாருங்கள்'' கட்ட ளையிட்டார் ராஜா.

''ஐய்யய்யோ... அப்புறம் தர்மசேனருக்கு என்னவாயிற்று?'' ஆவ லோடு கேட்டான் சேகர்.

''அந்தக் காலத்தில் கடலூருக்குப் பெயர் பாடலிபுத்திரம். திருவதிகை என்பது பண்ருட்டி அருகில் இருக்கும் திருத்தலம். இங்கு அருள்பாலிப்பவர் வீரட்டானேஸ்வரர். தருமசேனரின் பூர்வா சிரமப் பெயர் மருள்நீக்கியார். சைவ சம யத்தை மீண்டும் தழுவியபோது அவருக்கு வைக்கப்பட்ட பெயர் திருநாவுக்கரசர். தேவாரம் பாடிய அப்பர் என்கிற திருநாவுக் கரசர் அவர்தான்.''

''அப்படியா... அது சரி... அவரைப் பிடித்துக் கொண்டுபோய் என்ன செய்தார்கள்?''

''கல்லைக் கட்டிக் கடலில் போட்டார்கள். தரையில் கழுத்து வரை புதைத்து விட்டு யானையை விட்டு மிதிக்கச் சொன்னார்கள். விஷம் கொடுத்துக் குடிக்கச் சொன்னார்கள். ஆனால், நமச்சிவாயம் அவரைக் கைவிடவில்லை. எல்லா சோதனைகளிலிருந்தும் மீண்டெழுந்து சுடரொளியாகப் பிரகாசித்தார் அப்பர். ஒவ்வொரு சோதனையின்போதும் நமக்குக் கிடைத்தன அற்புதமான பாடல்கள். 'சொற்றுணை வேதியன்', 'மாசில் வீணையும்' - இதையெல்லாம் நீ பள்ளியில் படிச்சிருப்பியே... பார்த்தான் மன்னன்...

''ரொம்ப ருசிகரமாக இருக்கே வரலாறு. ஒன்று கேட்க மறந்து விட்டேனே... அதன்பின் சமணர்களின் தலைமைப் பீடம் எங்கே போயிற்று?''

''செஞ்சிக்கு அருகில் மேல் சித்தாமூர். அங்கே பார்ஸ்வநாதர் கோயில் இருக்கிறது. இப்போது ஜைன காஞ்சி மடத்துக்குத் தலைவராக இருப்பவர் ஸ்வஸ்திஸ்ரீ லட்சுமி சேன பட்டாரக சுவாமிகள். அவர் தமிழர்.''

''தமிழரா... சமணர்களை ஜெயின் என்கிறார்களே! ஹிந்தி பேசுவார்கள் என்று நினைத்திருந்தேன்!''

''தவறான கருத்து. ஹிந்தி பேசும் சமணர்களும் உண்டு. தமிழ்நாட்டு சமணர்கள் தமிழில்தானே பேசுவார்கள். சமண



சமணர்களை சரித்திரம் மறக்காது!

■ ஸ்வஸ்திஸ்ரீ லட்சுமி சேன பட்டாரக சுவாமிகள்



ஈசனின் மகத்துவத்தைப் புரிந்துகொண்டான். அவனே சைவ சமயத்தைத் தழுவி விட்டான். அடுத்து அவன் செய்த காரியம், காஞ்சியிலிருந்த எல்லா சமணர்களையும் வெளியேற்றியதுதான். தமிழ்நாட்டில் சமணர்களுக்குத் தலைமைப் பீடமாக இருந்தது காஞ்சி. சிதறி ஓடிய சமணர்கள் திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களில் பல இடங்களில் தலைமறைவானார்கள். அங்கே ஆலயங்கள் கட்டி வசிக்கத் தொடங்கினார்கள். நீ முதலில் சொன்னாயே, அந்த இடங்களில் சமணர் ஆலயங்கள் அமைந்தது இப்படித்தான்.''

சமயத்தை 24 தீர்த்தங்கரர்கள் உலகெங்கும் பரப்பினார்கள். அதில் கடைசி மகாவீரர்தான். பார்ஸ்வநாதர் இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரர். கடவுள் விக்கிரக வழிபாடு சமண சமயத்தில் இல்லை; தீர்த்தங்கரர்களுக்குச் சிலை உண்டு. உயிர்களைக் கொல்லாமை மிக முக்கியமாகக் கடைப்பிடிக்கவேண்டிய அறம். மற்றபடி நல்ல செயல், நல்ல எண்ணம், நல்ல பேச்சு... இதுவே சமணர் மூச்சு. அடுத்த முறை மகாவீரர் ஜெயந்திக்கு உன்னை மேல்சித்தாமூருக்குக் கூட்டிப் போகிறேன். பத்து நாள் உற்சவம் பிரமாதமாக நடக்கும்.''

காட்சி-1

"எம் பேரு முருகேசன்; கிராமம் பிளாந்திபட்டு. என்னோட குடும்ப நெம்பர் : 1510ங்க".

"கொஞ்சம் இருப்பா"- கம்ப்யூட்டரைத் தட்ட, எண் 1510-க்கான முழு விவரம், வீட்டில் இருப்பவர்களின் தொழில், வருமானம், ஆடு, மாடு, கோழி விவரம் என முழுசும் திரையில் வருகிறது.

"உனக்கு இலவச மருத்துவம். போய்ச் சேர்ந்துக்கோ" என்கிறார் ஊழியர்.

இரண்டு காட்சிகளும் ஆச்சரியம் தான். வேலூரிலிருந்து இருபத்தைந்து கி.மீ. தூரத்தில் உள்ள பி.கே.புரத்திலுள்ளது ரூசா (RUHSA). கிராமப்புற சமுதாய சுகாதார முன்னேற்ற நிறுவனம் என்பது அதன் முழுப் பொருள். டாக்டர் காக்கரே என்பவர் 1948ல் நாற்பத்தெட்டு ஏக்கர் நிலம் வாங்கி கட்டடம் இல்லாமல் மரத்தடியிலேயே மருத்துவச் சேவையைத் தொடங்கினார். பி.கே.கிராமத்தை உள்ளடக்கிய கே.வி.குப்பம் பஞ்சாயத்து யூனியனைத் தத்தெடுத்தது இவ்வமைப்பு. மொத்தம் 99 கிராமங்கள்.

ரூபா கேட்காத

காட்சி-2

ஒரு நோயாளி :

"எல்லா நோய்க்கும் மருத்துவம் பாக்கறாங்க. மொத்தம் எண்பது பெட் இருக்குங்க. ஒரு நாளைக்கு முன்னூறு பேர் வர்றாங்க. அவ்வளவு அன்பா பாத்துக்கிறாங்க. அதுல ஒரு டாக்டர் பேரு இன்பகுமார். எங்க கிராமத்துல பல குழந்தைகளுக்கு அவரு பேரை வெச்சிருக்கோம்."

ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள குடும்பங்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் மூன்று விதமான பிரிவாக வகைப்படுத்தி கட்டணங்களைத் தீர்மானிக்கிறார்கள். முழு கட்டணம், ஐம்பது சதவிகிதக் கட்டணம், இலவச சேவை என இருந்தாலும், பெரும்பாலும் இலவசப் பிரிவிலேயே







கே.ஆர்.ஜான்

மக்கள் அதிகம் பயன்பெறுகின்றனர். ''இந்த முறையை மத்த தொண்டு நிறுவனமும் அரசாங்கமும் கடைப்பிடிச்சா எம்புட்டு நல்லாயிருக்கும்'' என்பது மக்களின் யோசனை.

''ஒரு ரூபாய் கூட வாங்காம சேவை செய்வதைவிட அதைத் தெளிவாகவும் சிறப்பாகவும் திட்டமிட்டுச் செய்யறதுதான்

ரூசா!

எங்களுக்கு இந்தளவு பேரும் புகழும் வரக் காரணம்'' என்கிறார் ரூசாவின் தலைவர் டாக்டர் கே.ஆர்.ஜான்.








நவ வில்வ மரம்!

வேலூர் நகரின் நல்லான் பட்டறைப் பகுதி. அமிர்தலிங்க சுவாமி சமாதி மடம். வில்வ மரம். இதில் என்ன ஆச்சர்யம்? நேபாளம் மற்றும் இமயமலைச் சாரல் போன்ற மலைப் பிரதேசங்களில் மட்டுமே அபூர்வமாகக் காணக் கிடைக்கும் நவ வில்வதரு என்கிற மரம் இந்த மடத்தின் உள்ளே பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. அதாவது ஒரே இலைக் காம்பில் ஒன்பது இலைகள் கொண்டவையாக வளர்கின்றன. பொதுவாக, திரிதளமாகவும் (மூன்று இலைகள் கொண்டது) பஞ்சதளமாகவும் வில்வம் காணப்படும். ஒவ்வொரு இலைக்காம்பிலும் ஒன்பது இலைகள் என்பது அபூர்வமானது.

வாசகர் யோசனை: **இரா.கணேசன்,**
சேலம்





* சேகர் குருக்கள்

வேலூருக்கு மேற்கே பன்னிரண்டு கி.மீ. தொலைவில் விரிஞ்சிபுரம். பாலாற்றங்கரையிலிருந்து சற்று தள்ளி, ஊரின் நடுவில் அமைந்துள்ளது மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயில். இங்கு ஈஸ்வரனுக்கு வழித்துணைநாதர் என்கிற சிறப்புப் பெயரும் உண்டு. இறைவியின் திருநாமம் அருள்மிகு மரகதாம்பிகை. தலவிருட்சம் பெண் பனைமரம். தீர்த்தம் சிம்ம தீர்த்தம். இந்த ரெண்டுலயும் கொஞ்சம் மேட்டர் இருக்கு. முதல்ல கோயில் உள்ளே போய் சுவாமி தரிசனம் பண்ணிடுவோம்.

கிழக்கு நோக்கி அமைந்துள்ள ஏழு நிலை கொண்ட இராஜகோபுரம் நூற்றுப் பத்தடி உயரத்தில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. உள்ளே இடது பக்கம் சக்தி மண்டபம். மேற்கே பதினாறு கால் மண்டபம். தெற்கில் ஒரு சிங்கத்தின் வாய் வழியே நுழைந்து செல்லும் முறையில் அமைந்துள்ள சிம்மக் கிணறு.

பதினாறு கால் மண்டபத்தில் பலிபீடம், கொடிமரம், மகாநந்தி. இவற்றைக் கடந்து கருவறை நோக்கிச் செல்லும் முன்பாக, கருவறை வெளியே அமைந்துள்ள விநாயகரையும், முருகனையும் வணங்கிவிட்டுத்தான் மூலவர் தரிசனத்துக்குக் கருவறை உள்ளே செல்ல வேண்டும்.

வரதட்சணையைத் தடை செய்யும் கல்வெட்டு!



மூலவர் திருமேனி சுயம்புலிங்கமாக ஆறடி உயரத்தில் திருவெழில் கொண்டு மிகவும் கம்பீரமாகக் காட்சியளிக்கிறார். இரண்டாம் பிராகாரத்தின் வடமேற்கே இறைவியின் சன்னிதி. அவளது திருமேனி கவின்மிகு சிற்ப வேலைப்பாடுகளை உள்ளடக்கி மரகதக் கொடியிடையாளாக அருள்மிகு மரகதாம்பிகையாக எழுந்தருளி அருள்பாலித்து வருகிறாள்.

சுமார் ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமை வாய்ந்த திருக்கோயில். கும்பாபிஷேகத் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிறப்பு பெற்ற சிவத்தலங்கள் 1008. அவற்றுள்ளும் பிரசித்தி பெற்ற சிவத்தலங்கள் 108. இவற்றுள் மிகவும் விசேஷமான சிவ திருத்தலங்கள் 18. அவற்றில் ஒன்று விரிஞ்சிபுரம்.

''இத்தலத்தில் சுயம்புவாக ஈஸ்வரன் தோன்றியபோது, இந்த இடம் பனைமரக் காடாக இருந்துள்ளது. அதனாலேயே தல விருட்சமாக பெண் பனை இங்கு வளர்ந்து வருகிறது.

தீர்த்தம் சிம்ம தீர்த்தம். சிம்மக் கிணறு இங்கு அமைந்துள்ளது. ஆதிசங்கரர் திருக்கோயிலுக்கு விஜயம் செய்திருந்தபோது, 'பீஜாக்ஷர யந்திரம்' ஒன்று அவ்விடத்தில் ஸ்தாபிதம் செய்து வைக்கப்பட்டுள்ளது. பெண்கள் சிம்மக் குளத்தில் நீராடி விட்டு, இறைவன் - இறைவியிடம் பிரார்த்தித்துக் கொண்டால், புத்திர பாக்கியம் கிட்டும் என்பது நம்பிக்கை. கார்த்திகை சோம வாரம் மிக விசேஷம். அதுவும் கார்த்திகை கடைசி திங்கட்கிழமையன்று, சிம்மக் குளத்தில் மட்டும் சுமார் ஐந்தாயிரம் பெண்கள் நீராடி வேண்டிக் கொள்கிறார்கள். சிம்மக் குளத்தில் நீராடுபவர்கள் கருவறை முன்பாக பதினாறு கால் மண்டபத்தில் சிறிது நேரம் படுத்துறங்கிப் பிரார்த்திக்கிறார்கள். அந்த வருடமே பெரும்பாலோர்க்குப் புத்திர பாக்கியம் கிட்டிவிடுகிறது என்பது நடைமுறை உண்மை.

இராஜகோபுரம் உள் பகுதியில் ஒரு கல்வெட்டு. 1347ல் விஜயநகர மன்னன் காலத்தில் வைக்கப்பட்டது. 'ஒரு பெண்ணை மணம் பேசி முடிக்கையில் பொன்னோ பொருளோ பேரம் பேசுதல் கூடாது. காசு பணம் குறித்தும் விவாதித்தல் ஆகாது. நிர்ப்பந்திப்பதும் தகாது. இவற்றை மீறி கன்னிகாதானத்தில் சீர் வரிசைகளைக் கட்டாயப்படுத்திப் பெற்றால், அது பாவச் செயலாகும். இதனை மீறுபவர்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்று அக்கல்வெட்டுச் செய்தி கூறுகிறது'' என்கிறார் விரிஞ்சிபுரம் அருள்மிகு மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயில் அர்ச்சகர் சேகர் குருக்கள்.

வாசகர் யோசனை:
மன்னை ஜி.நீலா



* வரதட்சணைக்குத் தடை!

* பிள்ளை வரம் வேண்டி பிரார்த்தனை...







“கண்ணமங்கலம் பேரூராட்சியால் 1988ம் வருடம் சலவைத் துறையாகப் பயன்படுத்திக் கொள்ள ஊரின் எல்லையில் 57 செண்ட் இடம் எங்களுக்கு ஒதுக்கப்பட்டது. முதலில் சில காலம் பேரூராட்சியால் குழாய் மூலம் வழங்கப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டதால் அந்த இடத்தை எங்களால் பயன்படுத்த முடியவில்லை. நாளடைவில் அதைக் குப்பை கொட்டும் இடமாகப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டது பேரூராட்சி. அதை எதிர்த்துக் கேள்வி கேட்ட எங்களை நயவஞ்சகமாக ஏமாற்றி இப்போது இடத்தைப் பறித்துக் கொண்டு விட்டது. எங்களால் முடிந்தவரை போராடி விட்டோம். மீட்க முடியவில்லை. நீங்கள்தான் மீட்டுத் தரவேண்டும்” என்று கண்ணமங்கலம் சலவைத் தொழிலாளர்கள் உருக்கமாக நமக்குக் கடிதம் எழுதியிருந்தார்கள். நமது திருவண்ணாமலை ரவுண்ட்-அப்பின் போது அந்தத் தொழிலாளர்களைச் சந்தித்தோம்.

குப்பைகளைப் போடுவதை நிறுத்திவிட்டு, அந்த இடத்தைச் சுத்தப்படுத்தி, தண்ணீர் வசதி செய்து தரவேண்டும் என்று சலவைத் தொழிலா



* சங்க நிர்வாகிகள்

“எங்களைத்



* மூடியிருக்கும் சலவைக் கூடம்

மூடியிருக்கும் சலவைக்கூடம்



ளர்கள் கேட்டவுடன், "கவலைப் படாதீர்கள்... சுற்றுச் சுவர் கட்டி, சுத்தப் படுத்தித் தருகிறோம்" என்று சொல்லி யிருக்கிறது பேரூராட்சி நிர்வாகம். சுற்றுச் சுவரும் கட்டி, கதவும் போட்டுப் பூட்டி விட்டார்கள். ஆனால், சாவியைச் சலவைத் தொழிலாளர்களிடம் கொடுக்கவில்லை. பின்னர் உள்ளே புதிதாகக் கட்டிடம் கட்டி, மக்கும் மற்றும் மக்காத குப்பைகளைப் பிரிக்கும் இடமாக அதைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டது பேரூராட்சி. எம்.எல்.ஏ., கலெக்டர் என்று எல்லா இடங்களிலும் மோதிப்பார்த்து விட்டார்கள் தொழிலாளர்கள். "உங்களுக்கு இடம் கொடுக்க முடியாது" என்று சொல்லிக் கடுப்படித்திருக்கிறார்கள்.

"சலவைத் தொழிலை நம்பி இங்கே நாங்கள் முப்பது குடும்பங்கள் இருக்கிறோம். இங்கே ஓடும் கமண்டல நாக நதியில் வருடத்துக்கு மூன்று மாதம் தண்ணீர் ஓடும். ஆனால், அப்போதுகூட

துவைக்காதீர்கள்!"

-கண்ணீரில் கண்ணமங்கலம் சலவையாளர்கள்

துணிகளை அங்கே துவைக்க முடியாது. ஊர் சாக்கடை முழுக்க ஆற்றில்தான் கலக்கிறது. மற்றபடி கிணறு, ஏரிகளில் தண்ணீர் இருக்கும்போது துவைத்தால் மக்கள் ஆட்சேபிக்கிறார்கள். எங்களுக்கு எந்த ஏற்பாடும் இல்லேன்னா நாங்க எப்படி தொழில் செய்வது?" என்று கண்ணீர் மல்கக் கேட்டார்கள் தலைவர் மணி மற்றும் செயலாளர் வடிவேல், துணைத் தலைவர் தேவராஜ் ஆகியோர்.

தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தைப் பார்த்தோம். பூட்டப்பட்ட அந்த இடத்தில் வாழை நடப்பட்டு, ஒரு ஷெட் மற்றும் கழிப்பிடங்கள் கட்டப் பட்டிருந்தன.

1988ல் அந்த இடம் ஒதுக்கப்பட்ட போதே அரசு ஆவணங்களில் 'சலவைத் துறை' என்று அந்தக் குறிப்பிட்ட சர்வே நம்பரை மாற்றிவிட்டதாகச் சொல்கிறார்கள் தொழிலாளர்கள். "அந்த இடம் மீண்டும் தொழிலாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டால், ஆழ்குழாய் போட்டுத் தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொள்வோம்" என்கிறார்கள் தொழிலாளர்கள். "மற்றவர்களின் துணிகளைத் துவைத்து அழுக்கைப் போக்கும் எங்களைப் போட்டுத் துவைக்காதீர்கள்" என்கிறார் தலைவர் மணி.

மறுநாள் பரீட்சை. படித்துக் கொண்டே இருந்த சிறுவன் வெங்கட்ராமன் அப்படியே கீழே சாய்ந்தான். 'ஐயோ... நமக்கு என்ன ஆயிற்று? உடல் நலம் நன்றாகத்தானே இருந்தது. நான் மரணத்தை நெருங்கி விட்டேனா?' அதற்குள் உறவினர்கள் வருகிறார்கள். 'என்ன ஆயிற்று... எப்படி இறந்தான்?' என்று கதறுகிறார்கள். மயானத்துக்கு எடுத்துச் செல்கிறார்கள். எரிக்கிறார்கள். இதையெல்லாம் சிறுவன் ஒருவித விழிப்பு நிலையில் பார்த்துக் கொண்டிருக்கிறான். உடல் மட்டும் எரிந்து சாம்பலாகிறது. திடுக்கிட்டு எழுந்து விடுகிறான் உறக்கத்திலிருந்து.

சில நாட்கள் கழித்து உறவினர் ஒருவர் வீட்டுக்கு வருகிறார். ''அருணாசலத்திலிருந்து வருகிறேன்'' என்கிறார். அதைக் கேட்டவுடன் சிறுவன் கண்களில் ஒளி. ''எங்கிருக்கிறது?'' என்று கேட்டான். ''விழுப்புரம் அருகில்'' என்றார் அவர். கையில் கிடைத்த காசை எடுத்துக் கொண்டு பல கஷ்டங்களுக்குப் பிறகு அருணாசலேஸ்வரர் சன்னிதிக்கு வந்து சேர்ந்தான் அவன். கண்ணீர் அருவியாகக் கொட்டிக்கொண்டே இருக்க, தான் இருக்க வேண்டிய இடம் இதுதான் என்று நீர்மானித்து மலையிலும் அங்குள்ள குகைகளிலும் தவம் செய்யத் தொடங்கி விட்டான். காலம் செல்லச் செல்ல அவனது மகத்துவத்தை உலகம் புரிந்து கொண்டது.

''உடலுக்குத்தான் அழிவு. ஆன்மாவுக்கு இல்லை. எல்லாவற்றுக்கும் மனம்தான் காரணம். ஐம்புலன்களைத் தாண்டிய நிலையில் மனம் ஒன்று மட்டுமே விழித்துக் கொண்டு இருக்கும். உடலுக்குத்தான் பிரச்னைகள் வருகின்றனவே தவிர, மனத்துக்கு ஒன்றும் வருவதில்லை. அந்த மன ஒளியைக் கண்டவர்கள், தன்னைத் தானே கண்டவர்கள். தான் யார் என்று உணரும் வாய்ப்பு பெற்றவர்கள்'' என்ற ரமண தத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல; கடல் கடந்தும் பலரைக் கவர்ந்தது. ஐரோப்பிய அறிஞர் பால் பிரண்டன், ''இந்தத் தத்துவம் மேற்கத்திய கலாசாரத்துக்கும் ஏற்றதே'' என்றார். வெங்கட்ராமனாகப் பிறந்து, மகான் ரமணராக உலகைத் துறந்த அவரது தத்துவம், இன்றைக்கும் என்றைக்கும் திருவண்ணாமலைக்கு ஆன்மிகத் தேடலுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கும்.

ரமணாஸ்ரமத்துக்கு உள்ளே நுழைந்தவுடன் பகவான் ரமணரின் தாயார் அழகம்மையின் சமாதி. துறவியாக வாழ்ந்த பெண்மணி. அம்மாவின் இறுதிக் காலத்தில் அவருக்கு மோட்சம் கொடுத்தவர் ரமணர். அடுத்து, ரமணரின் சமாதி இருக்கும் பெரிய ஹால். பக்தர்கள் இங்கேதான் தியானத்தில் ஈடுபடுகிறார்கள். அதையடுத்து கிணற்றை ஒட்டி இடதுபுறம் திரும்பினால் மற்றொரு தியான



நான் எங்கே போவேன்? இங்கேயேதான் இருப்பேன்.



மரணத்தை வென்ற மகான்!



■ ஆசிரமத்தில் ரமணர் சிலை

அறை. இந்த அறையில்தான் ரமணர் பல ஆண்டுகள் தங்கியிருந்தார். அங்கிருக்கும் சோபாவில் உட்கார்ந்தபடி மலையைப் பார்த்துக் கொண்டே இருப்பாராம். சில சமயங்களில் எழுந்து மலையைச் சுற்றத் தொடங்கிவிடுவாராம். அந்த அறையில் பத்து நிமிடம் உட்கார்ந்து தியானம் செய்வது அமைதியைக் கொடுக்கும் அனுபவம். ரமணர் சமாதிக்கு நேர் எதிரில் மற்றொரு அறை. அவர் உடல் ஒளியாக இவ்வுலகை விட்டுப் பிரிந்த அறை. அவரது கட்டில், கைத்தடி, கடிகாரம் எல்லாம் இங்கே இருக்கின்றன.

பலருக்கு ரமணாஸ்ரமத்தில் எப்படி நடந்து கொள்வது என்றே தெரியவில்லை. பொருட்காட்சி போன்று பார்த்துக் கொண்டே செல்கிறார்கள். ரமணரின் சமாதி மண்டபத்தில் உட்கார்ந்து மனத்தை ஒருமுகப்படுத்தி, ரமணரை நெஞ்சக்குள் நிறுத்தி தியானம் செய்யும்போது மனம் சூன்ய நிலைக்குச் செல்ல முடியும். அதற்கும் மேம்பட்ட நிலைக்குச் சென்றால் மனத்தின் ஒளியைக் கண்டுகொள்ள முடியும். ஆஸ்ரமத்தில் நிரந்தரமாகத் தங்கியிருப்பவர்கள் இதற்குத்தான் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

தன்னுடைய உடலைத் துறக்கும்முன் ரமணர் சொன்னார்:

''எல்லோரும் நான் இந்த உலகை விட்டுப் போகப் போகிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால் நான் எங்கே போவேன்? இங்கேயேதான் இருப்பேன்''





மாதிரி மாவட்டமாக

ஒரு தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கி, முயற்சியாலும், கடின உழைப்பாலும் உயர்ந்த நிலையை அடைந்திருப்பவர் உணவு அமைச்சர் எ.வ.வேலு. தமது துறை தொடர்பான வேலைச்சுமை அவரை அழுத்தினாலும், மாவட்டத்தின் வளர்ச்சிப் பணியில் தனிக் கவனம் செலுத்தி வருகிறார். ''மாதிரி மாவட்டமாக மாற்ற முயற்சி செய்வேன்'' என்று நம்பிக்கையோடு சொல்கிறார்.

''இந்த மாவட்டம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆரணியில் பட்டுத் தொழிலும், அரிசி ஆலைகளும் கணிசமான வேலை வாய்ப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. செய்யாறில் சிப்காட் தொழிற்பேட்டை அமைத்திருக்கிறோம். டி.வி.எஸ்.போன்ற பெரிய நிறுவனங்கள் உட்பட பலர் அங்கே தங்கள் தொழிற்கூடங்களைத் தொடங்கியிருக்கிறார்கள். பத்தாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

அண்ணா பொறியியல் கல்லூரி, போக்குவரத்து மண்டல அலுவலகம், அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டடம், ஆரணி, திருவண்ணாமலையில் நீதிமன்ற வளாகம்... என்று வளர்ச்சிப் பணிகள் நிறையவே நடந்திருக்கின்றன. ஒரு கோடி செலவில் சாத்தனூர் அணை பூங்கா புதுப்பொலிவு பெறுகிறது. திருவண்ணாமலை நகரத்துப் பொருளாதாரம் இங்கே வரும் பக்தர்களைச் சார்ந்திருக்கின்றது. அதிலும் இருபத்தொன்பது கோடி செலவில் பாதாளச் சாக்கடை திட்டம், 2011 ஜனவரியில் முடியும். அதுவரை ஏற்படும் சிரமங்களை மக்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும். பதினான்கு கி.மீ. நீளமுள்ள கிரிவலப் பாதை நல்ல தார் சாலையாக அமைக்கப்பட்டிருக்கிறது. நடைபாதைகளில் டைல்ஸ் பதித்திருக்கிறோம். மேலும் ஐம்பது லட்சம் செலவில் இளைப்பாறும் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பிற்படுத்தப்பட்ட மாவட்டமாக திருவண்ணாமலை அறிவிக்கப்பட்டிருப்பதால், பின் தங்கிய மண்டல நிதியாக இரண்டரை கோடி மதிப்பீட்டில் இருபத்தைந்து பணிகள் நடந்து வருகின்றன. இது தவிர, சட்டமன்ற உறுப்பினர் நிதி, 12வது நிதிக் குழுத் திட்டத்தின்கீழ் தரப்பட்ட நிதி, வறட்சி நிவாரண நிதி ஆகியவற்றிலிருந்து கிடைத்த தொகையில் இருபத்துமூன்று



வளர்ச்சிப் பணிகள் நகரத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. பௌர்ணமியில் திரளும் லட்சக்கணக்கான ஆன்மிக அன்பர்களின் வசதிக்காக போக்கு வரத்தைச் சீர்ப்படுத்த, நகரைச் சுற்றி பை-பாஸ் சாலைகள் அமைக்கப்பட்டி ருக்கின்றன. எந்த ஒரு பிரச்னையானாலும் என் கவனத்துக்கு கொண்டு வந்தால் தீர்க்க முயற்சி செய்வேன்'' என்ற அமைச்சரிடம் நமது வாசகர்கள் எழுதி அனுப்பிய சில பிரச்னைகள் குறித்துக் கேட்டோம். சம்பந் தப்பட்ட அதிகாரிகள், கட்சிக்காரர்கள் ஆகியோரிடம் பேசி, உடனே பதில் சொன்னார் அமைச்சர். அதிலிருந்து சில துளிகள்...

★ கண்ணமங்கலம் சலவைத் துறை

மாற்றுவேன்!

– அமைச்சர் எ.வ.வேலு

பிரச்னை குறித்து உள்ளாட்சி மக்கள் பிரதி நிதிகளை அழைத்து சுமுகமான தீர்வு காணப்படும்.

★ ஆரணி பொறியியல் கல்லூரிக்கு இந்த வருடம் புதுக்கட்டடம் கட்டப் படும்.

★ வெம்பாக்கம், கரந்தை, திருப்பணலூர் கிராமங்களை நெல்லி கிராமத்துடன் இணைக்க, இந்த ஆண்டே முயற்சி மேற்கொள்ளப் படும்.

★ மங்கலம் கிராமத்தி லிருந்து மீண்டும் மினி பேருந்துகள் இயக்குவது பரிசீல னையில் உள்ளது.


★ மங்கலம் கிராமத்துப் பேருந்து நிலை யத்தில், ஊராட்சி பொது நிதியில் இருந்து கழிப்பிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப் படும்.

★ திருவண்ணாமலை வழியாகப் போடும் அகல ரயில் பாதை பணிகள் முடிவடைய ஒரு வருடம் ஆகலாம்.

★ அண்ணாமலையார் கோயில் ஓது வார் ராஜினாமா செய்து விட்டபடியால், புதிய ஓதுவாரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

துக்கடா நியூஸ்

திருவண்ணாமலையின் மீதுள்ள ஒரு மாமரத்தின் கீழே இருக்கும் இந்தக் குகைக்கு மாமரக் குகை என்று பெயர். பக்தர்கள் வந்து தரிசிக்கும் இக்குகையில் என்ன விசேஷம்? ரமணர் ஆறுவருடம் இக்குகையில் தவமிருந் தாராம்.



நியூஸ் ஏந்தி பவன்

கப்பலேற இருந்த கலைக்கூடம்!



வேலூர் கோட்டை ஜலகண்டேசுவரர் கோயிலின் உள்ளே கருங்கல் கலைக்கூடம். நாற்பத்தெட்டு தூண்கள். அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள். அதனை ரசித்து உணர்ந்து முழுமையாகச் சுற்றிப் பார்க்கவே ஒருநாள் ஆகும். மண்டபம் அப்படி ஒன்றும் பெரியது அல்ல. ஆனால், அதன் ஒவ்வொரு தூணும் ஒவ்வொரு விதம்.

தூண்கள் ஒவ்வொன்றிலும் வேறு வேறு வகைப்பட்ட வித்தியாசமான எழில் கொஞ்சும் சிற்பங்கள். சிறுத்தைகளை வேட்டையாடும் குதிரை வீரர்கள். அழகு மிளிரும் மயிலேறும் முருகன், விநாயகர் வடிவங்கள், குழல் ஊதும் கண்ணன், மேலே உள்ள விதானங்களில் விரிந்த தாமரை மலர்கள், அதைக் கொத்தும் கிளிகள் எவரையும் வியக்க வைக்கும்.

இத்தகைய எழில் மிளிரும் அழகிய கருங்கல் கூடத்தை அப்படியே பெயர்த்து எடுத்து, லண்டன் பிரைட்டர் கலைக்கூடத்துக்குக் கொண்டு செல்ல முடிவெடுத்தது பிரிட்டிஷ் அரசு. இவற்றை ஏற்றிக்கொண்டு செல்ல வந்திருந்த கப்பல், வரும் வழியில் நடுக்கடலில் மூழ்கிப் போய்விட்டது. அதனால் தப்பிப் பிழைத்து நம்மிடையே தங்கிவிட்டது இந்த அரிய கருங்கல் கலைக்கூடம்!

வாசகர் யோசனை:
இரா.கணேசன், சேலம்









சற்றே விலகியிரும் பிள்ளாய்

லட்சக்கணக்கான மக்கள் கார்த்திகை தீபம் மலையில் ஏற்றப் படும் அந்த அற்புத தருணத்துக் காகக் காத்துக் கொண்டிருந்தார் கள். அப்போது கருமேகங்கள் வானில் நிரம்பி மலையைச் சூழ்ந் தன. உடனே வர்ணனையாளர், ''தீபத்தைப் பார்க்க மேகங்களும் திரண்டுவிட்டன'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, மேகங்கள் சட்டென்று விலகின. உடனே வர் ணனையாளர், ''சற்றே விலகியிரும் பிள்ளாய்' என்று அருணாசலேஸ் வரர் மேகங்களுக்கு ஆணையிட்டு விட்டார். இனி தீபம் கொழுந்துவிட் டுப் பிரகாசிப்பதை மக்கள் நன் றாகப் பார்க்க முடியும்'' என்று சமயோசிதமாகச் சொன்னதைப் பலரும் ரசித்தார்கள். அந்த வர்ண னையாளர், பன்னீர்செல்வம்.

தமது 32வது வயது வரை நாத் திகர். அதன்பின் சேஷாத்திரி சுவாமி களின் ஆஸ்ரமத்தைச் சேர்ந்த உமா தேவி அம்மையாரால் ஆன்மிகப் பாதைக்குத் திரும்பியவர். இப்போது தொலைக்காட்சி, வானொலியில் நேர்முக வர்ணனைகள் நிறைய செய்து வருகிறார். ○






சாத்தனூர் ஆபத்து!



1960களில் வெளிவந்த பல தமிழ்ப்படங்களில் காதலர்களின் டூயட் பாடல் காட்சிகள் சாத்தனூர் அணைக்கட்டுப் பகுதியிலேயே எடுக்கப்பட்டன. இதற்குக் காரணம் அணையை ஒட்டியுள்ள பூங்கா அந்த அளவுக்குச் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வந்தது. ஆனால், இடையில் பூங்காவின் பராமரிப்பும் சுணக்கமாகிவிட, படப்பிடிப்புகளும் குறைந்து போய் விட்டன. இப்போது மீண்டும் புதுப்பொலிவு பெற்றிருக்கிறது சாத்தனூர் அணை. இயக்குநர்கள் அங்கே எட்டிப் பார்க்கலாம்.

வெறும் பூங்கா மற்றும் விளையாட்டுச் சாதனங்கள் என்றில்லாமல் மீன் காட்சியகம், முதலைப் பண்ணை... என கண்களையும் கருத்தையும் கவரும் அம்சங்களும் உள்ளன. சனி, ஞாயிறுகளில் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. வேலை நாட்களில் பள்ளி மாணவ, மாணவிகளின் எக்ஸ்கர்ஷன். காமராஜர் தமிழக முதல்வராக இருந்த போது இந்த அணை கட்டப்பட்டது.

இங்கே ஆயிரக்கணக்கில் வரும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு முதலைப் பண்ணையில் ஆபத்து காத்துக் கொண்டிருக்கிறது. காரணம் முதலைகள் இருக்கும் குளங்களைச் சுற்றி உள்ள சுற்றுச்சுவர்களின் உயரம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஆர்வ மிகுதியால் எட்டிப் பார்க்கும் சிறுவர், சிறுமிகள் தவறி உள்ளே விழுந்து விட வாய்ப்பு உண்டு. எனவே, இதைப் பராமரிக்கும் காட்டிலாகா உடனடியாக சுவர்களின் மேல் கம்பிவலை அடிக்க வேண்டும். ஏதேனும் விபரீதமாக நடப்பதற்கு முன் காட்டிலாகா விழித்துக் கொள்ள வேண்டும். தவிர காட்டிலாகா ஊழியர்கள் முதலைப் பண்ணைக்குள் பார்வையாளர்கள் இருக்கும்போது கண்காணிக்க வேண்டும். வெளியில் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருக்கக் கூடாது.



தப்பா எழுதி வைக்கல..!



"நம்ம மந்திரி தலைவரை ரொம்பவே வெறுப்பேற்றிவிட்டாராம்"

"எப்படி?"

"பதவியை விட்டு கட்சிப் பணிக்கு போகச் சொன்னா, கட்சி அலுவலம் எங்கேன்னு கேட்டுட்டாராம்!"

- ஆர்.விஸ்வநாதன்



"டாக்டர்... நான் ஆபரேஷன்ல பிழைக்கக்குவேணா?"

"மூட நம்பிக்கையை யெல்லாம் வளர்த்துக்கக் கூடாது!"

- எம்.அசோக்ராஜா

"நியாய விலைக் கடையில எல்லாமே எடை குறைவா இருக்கே?"

"யோவ்... நல்லா பாரு... நாங்க ஒண்ணும் நியாய எடைக்கடைனு தப்பா எழுதி வைக்கலை!"

- சிக்ஸ் முகம்



ஓவியங்கள் : தமிழ்

இவ்வாறு கோனார் ரொக்கம் வைத்திருந்த இடத்தைப் பிடாரி கண்டுகொண்டாள். கோனார் இருக்கும்வரை அதை எடுப்பதற்கு வழியில்லை. சிக்காளி மனிதன்; களஞ்சியத்துக்கு எதிரிலேயே படுத்திருந்தார். நன்றாய்த் தூங்குவதும் கிடையாது. ஆனாலும் பணம் எங்கே போய்விடப் போகிறதென்று பிடாரி தைரியமாயிருந்தாள். அவர் இறந்த பிறகு பிடாரி வீட்டை விட்டு நகரவில்லையாதலால் யாரும் எடுத்திருக்க முடியாது. பின் எப்படி அந்தப் பெட்டி மாயமாய்ப் போயிருக்கும்?

வீட்டிலுள்ள சந்துபொந்து எல்லாவற்றையும் பிடாரி சோதனை செய்து பார்த்தாள். ஒன்றும் பயன்படவில்லை. போனது போனதுதான்.

மயிலைக் காளை



சட்டென்று பூங்கொடியின் மேல் அவளது சந்தேகம் வந்து நின்றது. 'அவள்தான் எடுத்திருக்கவேண்டும்; திருடி, சாகஸக்காரி. அவளை ஒரு



கை பார்க்கிறேன்' என்று பிடாரி மனத்துக்குள் எண்ணினாள்.

மறுநாள் பூங்கொடியைக் கூப்பிட்டு, ''இதோ பார்! நிஜத்தைச் சொன்னாயானால் பேசாமல் விட்டுவிடுகிறேன். நீ ஏதாவது பணம் எடுத்தாயா?'' என்று கேட்டாள். பூங்கொடி அதற்கு, ''நான் ஒருத்தர் பணத்தையும் எடுக்கவில்லை. பிறத்தியார் பணம் எனக்கு எதற்கு?'' என்றாள். எவ்வளவோ நயத்திலும் பயத்திலும் கேட்டும் வேறு பதில் அவளிடமிருந்து வரவில்லை.

கோனாருக்குப் பதினாறாம் நாள் சடங்கு முடிந்தது. அதற்கு மறுதினம் பிடாரி பூங்கொடியைக் கூப்பிட்டு, ''அடியே, இங்கே பார்! நீதான் பணத்தை எடுத்திருக்க வேண்டும். வேறு யாரும்

திருடன் வந்துவிடவில்லை. பணத்தைக் கொடுத்தாயோ இந்த வீட்டில் இருக்கலாம். இல்லாவிட்டால் வீட்டை விட்டு வெளியேறிவிடு!'' என்றாள்.

''அப்படியே ஆகட்டும். நீ இப்படிச் சொல்ல வேண்டுமென்றுதான் காத்துக் கொண்டிருந்தேன். என் மாமன் இருந்த வீட்டில் அவர் இல்லாமல் கொஞ்ச நேரமும் இருக்கச் சகிக்கவில்லை. இப்பொழுதே போய் விடுகிறேன்'' என்றாள் பூங்கொடி.

அன்று காட்டில் பூங்கொடியைச் சந்தித்துப் பேசியதிலிருந்து கிருஷ்ணக் கோனானுடைய மனம் ரொம்பக் குழம்பியிருந்தது. காரியங்களெல்லாம் தாறுமாறாகச் செய்து வந்தான். பிண்ணாக்கைக் கொண்டு போய்த் தொட்டியில் போடுவதற்குப் பதிலாகக் கிணற்றில் போட்டான். எருமைக் கன்றுக் குட்டியைப் பசு மாட்டில் ஊட்டவிட்டான். கறவை மாட்டுக்கு வைக்க வேண்டிய பருத்திக் கொட்டையைக் கடாமாட்டுக்கு வைத்தான்.

தனக்குத்தானே பேசிக் கொள்ளத் தொடங்கினான்.

''நாம் இரண்டு பேரும் கிளியாய்ப் பறந்து போய் விடுவோமா?'' என்று இரைந்து சொல்லிவிட்டுக் கலகலவென்று சிரிப்பான். ''எனக்கு மட்டும் துரோகம் செய்தாயோ?'' என்று கூறிப் பல்லை நறநற வென்று கடிப்பான். அன்று இராஜன் வாய்க்கால் கரையில் பூங்கொடியைப் பிரிந்த சமயத்தில், ஒரு கையினால் அவளுடைய மோவாய்க்கட்டையை நிமிர்த்திப் பிடித்துக்கொண்டு தன்னுடைய முகத்தை அருகில் கொண்டு போனதும், அவள், ''சீச்சீ! நாம் இன்னும் சின்னப் பிள்ளைகளா?'' என்று உதறிக்கொண்டு ஓடிப் போனதும் எப்போதும் அவன் மனக் கண்முன் நின்றது. சில சமயம் அவளுடைய உருவம் அதே நிலையில் எதிரில்



3

நிற்பதுபோல் தோன்றும். அப்போது அவனுடைய கைகளும் முகமும் கோரணிகள் செய்யும். ''தெரியுமா? என்னை மறக்கக் கூடாது!'' என்பான்.

இவற்றையெல்லாம் கவனித்த அவனுடைய தாயார், ''ஐயோ! என் மகனுக்கு மோகினி பிடித்து விட்டதே!'' என்று தவித்தாள். அவனுடைய உறவுமுறையாருக்குள் கலியாணத்துக்குத் தகுதியாயிருந்த பெண்களைப் பற்றியெல்லாம் விசாரிக்கத் தொடங்கினாள்.



"சொல்லாது போனால் நான் விடமாட்டேன்!"

இலையிலே சோற்றை வைத்துக் கொண்டு சாப்பிடாமல் மகன் என்னவோ யோசனை செய்து கொண்டிருப்பதைக் காணும் போது, ''அடே அப்பா! உனக்கென்னடா இப்படி வந்தது?'' என்பாள். கிருஷ்ணன், ''சீ! போ! உன்னை யார் கேட்டது?'' என்று வள்ளென்று விழுவான். ''ஐயோ! என் மகன் இப்படி ஒரு நாளும் இருந்ததில்லையே, மாரியாத்தா என் மகனைக் காப்பாற்றடி! உனக்குப் படையல் வைக்கிறேன்'' என்று வேண்டிக்கொள்வாள்.

பெருமாள் கோனார் செத்துப் போனதிலிருந்து கிருஷ்ணனுடைய மனக்குழப்பம் இன்னும் அதிகமாயிற்று. பூங்கொடி தாய் தந்தையற்ற அநாதையென்பதும், அவளுக்கு மாமன் வீட்டைத் தவிர வேறு போக்கிடம் கிடையாதென்பதும் ஊரில் எல்லாருக்கும் தெரியும். பெருமாள் கோனார் உயிரோடிருக்கும்வரை அபிமானமாய் வைத்துக் கொண்டிருந்தார். இனிமேல் அவளை யார் கவனிப்பார்கள்? பிடாரி அவளை வதைத்து விடுவாளே?

ஒருநாள் கிருஷ்ணன் தாயாரிடம், ''ஏன், ஆயா! பெருமாள் கோனார் செத்துப் போனாரே? இனிமேல் அந்தப் பெண் என்ன செய்யும்?'' என்று கேட்டான்.

''எந்தப் பெண்ணடா?''

''அதுதானம்மா, பூங்கொடி!''

''அவளை அந்தப் பிடாரி துரத்திவிடுவாள் சீக்கிரம். இப்போதே திருட்டுப் பட்டம் கட்டிவிட்டாளே, தெரியாதா உனக்கு?''

''அது என்ன, அம்மா?'' என்று கிருஷ்ணன் பரபரப்

''உங்க மந்திரி பதவியில முதல்வர் சின்ன மாற்றம் கொண்டு வந்திருக்கார்!''

''என்னன்னு சொல்லுங்க!''

''மந்திரிக்கு முன்னாடி 'Ex' சேர்த்துக்கச் சொல்லிட்டாரு.''

- ஆர்.பி. ஜெயச்சந்திரன்



புடன் கேட்டான்.

''கோனார் ரொக்கப் பணம் வைத்திருந்தாராம். அதைக் காணுமாம். பிடாரி அந்த அநாதைப் பெண் மேலே பழியைப் போடுகிறாள். அவள்தான் எடுத்து விட்டாள் என்கிறாள். அந்தப் பெண் அப்படிச் செய்திருக்கவே செய்திருக்காது. ஏதாவது பழி வைத்துத்தானே வீட்டை விட்டுத் துரத்த வேண்டும்?''

கிருஷ்ணனுடைய நெஞ்சில் முள் தைத்ததுபோல் சுருக்கென்றது. அன்றைய தினம் காட்டுக்கு அவள் தனியாக வந்திருந்ததும், தன்னைக் கண்டு திகைத்து நின்றதும், எதற்காக வந்தாய் என்று கேட்டதற்குப் பதில் சொல்லாமல் மூடு மந்திரம் செய்ததும் ஞாபகத்துக்கு வந்தன. உண்மையில் அந்தப் பெண் திருடிதானோ? இந்த எண்ணம் அவனுடைய நெஞ்சில் அளவிலாத வேதனையை உண்டாக்கிற்று.



“நான் எங்கே போனால் யாருக்கென்ன?”

எவ்வளவுதான் யோசித்தாலும் அவன் ஒரு முடிவுக்கே வரவேண்டியிருந்தது. பிடாரி சொல்வது நிஜந்தான். பூங்கொடிதான் பணத்தை எடுத்திருக்க வேண்டும்! அதை எங்கேயோ ஒளிப்பதற்குத்தான் அன்று காட்டுக்கு வந்திருக்கிறாள். இந்தச் சந்தேகம் தோன்றவே, அன்றைய தினத்திலிருந்து கிருஷ்ணன் மாடுகளை ஓட்டிக் கொண்டு காட்டுக்குப் போன போதெல்லாம் சுற்றுமுற்றும் பார்த்தவண்ணம் இருந்தான். பூங்கொடி பணம் ஒளித்து வைத்திருக்குமிடம் தன் கண்ணில் ஒரு வேளை பட்டுவிடுமோ என்று அவனுடைய நெஞ்சில் திக்குத்திக்கென்று அடித்துக் கொண்டேயிருந்தது.

மறுநாள் காலை, கிருஷ்ணன் பழைய சோறு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அப்போது அடுத்த வீட்டுக்காரி, ''அமிர்தம்! சங்கதி கேட்டாயா?'' என்று சொல்லிக் கொண்டு வந்தாள்.

''என்ன சமாசாரம்?'' என்று அமிர்தம் கேட்டாள்.

''பிடாரி, பூங்கொடியை வீட்டை விட்டுப் போகச் சொல்லிவிட்டாள். அந்தப் பெண் அழுதுகொண்டே கிளம்பிப் போகிறது.''

''ஐயோ பாவம்! அது எங்கே போகும்?'' என்றாள் அமிர்தம்.

''அது என்ன கர்மமோ? போக்கிடம் ஏது அதற்கு? எங்கேயாவது ஆத்திலே குளத்திலே விழுந்து செத்து வைத்தாலும் வைக்கும்...''

கிருஷ்ணன் அதற்கு மேல் கேட்கவில்லை. சட்டென்று எழுந்திருந்து கையலம்பி விட்டு வாசலில் வந்து பார்த்தான். பூங்கொடி தெருவைத் தாண்டி அப்பாலுள்ள பாதையில் போவதைக் கண்டான். இவன் குறுக்கு வழியாக வயல்களில் விழுந்து சென்று அந்தப் பாதையில் அவளுக்கு முன்னால் சென்று ஏறினான்.

பூங்கொடியின் எதிரில் சென்று வழி மறித்து நின்றுகொண்டு, ''எங்கே போறே?'' என்று கேட்டான்.

''நான் எங்கே போனால் யாருக்கென்ன?'' என்று பூங்கொடி சொல்லிக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

''சொல்லாது போனால் நான் விடமாட்டேன்'' என்றான் கிருஷ்ணன்.

பெருமாள் கோனாரின் கருமாதிக்கு

(விவாதம் தொடர்ந்தது)

கவிஞர் விவேகாவின் பேனாதான் இப்போது தமிழ்த் திரைப்பாடல்களைப் பொறுத்தவரை கோடம்பாக்கத்தின் மந்திரக் கோல். குழந்தையின் மனத்தைக்கூட தம் பாட்டு வரிகள் மூலம் வாரி அணைத்துக் கொள்ளும் விவேகாவுக்கு சொந்த ஊர் தி.மலை. அவரோடு பேசிய போது...



கவிஞர் விவேகா

"அவர்கள்

திருவண்ணாமலை என்றால் உடனடியாக நினைவுக்கு வருவது?

''கார்த்திகை மாத அதிகாலைக் குளிரில் தாமரைக் குளத்தில் நீராடிவிட்டு, என் அன்னையின் விரல்களைப் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு வருடமும் மலையைச் சுற்றியிருக்கிறேன். அடிவாரத்திலிருக்கும் எங்கள் குலதெய்வம் பச்சையம்மன் கோயிலில் வெறும் மாவுருண்டையை உட்கொண்டு விரதம் முடித்ததும்,

மழை நாளில் மலையின் இடுப்பில் தோன்றும் புதிய அருவிகளில் நனைந்த அனுபவமும் இன்னும் சிலிர்ப்பூட்டுகின்றன.''

திருவண்ணாமலையில் எல்லோரும் கிரிவலம் சுற்றுவார்கள். நீங்கள் யாரைச் சுற்றினீர்கள்?

''காதல் என்றாலே கெட்ட வார்த்தை போல் பார்க்கிற கிராமச் சூழலில் வளர்ந்தவன் என்பதால் காதலிப்பதற்குப் போதிய தைரியம் அப்போது இருக்கவில்லை. பெரும்பாலும் நூலகங்களைத்தான் சுத்தினேன்.''

கல்லூரிக் கால அனுபவங்கள்...

திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரியில் நான் கணிதம் ஆங்கில வழி படித்

நுக்கொண்டிருந்தாலும், என் பெரும்பா லான நேரம் தமிழ்த்துறையில்தான் கழிந் தது. மாணவர்களுக்குச் சிம்ம சொப்பன மாய்த் தெரிந்த முதல்வர் சந்தானம் எனக்கு மட்டும் சாந்தமுகம் காட்டியது, கல்லூரி யில் சேர்ந்த முதல் வாரத்தில் கருத்த ஒடிச லான தேகம் கொண்ட ஒரு சீனியருக்கு வாதநாராயணன் மரக் கிளையொன்றின் இலை எண்ணிக்கை ஏனோ தேவைப்பட, நான் ஒவ்வொன்றாக எண்ணிச் சொன்னது, நண்பர் ஒருவர் ஒருதலைக் காதல் கொண்டு என்னைத் தூது போகக் கெஞ்சியது... 'நீங்கள் ஏன் சினிமாவுக்குப் பாட்டெழுதக் கூடாது?' என முதன்முதலில் தோழி சேஷபாலா ஆசையை விதைத்தது... என நிறைய நினைவுகள். (இப்போது என்ன செய்கிறார் தெரியவில்லை.)

படங்களின் தலைப்பு தமிழில்... ஆனால், பாடல் வரிகள் ஆங்கில கலப் பில்... எக்ஸ்க்யூஸ் மீ கவிஞரே நியா யமா?

''கந்தசாமி படத்தின் எட்டு பாடல் களையும் நான் எழுதியிருக்கிறேன். அதில் இரண்டு பாடல்கள் மட்டும் கொஞ்சம் ஆங் கில வார்த்தைகள் சேர்க்க வேண்டியதா யிற்று. ஒரு தேநீர் சாப்பிட கடல் கடந்து உலங்கு வானூர்தியில் பறக்கிற பெண்

உங்கள் பாடல்களில் ரெட்டை அர்த்தவரிகள் அதிகமிருக்கிறதே?

''டாடி மம்மி வீட்டில் இல்ல
தடை போட யாரும் இல்ல
விளையாடுவோமா உள்ள வில்லாலா'

இதைக் குழந்தைகள் ஏதோ விளை யாட்டு என்றுதான் எண்ணுவார்கள். அது என்ன விளையாட்டு என்று அவர்களுக்குப் புரிந்துவிட்டால் அவர்கள் இன்னும் குழந்தைகள் இல்லை.

கோழி வெடக்கோழி
சிக்கு சிக்கு பூம் பூம்
என் பேரு மீனாகுமாரி,

மியாவ் மியாவ் பூனை... எனத் தொடர்ந்து என் பாடல்கள் குழந்தைகளையும் வசீகரிக் கின்றன. அவர்கள் பாடுவது வார்த்தை களைத்தான்; அர்த்தங்களை அல்ல.

மேலும் ஒரே அர்த்தம் கொண்ட சொற் கள் தமிழில் குறைந்துகொண்டே வருகின் றன. போன வருடம் நல்ல வார்த்தையாக இருந்தது இப்போது கள்ளத்தனம் கொண்ட தாகப் பார்க்கப்படுகிறது.

இன்றைய கவிஞர்கள் தங்களுக்குத் தாங்களே பட்டம் சூட்டிக் கொள் கிறார்களே... அது பற்றி உங்கள் கருத்து?

''அதிலொன்றும் தவறில்லை. பிறர்

குழந்தைகள் இல்லை!"

அப்படிப் பாடுவதுதான் இயற்கையாக இருக்கும். தற்போது 'ஈரம்' படத்தின் அனைத்துப் பாடல்களையும் நான்தான் செறிவான தமிழில் எழுதியிருக்கிறேன். அதில் எல்லாமே மெல்லிசைப் பாடல்கள். ஆங்கிலக் கலப்பை நான் வலிய புகுத்த வில்லை.''

தருகிற பட்டங்கள் மட்டும் எப்போது தகுதியானவையாகவா இருக்கின்றன? மண்டபம் வைத்துத் திருமணம் செய்து கொள்ள வசதியில்லாதவர்கள், வீட்டி லேயே மஞ்சள் துண்டைக் கழுத்தில் கட்டிக்கொண்டால் தவறா?

- ராகவ்குமார்

வறுமைதான்

சமீபத்தில் மதுரையில் நிறுவப்பட்டுள்ள நடிகர் திலகம் செவாலியர் சிவாஜிகணேசனின் உருவத்தைச் சிலையாக வடிவமைத்த பெருமைக்கு உரியவர் பாலக்காட்டைச் சேர்ந்த சிற்பி சிவராமன். ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள அவரது சிற்பத் தொழிற்கூடமான சர்வ்ய ஆர்ட்ஸில் அவரைச் சந்தித்து உரையாடியபோது...



* மதுரையில் நிறுவப்பட்டுள்ள சிலை

சிலையை வடிவமைப்பதற்கு முன் சிற்பிகள் விசேஷ விரதம் இருப்பார்களா? நீங்கள் எப்படி?

''நான்-வெஜ் சாப்பிடாமல், வேலையைத் தொடங்கும்முன் பூஜை செய்து, விரதம் மேற்கொண்டு சாமி விக்கிரங்களைச் செய்தால் வேலை நல்லா வரும். பவர் இருக்கும். முன்னாடி செய்த வேலையை விட, இப்ப செய்யற வேலை இன்னும் நல்லா வரும். மனித உருவங்கள் செய்வதற்கு விரதம் தேவையில்லை. ஆர்வம் இருந்தா போதும். மனித உருவங்களை மட்டும் நான் சிலையாக வடிப்பதால் என்னைப் போன்றவர்களுக்கு விரதம் கட்டாயம் இல்லை.''

சிவாஜி சிலை வடிவமைப்பில் நீங்கள் கவனித்த விஷயங்கள் என்னென்ன?

''சிலை வடிவமைப்பில், யாரை உருவாக்கப் போறோமோ, அவருடைய பத்து பதினைந்து படங்களைப் பார்க்கணும்; போட்டோவின் முன் பக்கத்தை நன்றாகப் பார்க்கணும். சிவாஜியின் பல போட்டோக்களைப் பார்த்தபின் நேச்சுரலா அவர் பின்னாடி கை கட்டி நிக்கிற மாதிரி செய்தேன். அவருடைய முகத்தை வடிவமைப்பது ரொம்பக் கஷ்டமாக இருந்தது. அதுக்கு மட்டும் ஆறு மாதங்கள் செலவிட்டேன். ஐந்தே முக்கால் அடியில் அமையும் சிலை நல்லா வரும். ஐந்து அடியாக இருந்தால் குள்ளம் தெரியும். ஆறு அடி என்பது அதிக உயரம். இதையெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சிலை வடிவமைக்கும் தொழிலின் இன்றைய நிலை என்னவாயுள்ளது?

தமிழ்நாட்டில் சிலை செய்வது கம்மி. ஆந்திராவில் அமோகம். இங்கே, எங்

முதல் தகுதி



கேயோ எப்போதோ சிலை செய்வாங்க. ஆனா ஆந்திராவில் சிற்பத் தொழில் வளர்ச்சி நல்லா இருக்கு. அங்கு வார்டு உறுப்பினர்க்கே சிலை இருக்கும். தமிழ் நாட்டில் எம்.எல்.ஏக்கே சிலை பண்றது இல்லை. அண்ணா, பெரியார், எம்.ஜி.ஆர் இவங்களுக்குத்தான் சிலை இருக்கு. நெடுஞ் செழியன் ஃபைனான்ஸ் மினிஸ்டராக இருந்தவர். தமிழ்நாட்டின் தூண். ஆனா அவருக்குச் சிலையில்லை. கவர்ன் மென்ட் டெண்டர் கொடுக்க வேண்டும். திறமை யான சிற்பிகளுக்கு வாய்ப்பு தர வேண்டும்.

நடிகர் திலகம் சிவாஜியின் சிலையை வடிவமைப்பதில் உங்களுக்கு ஏற்பட்ட மறக்க முடியாத அனுபவம் எது?

''மதுரைக்கு சிவாஜி சிலையைக் கொண்டு போனோம். சிலையைக் கீழிறக் கும்போதே, அவரின் ரசிகர்கள் ''சிவாஜி வாழ்க' எனக் கோஷமிட்டனர். அவர்கள் அதைச் சிலையாகப் பார்க்கவில்லை, சிவாஜி யாகவே பார்த்தார்கள். அதைப் பார்த்த போது சிற்பியான என்மீதே எனக்கு மதிப்பு வந்தது. இது மறக்க முடியாத அனுபவம். அவார்ட் வாங்கறதைவிட இது பெரிசு.

ஆந்திராவில் சிற்பத் தொழில் வளர்ச்சி நல்லா இருக்கு. அங்க வார்டு உறுப்பினர்க்கே சிலை இருக்கும்.

சிற்பிக்கு இருக்க வேண்டிய தகுதிகள் என்ன?

சிற்பி ஏழையா இருப்பாங்க. அது கட வுளின் நல்ல ஃகிப்ட். பணக்கார சிற்பி கிட்ட கான்சன்ட்ரேஷன் குறைவாக இருக் கும். ஏழையா இருப்பதுதான் முதல் தகுதி. ஒரு மாதத்தில் முடிக்கிறதை பதினைந்து நாளில் முடிப்பாங்க. அப்பதான் சோறு.''

- பாலு விஜயன்

துக்கடா நியூஸ்

எந்த மேடையிலும் சால்வை, துண்டு போர்த்தினால் மறுத்து விடுகிறார் பெரணமல்லூர் சட்டமன்ற உறுப்பினர் 'எதிரொலி' மணியன். புத்தகங்களை மட்டுமே அன்பளிப்பாகக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறார். சில வருடங்களுக்கு முன் 'எதிரொலி' என்ற பத்திரிகையின் நிருபராகப் பணியாற்றியதால் இவர் பெயருடன் 'எதிரொலி' என்ற பெயர் நட்பாய் ஒட்டிக் கொண்டதாம்.



* மணியன்

- வயலூர் பார்த்திபன்

நடக்குமென்பார்;

28.10.09 முதல் 28.4.2011 வரை



ராகு - கேது பெயர்ச்சி பலன்கள்

மேஷம் : கிரக நிலவரம்:

10ம் இடத்திலிருந்த ராகு, 4-ம் இடத்திலிருந்த கேது இருவரும் பாக்கியஸ்தானமான 9-க்கும், தைரியஸ்தானமான 3-க்கும் இடம் பெயர்கிறார்கள்.

ப்ளஸ் : வெளிநாடு செல்லும் வாய்ப்பு, சொத்து சுகம் வரும். உத்யோக உயர்வு, விருதுகள் கிட்டும். வழக்கு வெற்றி, உடல்நிலை முன்னேற்றம் தரும். சுபகாரியம் நடக்கும்.

மைனஸ் : பலவீனம் இல்லை... எனவே பரிகாரமும் இல்லை.

ரிஷபம் : கிரக நிலவரம் : பகவான் ராகு 9-லிருந்து 8-ம் இடத்துக்கும், பகவான் கேது 3-லிருந்து 2-ம் இடத்துக்கும் டிரான்ஸ்ஃபர் ஆகிறாங்க.

ப்ளஸ் : நீங்க உண்டு உங்க வேலை உண்டுன்னு சிவனேன்னு இருங்க; அதுபோதும். விசேஷ ப்ளஸ் ஏதுமில்லை.

மைனஸ் : கூட்டாளி பிரிவார், கணவன் - மனைவி சண்டை அதிகமாகும், வியாபாரம் மந்தமாகும். கொஞ்சம் பொருள் விரயம் ஏற்படும். எனவே பெரிய திட்டமிடுதல் ஆசையை கொஞ்சம் ஒத்தி வைத்து விட்டு வெள்ளி, செவ்வாய் விளக்கேற்றி, ஒருமுறை திருநாகேஸ்வரம் போய் வரவும்.

மிதுனம் : கிரக நிலவரம் : ராகு ஸார் ஏழாம் இடத்தில் அமர்ந்திருக்கார். மிஸ்டர் கேது ஜென்ம ராசிக்கு ஷிப்ட் ஆயிட்டார்.

ப்ளஸ் : கடன் சுமை தீரும். பார்ட்னரோடு இருந்த கருத்து வேறுபாடு நீங்கும். வீடு - தொழில் மாறும். உடல் உபாதை நீங்கும்.

மைனஸ் : குடும்பத்தில் சண்டை துவங்கும். எல்லாத்திலும் ஒரு தடை வரும். அதை போராடி ஜெயிக்க வேண்டியிருக்கும். இதைத்தவிர வேறொன்றுமில்லை. ஒவ்வொரு பிரதோஷத்துக்கும் விரதம் இருப்பது நல்லது.

கடகம் : கிரக நிலவரம் : ராகு 6-ம் இடத்திலும் கேது 12-லும் சஞ்சரிக்கப் போகிறார்கள்.

ப்ளஸ் : புண்ணிய ஸ்தலம் போக வாய்ப்பு உண்டு. மனக் கசப்பு நீங்கி



குடும்ப ஒற்றுமை ஏற்படும். கலைஞர்களுக்கு நல்ல ஏற்றம். வீடு, மனை வாங்க வாய்ப்பு வரும். உத்யோக உயர்வு நிச்சயம். வாகனம் வாங்குவீர்கள்.

மைனஸ் : 'ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது'ன்னு பாடிக்கிட்டே போங்க! பரிகாரம் ஒண்ணும் வேணாம்.

சிம்மம் :

கிரக நிலவரம் : ராகுபகவான் 5-வது இடத்திலும், கேது பகவான் 11-வது இடத்திலும் சஞ்சரிக்க இருக்காங்க...

நடக்கும்!

ப்ளஸ் : வியாபாரம் பெருகும். கடன்கமை குறையும். வெளியூர் போவீர்கள். சுபநிகழ்ச்சி நடந்தேறும்.

மைனஸ் : கூட்டாளியை விட்டு விலகுவீர்கள். பழைய வீட்டை விற்பீர்கள். அனைத்தும் நன்மைக்கே. ராகு / கேதுவுக்கு வெள்ளி தேறும் தீபம் ஏற்றுங்கள்.

கன்னி:

கிரக நிலவரம் : ராகு 4-வது இடத்துக்கும் கேது 10-வது இடத்துக்கும் ஷிஃப்ட் ஆகிறார்கள். அதனால்...

ப்ளஸ் : புதிய ஒப்பந்தம் செய்வீர்கள். கடன் தொல்லை

தஞ்சை பரத்வாஜ்

தீரும். உத்யோக உயர்வு உண்டு.

மைனஸ் : தாயார் உடல் நலம் பாதிக்கும். வேலையில் இடமாற்றம் வரும். வேலைப்பளு அதிகரிக்கும். கொஞ்சம் விரையம் உண்டு. தியானம் செய்யுங்கள் - தீபம் ஏற்றுங்கள். அதுவே பரிகாரம்.

(மற்ற ராசிகள் அடுத்த வாரம்)




அருள்வாக்கு

அலவணம்

ஏதெது அவசியம் என்று இருக்கின்றனவோ அவற்றையே ஒவ்வொரு சமயத்தில் தள்ள வேண்டியதாயிருக்கிறது. க்ருஹஸ்தன் பண்ணியே தீரவேண்டுமென்றிருக்கிற அத்தனை வைதிக கர்மாக்களையுமே ஒரு காலத்தில் தள்ளிவிட்டு சந்நியாஸம் வாங்கிக் கொள்ளச் சொல்லியிருக்கிறது! ஜீவிப்பதற்கு அவசியமான ஆகாரத்தை மந்த்ரபூர்வமாகப் புசிப்பதற்கு வழிசொன்ன சாஸ்திரங்களே ஆகாரத்தைத் தள்ளிவிட்டு உபவாஸமிருக்க வேண்டிய காலங்களையும் சொல்கிறது. முழுக்க ஆகாரத்தைத் தள்ளாவிட்டாலும் அதில் இன்னின்ன காலத்தில் இன்னின்ன பதார்த்தங்களைத் தள்ள வேண்டுமென்று அநேக விதிகளைச் சொல்கிறது. இதில் 'அலவணம்' என்று ஒன்று. சாப்பாட்டில் உப்பு சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பதே அலவணம். ''உப்பில்லாப் பண்டம் குப்பையிலே'' என்று ஒரு பக்கம் சொல்லிவிட்டு, சில காலத்தில் உப்பு கூடாது என்றும் வைத்திருக்கிறது. உணர்ச்சி வேகத்துக்கு உப்பு காரணம். ''மானம், ரோஷம் இல்லே? நீ உப்புப் போட்டுண்டு தின்றதில்லே?'' என்று கேட்கிறோமல்லவா? ரொம்பவும் ஆத்ம மார்க்கத்தில் போகும்போது இந்த மானம், ரோஷம், மற்ற உணர்ச்சி வேகமெல்லாம் போகத்தான் வேண்டும். அதனால் சந்நியாஸி முதலியவர்கள் அலவணமாகச் சாப்பிடவேண்டும். டாக்டர்கள் ஒரு காரணத்துக்காக உப்பு கூடாது என்றால், சாஸ்த்ரமும் ஒரு காரணத்துக்காகத் தள்ளுகிறது. 'வருண ஜபம்' முதலான வேத மந்த்ர ஜபங்களின் போது ஜபிக்கிறவர்கள் உப்பு சேர்த்துக் கொண்டால் நிச்சயமாகப் பலன் கிடைக்காமலிருப்பதையும், அதுவே அவர்கள் அலவணமாய் இருந்தால் மழை பெய்கிறதையும் இந்தக் காலத்திலும் நிதர்சனமாகப் பார்க்கலாம். முருகன் சம்பந்தப்பட்ட செவ்வாய்க்கிழமை, சஷ்டி, கிருத்திகை முதலானவற்றில் குறிப்பாக அலவண நியமம் அனுஷ்டிக்கப்படுகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்





கிஃப்ட்!

முத்து ஆனந்த்

'இந்த கடவுளுக்கு ஏன் ஒர வஞ்சனை?' யோசனையில் இருந்தபோது... ''எம்.டி.கூப்பிடுகிறார் சார்'' என ப்யூன் வந்து சொல்ல, ராஜசேகர் வேகமாய் நடந்தான்.

''இந்தாங்க ராஜசேகர், நீங்க சீட்டு சேர்த்த கமிஷன் 200 ரூபாய்'' எம்.டி.கவரை நீட்ட உற்சாகம் போர்த்திய சந்தோஷத்துடன் வாங்கினான்!

''தாங்க் யூ சார்!'' என்றபடியே வெளியில் வந்தான்.

'கிஷோர் ரொம்ப நாளா மாத்தி மாத்தி அந்த ரெண்டு யூனி ஃபார்மையே போட்டுக் கிட்டிருக்கான்! இன்னும் ஒரு செட் யூனிஃபார்ம் தைக்கணும்! மூன்றாம் வகுப்பு படிக்கும் தன் பிள்ளை குடும்பப் பொறுப்பை இந்த வயசிலேயே உணர்ந்து நடந்து கொள்வதில் ராஜசேகருக்கு ரொம்ப பெருமை! கடவுள் வறுமையை தந்திருந் தாலும், கடவுள்கிட்டேகூட ராஜசேகர் எதுவும் கேட்டது இல்லை. அதைப் போலவே 'இது வேண்டும் அது வேண்டும்' என்று ஒரு முறை கூட தொந்தரவு செய்யாத மகனைக் கண்டு ராஜசேகருக்கு வெகு பிரமிப்பு.

வீட்டுக்கு வந்ததும் உள்ளே நுழை வதற்கு முன்னேயே வெகுவேகமாக ஓடி வந்த கிஷோர் ''டாடி, சீக்கிரம் வாங்க ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்'' என்றவன், ஜானகி பேச ஆரம்பிக்குமுன் அவள் உதடுகளை மூடியபடியே, ''மம்மி, நானேதான் சொல்வேன்!'' என்று துள்ளிக் குதித்தபடியே பேச ஆரம்பித்தான்:

''டாடி, எங்க ஸ்கூல்ல ஸ்போர்ட்ஸ் நடந்ததுதல்ல; அதுல கேரம் ஃபோர்டு காம்பெடிஷன்ல நான்தான் பர்ஸ்ட் ப்ரைஸ். எவ்வளவு தெரியுமா? இருநூற்றைம்பது ரூபா'' என்று முகத்தில் சூரியப் பிரகாசம் ஒளிர ஜானகி கையிலிருந்த 'கிஃப்ட்' செக்கை வாங்கி ராஜசேகரிடம் கொடுத் தான்!

''ஓ... குட்டிப் பையன் அந்த அளவுக்கு கலக்க ஆரம்பிச்சிட்டானா?'' என்று அளவற்ற சந்தோஷத்துடன் அவனைத் தூக்கி உச்சி முகர்ந்து, ''குட்டி, இந்தக் காசு உனக்குதான்... நீ என்ன வேணும்னாலும் வாங்கிக்க...'' என்ற தும்...

''நா சொல்றத நீங்க வாங்குங்க'' என்றான் கிஷோர்.

இருவரும் வியப்பாய்ப் பார்க்க, ''என்ன வாங்கணும்? சொல்லு குட்டி'' என்றாள் ஜானகி.

''டாடி, செப்பல் ரொம்ப பழ சாயிடுச்சு! அறுந்ததையே திரும்ப திரும்ப தைச்சி போட்டுக்கிட்டிருக்கார்! அதனால, இந்தக் காசுல உடனே டாடிக்கு செருப்பு வாங்கணும்!'' என்றான் கிஷோர்.

அதைக்கேட்ட ஜானகி, 'ஏங்க கடவுள் ஏதாவது ஒரு கிஃப்ட்ட எல்லாருக்கும் கொடுப்பார் போல இல்ல' என்றாள் கண்கலங்கி. வீடு பொக்கிஷமாய் ஜொலித்தது ராஜசேகருக்கு. ●

கவலை நீக்குமா கழுத்துப்பட்டை?





"தோள் வலி அல்லது கழுத்து வலி. இது இரண்டுமே தலை வலி, பல் வலி போல அவரவர்களுக்கு வந்தால்தான் தெரியும்."

தோள் வலி, கழுத்து வலி என்பது எதனால் ஏற்படுகிறது. அதற்கான தீர்வு என்ன, நந்தனம் அப்பலோ மருத்துவமனையின் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் விஜய் சி.போஸ் பேசுகிறார்.

"தோள் பட்டையில் வலி என்பது பெரும்பாலும் கழுத்தில் ஏற்படும் கோளாறால் உண்டாகிறது. தோள் பட்டையில் உண்டாகும் வலியை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

இளைஞர்கள், நடுவயதினர் மற்றும் முதியோர்கள் இப்படி. இளைஞர்களுக்கு விளையாடும்போதோ அல்லது விபத்தின் போதோ பலத்த அடிப்பட்டு அதனால், தோள் பட்டை மூட்டு இலேசாக விலகி வெளியே வர ஆரம்பிக்கும். இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் கையை இலேசாகத் தூக்கினாலே வலிக்க ஆரம்பித்து விடும். இதற்கான ஒரே தீர்வு என்பது அறுவை சிகிச்சைதான்... உடற்பயிற்சி செய்வதால் இதைச் சரி செய்ய முடியாது. Keyhole surgery மூலம்தான் இதைச் சரி செய்ய முடியும்.

நடுத்தர வயதினர்: 35 முதல் 45 வயது உள்ளவர்களுக்கு impingement என்ற நிலை ஏற்படும். இதை மருந்து, மாத்திரை மற்றும் உடற்பயிற்சி செய்வதன் மூலம் சரி செய்துவிட முடியும். மருந்து மாத்திரைகளில் சரி செய்ய முடியாவிட்டால் ஊசியால் இந்த வலியைச் சரி செய்து விட முடியும்.

முதியவர்கள்: முதியவர்களுக்கு joints டைட் ஆகி விடுவதால் frozen shoulders என்ற நிலை ஏற்படுகிறது. இதற்கும் உடற்பயிற்சி செய்தாலே போதும். அறுவை சிகிச்சை தேவையில்லை" என்றவரிடம்

கழுத்தில் காலர் அணிகிறார்களே... அது ஏன்? என்று கேட்டால்

"வயதானால் முடி நரைப்பதைப் போல, ஐம்பது அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, கழுத்து எலும்பில் தேய்மானம் ஏற்படும். 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு

எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தால் தேய்மானம் தெரியவரும். தேய்மானம் என்பது வியாதி கிடையாது. அந்தத் தேய்மானத்தால் வலி அதிகம் ஏற்படும்போது காலர் போட சொல்லிப் பரிந்துரைப்போம். ஆனால், நம் நாட்டில் பலரும் செய்யும் தப்பு, காலரை ஏதோ ஃபேஷனுக்காகப் போட்டுக் கொள்வதைப் போல ஒரேயடியாகப் போட்டுக்கொண்டே இருக்கிறார்கள். இது ரொம்பவும் தவறு. தேவையில்லாமல் கழுத்தில் காலர் போட்டுக் கொண்டிருந்தால் தசைகள் வலுவிழந்துவிடும். இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் அதைப் போட்டுக் கொள்ளக் கூடாது'' என்கிறார் டாக்டர் விஜய் சிவா போஸ்.

தற்கால இளைஞர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை?

''இது கம்ப்யூட்டர் காலம். காலத்தின் கட்டாயத்தால் 12 முதல் 13 மணி நேரம்வரை இளைஞர்கள் கம்ப்யூட்டரின் முன் அமர்ந்து வேலை பார்க்கிறார்கள். இதனால் நிச்சயம் அவர்களது முதுகுத் தண்டு பாதிக்கப்படும். நல்ல நடைப் பயிற்சி, ஏரோபிக் பயிற்சிகளை மேற்கொண்டால், வலியைக் குறைத்துக் கொள்ளலாம்; தவிர்க்க முடியாது. ஆனால் கொஞ்சம் தள்ளிப் போடலாம். கழுத்தைச் சுற்றி இருக்கிற தசையை வலிமை அடையச் செய்தாலே போதும். வலி நம் வழி நெருங்காது'' என்கிறார் டாக்டர் விஜய் சி போஸ்.

- நளினி சம்பத்குமார்



தென்னாங்கூர் திவ்யதேசம்





* கிருஷ்ணசாமி



சத்குரு ஞானானந்த சுவாமிகளின் சிஷ்யராக இருந்தவர், தென்னாங்கூரில் பிறந்த சுவாமி ஹரிதாஸ்கிரி. பஜனை சம்பிரதாயத்தில் மனம் ஒன்றிப் போன இவர் உருவாக்கியதுதான் தென்னாங்கூர் பாண்டு ரங்கன் - ரகுமாயி ஆலயம். கூடவே ஞானானந்த கிரி பீடத்தையும் துவக்கினார் அவர். பூரி ஜெகந் நாதர் கோயில் கட்டடக்கலை மற்றும் சோழ, பாண்டிய கட்டடக் கலைகளை உள்ளடக்கி பசுமையான வயல்களுக்கிடையே மனத்தைக் கொள்ளை கொள்கிறது ஆலயம்.

நாள்தோறும் பஜனை, ஆராதனை என்று ஆன்மிக அமர்க்களம் இங்கே அரங்கேறிக் கொண்டிருக்கிறது. ஹரிதாஸ்கிரிக்கு உல கெங்கிலும் பக்தர்கள் உண்டு. அவர்கள் தென்னாங்கூரில் சங்கமிக்கும்போது காற்றிலும் கலக்கிறது 'ராதே கிருஷ்ணா' கோஷம். இந்த அடி நாதம் இப்போது தென்னாங்கூர் கிராம மக்களையும் தொற்றிக்கொண்டு விட்டது. அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது 'ராதே கிருஷ்ணா' என்று சொல்லிக் கொள்வது வழக்கமாகிவிட்டது.

''இந்த ஊருக்குத் தட்சிண ஹாலாஸ்யம் என்று புரா ணங்களில் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மதுரை மீனாட்சி பிறந்த இட மும் இதுதான் என்று புராணங்கள் செய்தி சொல்லுகின்றன. முதலில் சுவாமி ஹரிதாஸ் கில் ஆலயத்தை மகாபலிபுரம் அருகே அமைக்கத்தான் நினைத்திருந்தார். ஆனால், பாண்டுரங்கன் தென்னாங் கூரில் அமைக்கும்படி சமிக்ஞை கொடுத்துவிட்டார்'' என்கிறார் நிர்வாகி வழக்கறிஞர் கிருஷ்ணசாமி.

சுவாமி ஹரிதாஸ்கிரி சமாதியான பிறகு நாமா னந்தகிரி பொறுப்பேற்று நடத்தி வந்தார். சமீபத்தில் அவரும் சமாதியான பின் பீடத்தின் தலைமை வெற்றிட மாக இருக்கிறது. 'அடுத்தபடி யார்?' என்று தென்னாங்கூர் அன்பர்கள் சஸ்பென்ஸுடன் காத்திருக்கிறார்கள்.

வாசகர் யோசனை:

உமாதேவி பலராமன்

நீங்கள் கேட்டவை-தராசு

முதல்வர் தீபாவளிக்கு வாழ்த்தவில்லையே?

● கு.கணேசன், பணங்கோட்டூர்

? ''பா.ம.க. தொடங்கி இருபது ஆண்டுகளாகின்றன. சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றை முன் வைத்து, மக்களுக்காகப் போராடியுள்ளோம். இதுபோல் வேறொரு கட்சியைச் சொல்லுங்கள் பார்ப்போம்... விவாதிக்கத் தயார்...'' என்ற ராமதாஸின் சவால்...?

! ராமதாஸ் கூறுவதில் நிறைய உண்மை இருக்கிறது. ஆனால், இதே கட்சிதான் விடுதலைப்புலிகளை ஆதரித்தும், ஜாதி அரசியல் பண்ணியும், சாலை மறியல் - மரங்களை வெட்டிச் சாய்த்தல் என்று ஈடுபட்டும் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக்கொண்டது. இதனால் நியாயமான போராட்டங்களின் வலிமை நீர்த்துப் போய் விட்டது.

* நீர்த்துப் போன நோக்கு





* மௌன வாழ்த்து!

● தாமஸ் மனோகரன், புதுச்சேரி

? எம்.பி.க்கள் இலங்கைப் பயணம் எதற்காக?

! கலைஞருக்கு மட்டும் புகழ் சேர்ப்பதாக முடிந்து விடக் கூடாதே என்பதால் காங்கிரஸ் எம்.பி.க்களும் சேர்ந்து கொண்டு அனுதாபம் காட்டினார்கள். ராஜபக்ஷேயிடம் ஏமாந்து போகாதவர் திருமாவளவன் மட்டுமே. ஆனால், அவருடைய ரியாக்ஷன் டூ மச். இதனால் இலங்கைத் தமிழர்களின் துயர் குறையாது; அதிகரிக்கும்.

● பா.அச்சுதன், வயலூர்

? பாம்பே ஜெயஸ்ரீக்கு இலக்கியத்தில் கௌரவ முனைவர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது பற்றி?

! உலக அரங்குகளில் சங்கத் தமிழ்ப் பாடல்களைப் பாடி வருபவருக்கு உரிய கௌரவம்தான்.

● ஆர். ராஜதுரை, சீர்காழி

? ஹைதராபாத் சாலை சந்திப்புகளில் ஒய்.எஸ்.ஆருக்கு முப்பது சிலைகள் நிறுவ ஆந்திர அரசு திட்டமிட்டுள்ளதே?

! மாயாவதி தனக்குத் தானே சிலைகள் நிறுவிக் கொண்டதற்கும் இந்த அபத்தத்துக்கும் அதிக வேறுபாடு இல்லை! ஹெலிகாப்டர் விழுந்து நொறுங்கிய இடத்தில் நூற்றுக்கணக்கான ஏக்கர் காட்டு மரங்களை வெட்டி நினைவுச் சின்னம் எழுப்பும் மகா அபத்த யோசனையையாவது கைவிட்டால் நல்லது.

● ஆர்.நாகராஜன்,
சென்னை - 117

? எல்லா ஜாதி - மதங்களுக்கும் பொதுவான



★ தேசிய அவமதிப்பு!




★ தனி நாயகம்!



★ உரிய கௌரவம்!



★ தோல்வியின் துவளல்!



★ மரங்களுக்கு அபாயம்!

முதல்வர், மக்களுக்கு ஏன் தீபாவளி வாழ்த்து கூறுவதில்லை?

! வாழ்த்து சொல்லி தீபாவளியின் மகிழ்ச்சியைக் குறைத்துவிட வேண்டாம் என்ற நல்லெண்ணமாக இருக்கலாம்.

● **க. குழந்தைவேல், கரூர்**

? **''அயோத்தியில் பிரமாண்ட ராமர் கோயில் கட்டுவது எனது நீண்ட நாள் கனவாகும்'' என்று அத்வானி கூறியுள்ளாரே?**

! அயோத்தியில் எந்த இடத்தில் என்பதுதான் பிரச்னை. அவர் கனவு நிறைவேறத் தடையாக இருப்பது அதுவே. 'ராமனிருக்கும் இடங்களெல்லாம் அயோத்திதான்' என்று உணர்ந்தால், நீண்ட நாள் காத்திருக்க நேராது.

● **பி.ஜெயப்பிரகாஷ்,**
சர்க்கார்பதி

? **''கலைஞரின் பெருமைகளை மேடையில் சொல்வேன். ஆட்சியில் குறைபாடுகள் இருந்தால் தனிப்பட்ட முறையில் அவரிடம் மட்டுமே சொல்வேன். குறைகளை மேடையில் சொல்வது திமிராகும். அந்தரங்கமாகச் சொல்வது தீர்வாகும்'' என்று வைரமுத்து சொல்லியிருப்பது பற்றி?**

! வைரமுத்துவின் இந்தக் கருத்து ஜனநாயகமல்ல, அவருடைய தனிநாயகம். கலைஞரை வெளிப்படையாக விமர்சிக்கிறவர்கள் எல்லோரும் திமிர் பிடித்தவர்கள் அல்ல. எல்லோரும் வைரமுத்துவைப் போல, முதல்வரை அந்தரங்கமாகச் சந்தித்துப் பேசவும் முடியாது. ஜனநாயகத்தில் அதற்கு அவசியமும் இல்லை.

● **ஆர். ரங்கநாதன்,**
சென்னை 17 ★

? **தீபாவளிப் பரிசாக எம்.பி.க்களுக்கு விஜய் மல்யா விஸ்கி பாட்டில் அனுப்பியுள்ளாராமே?**

! திருப்பி அனுப்பும் திராணி ஒரே ஒரு பா.ஜ.க. எம்.பி.க்கு மட்டுமே இருந்தது; அவர்கூட தமது வாழ்க்கை முறைக்கு ஒவ்வாது என்று காரணம் சொன்னாரே தவிர, தேச நலனுக்கு எதிரானது என்று கூறத் துணியவில்லை. மல்யா செய்த காரியம் தேசத் தந்தையை இழிவுபடுத்தியதென்றாலும் நமது எம்.பி.க்களின் தரத்தையும் அம்பலப்படுத்தியது.

● **அம்பூரணி ச.நாராயணன்,**
பாளையங்கோட்டை ☐

? **ஒவ்வொரு தேர்தலிலும் வாக்களிப்போர் சதவிகிதம் அதிகரித்து வருவது, மக்கள் ஜனநாயகக் கடமைகளில் அக்கறை காட்டுவதை உணர்த்துகிறதல்லவா?**

! ஆகா, குறிப்பாக அருணாசலப் பிரதேசத்தில் 72 சதவிகிதம் வாக்குப்பதிவு என்பது சீனாவின் கோபத்தை ரொம்பத்தான் கிளறி விட்டிருக்கிறது.

● **என். பாலகிருஷ்ணன், மதுரை**

? **''ஏழை எளியவர்களின் தேவை**

களை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படுமானால், நாங்கள் இந்த ஆட்சியிலேயே இருக்க மாட்டோம்'' என்கிறாரே கருணாநிதி?

! அவர்களுடைய தேவைகள் என்று எவற்றைக் கருதுகிறார்? அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றாமல் இலவசங்களால் மகிழ்விப்பது மக்களுக்கும் நல்லதல்ல; பொருளாதாரத்துக்கும் ஏற்றதல்ல.

● **ஆர்.பிரசன்னா, மதுரை**

? சமீப காலமாக அதிகரித்து வரும் வணிக விளம்பரங்கள், மக்களை வாங்கியே ஆக வேண்டும் என்கிற கட்டாயத்துக்குத் தள்ளுகின்றனவே?

! விளம்பரங்கள் கட்டாயப் படுத்துவதில்லை; தூண்டில் போடுகின்றன. சமூக நிர்ப்பந்தம் கட்டாயப்படுத்துகிறது. கிரெடிட் கார்ட், டெபிட் கார்ட் கலாசாரம் வாங்குவதை எளிமைப்படுத்துகிறது. இந்த வலையில் விழாமல் இருக்க தேவை, வைட்டமின் எம் - அதாங்க மன உறுதி!

● **லெ.நா.சிவகுமார், சென்னை - 33**

? பண்டிகைக் காலங்களில் கட்டணத்தை உயர்த்தி மக்களைச் சுரண்டும் வேலையை இப்போது அரசு போக்குவரத்துக் கழகங்களே தொடங்கிவிட்டனவே?

! அதிகாரபூர்வமற்ற உயர்வு என்பது கூடுதல் குற்றம்! ஆட்சி பலவீனப்பட்டுப் போனதன் அடையாளம்.

● **எல். மாறன், மேல்பட்டி**

? சமீபத்தில் படித்ததில் பிடித்தது பற்றி சில வரிகள்...?


! உள்ளடக்கத்தின் சுவாரஸ்ய எளிமை, தயாரிப்பில் கவனம், தரத்தின் உயர்வு, அச்சின் நேர்த்தி என்று அனைத்து வகைகளிலும் அசத்தும் அமுதசுரபி தீபாவளி மலர் '09.

● **ஜே.துரைராஜ், சென்னை - 87**

? ''மார்க்ஸிஸ்ட் கட்சியின் செல்வாக்கு சரிந்துவிட்டது; கட்சி மக்களிடமிருந்து விலகிவிட்டது'' என்கிறாரே மேற்கு வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாசார்ஜி?

! உள்ளாட்சித் தேர்தல்கள், இடைத் தேர்தல்களில் கட்சி வாங்கிய அடி பேச வைக்கிறது. பேச்சோடு நிறுத்தாமல், பரிசோதித்து, சீர்செய்யும் முயற்சியில் இறங்கலாமே. யார் குறுக்கே நிற்கிறார்கள்! ○

* கனவு மெய்ப்பட...



❒ ரூ.150/- பரிசு பெறுபவர்:
அம்பூரணி ச.நாராயணன், பாளையங்கோட்டை

★ ரூ.75/- பரிசு பெறுபவர்:
ஆர்.ரங்கநாதன், சென்னை - 17

3 உள்ளும் புறமும் உறைபவள்

சுதா சேஷய்யன்


இச்சா சக்தி ஞான சக்தி க்ரியா சக்தி ஸ்வரூபிணி - இந்த சற்றே நீண்ட திருநாமம், லலிதாம்பிகையே அனைத்து வித சக்தி ஸ்வரூபமாகவும் இருப்பதைத் தெரிவிக்கிறது. ஒரு செயல் நடைபெறுவதற்கு இச்சா சக்தியும் தேவை, க்ரியா சக்தியும் தேவை, ஞான சக்தியும் தேவை. ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்கிற இச்சை முதலில் மனத்தில் தோன்ற வேண்டும். அப்படித் தோன்றியதும் என்ன தெரியவேண்டும் என்றால், அதைச் செய்வதன் நோக்கம் என்ன? இறுதி இலக்கு என்ன? என்பது தெரிய வேண்டும் - இது ஞானம் 'இங்கேயிருந்து அங்கே போக வேண்டும்' என்பது இச்சை. அந்த 'அங்கே' என்பது எவ்விடத்தில் உள்ளது, எதை அடையவேண்டும் என்று அறிவது ஞானம். இச்சை வந்தாயிற்று, ஞானம் வந்தாயிற்று. அடுத்து, போகிற செயலைச் செய்ய வேண்டும். இந்த இயக்கம் அல்லது செயலைச் செய்ய வைப்பது க்ரியா சக்தி. - இந்த மூன்றுவித சக்திகளாகவும் இருப்பவள் ஸ்ரீ லலிதாம்பிகையே.

சர்வாதாரா - எல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருக்கக் கூடியவள்.

சுப்ரதிஷ்டா - இந்த அண்டத்தின் எல்லாவித வடிவங்களாகவும் தோன்றக் கூடியவள். பிரதிஷ்டை ஆகியிருக்கக் கூடியவள். நல்லவிதமாக நிலை நின்றிருப்பவள் சு-என்றால் சுபமாக, நல்ல விதமாக. பிரதிஷ்டா - பிரதிஷ்டை செய்வதென்றால் என்ன என்பது நமக்குத் தெரியும். அம்பாள் தான் எல்லாமாகப் பிரதிஷ்டையாகியிருக்கிறாள் என்கிறபோது, நாம் எதையும் பிரதிஷ்டை செய்யவில்லை என்று ஆகிறது. தானே பிரதிஷ்டையாகியிருக்கிறாள் அவள்.

சத் அசத் ரூப தாரிணி - சத்தாகவும் அசத்தாகவும் இருக்கக் கூடியவள். சத் என்றால் ஓரளவு புரியும். நல்ல, உயர்ந்த, சிறந்த என்று பொருள் கொள்ளலாம். அசத் என்பது அதற்கு நேர் எதிர்மறை. சாதாரணமாகப் பார்த்தால் சத் - அசத் என்பவற்றை ஒருவிதமாகப் பார்க்கலாம் - நல்லது; அல்லாதது என்று கொள்ளலாம். எல்லாவற்றிலும் சத்தாக நிறைந்திருப்பது என்றும் எல்லாவற்றையும் கடந்து அசத்தாக இருப்பது என்றும் கொள்ளலாம். கடவுள் என்பதையே கட + வுள் என்று பொருள் கொண்டால், எல்லாவற்றையும் 'கடந்தது', எல்லாவற்றுக்கு 'உள்ளும்' உறைவது என்று பொருள் தரும்.

இதே திருநாமத்துக்கு இன்னொரு விதமாகவும் பொருள் கொள்ளலாம். சத் என்பது எது? அண்ட பிரம்மாண்டத்திலேயே சத்தியம் எது? பரம்பொருள் மட்டும்தான் சத்தியம். இறுதியான ஞானம், உண்மை, சத்தியம் ஒன்றே ஒன்று தான் - அது பரம்பொருள். அதைத்தான் சத் என்று சொல்கிறோம். அதனால்தான் சச்சிதானந்தம் என்கிற சொல் - அனுபவம் - ஏற்பட்டது. 'சத்' தை 'சித்' உணரும்


ஸ்ரீசமன்விதா என்னும்
ஸ்ரீபூர்ணாம்பிகை
ஆண்டாங்கோயில்
ஸ்ரீ லலிதா
நான்காம் பாகம்

போது பிறக்கும் ஆனந்தம் சச்சிதானந்தம்.

நிர்குணமான பரம்பொருளுக்கு உருவ விளக்கம் சொல்ல முடியாது. ஆனால் இந்த உலகத்துக்கு - ஜகத்துக்கு ஓர் உருவம் இருக்கிறது. உலகம் உருண்டை என்று சொல்கிறோம். கோள் வடிவம் என்று சொல்கிறோம். மரம், செடி, கொடிகளெல்லாம் பார்க்கிறோம். தெருவைப் பார்க்கிறோம், ஜீவன்களைப் பார்க்கிறோம். ஏதோ ஒரு வடிவம் வருவது, நமக்குத் தெரிகிறதா இல்லையா? வடிவமே இல்லாதது சத் என்றால், அதற்கு எதிர் மறையாக இருக்கக்கூடிய, எல்லா வடிவத்தோடும் இருக்கக்கூடிய எல்லாமும் அசத். அப்படியானால், பரமாத்மாவாக இருக்கக் கூடிய அம்பிகை, இந்த ஜகத் ஸ்வரூபமாகவும் இருக்கிறாள். பார்க்கக் கூடிய எல்லா பொருட்களாகவும் இருக்கிறாள். அவளே **சத் அசத் ரூப தாரிணி.**

அஷ்டமூர்திர் - அஷ்ட மூர்த்தங்களாக இருக்கக்கூடியவள்.



இச்சா சக்தி

அஞ்ஞானம் களைபவள்

அஜாஜைத்ரீ - அஜா என்றால் என்ன அர்த்தம்? அஜாதசத்ரு என்று ஒரு மன்னன் இருந்ததாகச் சொல்வார்கள். அஜாத என்றால் தவறானவை, தீங்கானவை, வேண்டாதவை, அதர்மமாக இருக்கக் கூடியவை. இவற்றையெல்லாம் வெற்றி கொண்டவள், அழித்தவள் லலிதாம்பிகை.

அஜ என்றால் ஆடு என்றும் ஓர் அர்த்தம் உண்டு. ஏன் அதற்கு அஜ என்று பெயர் வந்தது என்றால், கொஞ்சம் அஞ்ஞானத் தின்பால்பட்டது ஆடு.

அஹங்காரமும் அஞ்ஞானமும் சேர்ந்தால் அது ஆடு ஸ்வரூபமாக இருக்கும். அதனால்தான் பழமொழி சொல்கிறபோது 'ஆட்டுக்கு வாலை அளந்துதான் வைச்சிருக்கு' என்று சொல்கிறோம். இந்தப் பழமொழியை யாராவது ஒருவரைக் குறித்துப் பேசுகிறபோது நாம் பயன்படுத்தினால் 'அவர் தகுதிக்கு ஏற்பத்தான் அவருக்குத் தரப்பட்டுள்ளது' என்று அர்த்தப்படும் - அதாவது அவர் தகுதி குறைவு, அதனால் குறைவாக வாய்க்கப்பெற்றுள்ளார் என்று. அஞ்ஞானத்துக்கு ஆட்டை உருவகப்படுத்தியதற்குக் காரணம் இருக்கிறது. ஆட்டுக்குக் கொஞ்சம் புத்தி மட்டு. 'ஆட்டு மடத்தனம்!' 'ஆட்டு மூளை' என்று இடித்துச் சொல்வது உண்டு. இந்த ஆடு குருட்டுத்தனமாகச் சில விஷயங்களைப் பண்ணும்.

மந்தையிலே போய்க் கொண்டேயிருக்கிறபோது ஏதாவது ஓர் ஆட்டுக்குக் காலில் சற்று அரிக்கும். அது ஓர் எம்பு எம்பிக் குதிக்கும். ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தாண்டிச் செல்கிறபோது இது நிகழும். மந்தையில் உள்ள எல்லா ஆடுகளுமே, இந்த இடத்தை அடைகிறபோது, தாங்களும் அதே மாதிரி ஓர் எம்பு எம்பிக் குதிக்கும்! ஏன்... எதற்கு... என்று தெரியாமலே செய்யும்! சில சமயங்களில் முதலில் குதிக்கிற ஆடு எம்பிய பிறகு ஒரு சுற்று சுற்றிவிட்டுக் குதிக்கும். அப்போது

அந்தந்தக் கிரஹத்திடம் அததற்கான 'ரூட் மேப்' பத்திரமாக இருக்கிறது. அம்பாள் போட்டுக் கொடுத்திருக்கிறாள். அதைப் புரிந்து கொள்ளும் தன்மை நமக்குக் கிடையாது.

பின்னால் வரும் ஆடுகளும் அதே மாதிரி குதிக்கும்! முன்னால் போகிற ஆடு பண்ணுவதையே நாமும் பண்ண வேண்டும் என்று பண்ணுகிற இந்தப் போக்கு தான் ஆட்டு மந்தைத்தனம்.

இப்படி காரணமே தெரியாமல், எதற்காகச் செய்கிறோம் என்று தெரியாமல் பின்தொடர்வதற்கு, அஞ்ஞானம்தானே காரணம்! இந்த அஞ்ஞானம், ஜீவன்களிலேயே ஆட்டுக்குத்தான் அதிகம் என்பதால் அஞ்ஞானத்துக்கு ஆட்டை உருவகமாக்கியிருக்கிறது. அதனால்தான் ஸ்காந்தத்தில் வருகிற சூரபத்மனின் தங்கைக்கு அஜமுகி என்று பெயர். அவள் முழுக்க முழுக்க அஞ்ஞானத்தின்பால் பட்டவள். ஆட்டுத் தலையோடு, ஆட்டு முகத்தோடு காட்சியளித்தவள்.

இப்படிப்பட்ட கடும் அஞ்ஞானத்தை ஜெயித்து, போக்கக்கூடியவள் **அஜாஜைத்ரீ.** அஞ்ஞானத்தை அவள் ஜெயித்தவள் என்பதுடன் தமது பக்தர்களுக்கும் அஞ்ஞானம் இல்லாமல் செய்யக் கூடியவள்.



ஞான சக்தி



கிரியா சக்தி

கோள்களின் யாத்திரை!

லோக யாத்திரா விதாயினி - இந்த லோகங்களின் யாத்திரையை நடத்தக் கூடியவள். லோகங்கள் யாத்திரை செய்வதென்றால்...?

சூரியன் போக வேண்டிய திசையிலே சூரியன் போய்க்கொண்டிருக்கிறது. சந்திரன் போகவேண்டிய திசையிலே அது போய்க்கொண்டிருக்கிறது. சனி என்றைக்குப் பெயர வேண்டுமோ, அன்றுதான் பெயர்கிறது. குரு என்று பெயர வேண்டுமோ அன்றுதான் அது நிகழ்கிறது! அப்படியானால் அதது நடக்க வேண்டிய கிரமத்தில் நடந்து கொண்டிருக்கிறதே, அதுதான் லோக யாத்திரை. இந்த யாத்திரையை மட்டும் அல்ல, நாம் அறிந்த கோள்களின் பாதையை மட்டும் அல்ல, நம் கண்ணுக்குத் தெரியாத உலகங்களையும் அவற்றின் பாதையில் நடத்திக் கொண்டிருக்கிறாள் அம்பிகை பரமேசுவரி.

சற்றே நினைத்துப் பார்த்தால் பிரமிப்பாகத்தான் இருக்கும். இந்திந்தக் கோள் இப்படியிப்படிச் செல்ல வேண்டும் என்று யார் 'ரூட் மேப்' போட்டுக் கொடுத்தார்கள்? சனி கிரஹம் இப்படிப் போகவேண்டும், குரு இப்படி நகரவேண்டும் என்று யார் சொன்னார்கள்!? ஆனால் அந்தந்தக் கிரஹத்திடம் அததற்கான 'ரூட் மேப்' பத்திரமாக இருக்கிறது? அம்பாள் போட்டுக் கொடுத்திருக்கிறாள். அதைப் புரிந்துகொள்ளும் தன்மை நமக்குக் கிடையாது. இதுஇது, இப்படியிப்படி நடக்க வேண்டும் என்கிற போது அதை நடத்துவிக்கிறாள் - **லோக யாத்ரா விதாயினி.** லோக யாத்திரியை நிர்ணயமாக, துல்லியமாகச் செய்யக் கூடியவள்.

(வளரும்)



அன்பின்

● **மு.மதிவாணன், அரூர்**

கல்லைக் காலால் இடித்துவிட்டு கல் இடித்து விட்டது என்று நாம் சொல்வது ஏன்?

கல்லின் மீது பழியைப் போடுபவன் Common ஆசாமி. கல்லின் (அகல்யா) பழியைப் போக்குபவன் ராமன் சாமி!

● **கே.எஸ்.கிருஷ்ணவேணி, கும்பகோணம்**

அன்பின் Address என்ன...?

தவறு செய்தாலும் குத்திக் காட்டாத Pin code..!

● **ராமேஸ்வரி, கோலார்**

''வரவர மாமியார் கழுதை போல் ஆனாளாம்'' - அப்படீன்னா என்ன அர்த்தம் கிரேஸி...?

தூய தமிழில் 'கழு' என்றால் அழகிய என்று அர்த்தம். 'தை' என்பது பெண்ணைக் குறிக்கும். ஆக வரவர மாமியார் அகத்தில் அழகிய பெண்மணியாக ஆகிறாள். இதைப் புரிந்து கொண்ட மருமகளுக்கு வாழ்க்கை கற்பூர வாசனையாக இருக்கும். புரியவில்லை என்றால் குட்டிச் சுவர்தான்!

● **மீனா முருகேசன், தஞ்சாவூர்**

நிலையில்லாத நிலையானது எது...?

வானிலை..!

● **A.சுபாஷ் சந்திரன், நாமக்கல்**

பரமசிவன் வாரிசு முருகன்; முருகனின் வாரிசு...?

பிள்ளைத் தமிழ்!

● **பா.அசோக், விருதுநகர்**

உப்பைத் தின்னவன் தண்ணீர் குடிப்பான்... தாகம் எடுத்தவன்..?

உப்பை எடுப்பான்! சுதந்திர தாகம் எடுத்தவன் உப்பெடுத்து சத்தியாகிரகம் செய்யவில்லையா...!

● **த.சத்தியநாராயணன், அயன்புரம்**

அனுமாருக்கும், விநாயகருக்கும் என்ன ஒற்றுமை...?

இருவரில் யாரை வேண்டிக் கொண்டாலும் 'நரனின்' (மனிதனின்) 'ரணத்தைத்' தீர்க்க வானரமும், வாரணமும் ஒற்றுமையாக இணைந்து செயல்படுவார்கள்.

● **ஜி.பாலசுப்ரமணியன், ஸ்ரீவில்லிப்புத்தூர்**

இளமை + தனிமை - பயம் = ?
('I'அதாவது 'க்ண்'படும்படி பதில் கூறுங்கள்)?

பதினாறு வயது இளமையில், பாதாள லிங்க குகை தனிமையில் ('I'அதாவது 'நான்' என்னும் அகந்தை படாதபடி) மரண பயத்தை மைனஸ் ஆக்கிய மகான் ரமண மகரிஷி.

● **யவனிகா, வேலூர்**

துணிச்சல், அசட்டுத் துணிச்சல் என்ன வேறுபாடு...?

மரணத்தை எண்ணிக் கலங்காமல் முறையாக வாழ்வது துணிச்சல். தனக்கு மரணமே கிடையாது என்ற நினைப்பில் தான்தோன்றித்தனமாக வாழ்வது அசட்டுத் துணிச்சல்..!

● வினிதா, தஞ்சை

தோல்வியிலதான் வெற்றி இருக்காமே...?

தோல்'V' - 'V for victory!

address...

● ஆர்.கே.லிங்கேசன்,
மேலகிருஷ்ணன் புதூர்

எப்போது வெடிப்பீர்கள்...?

நண்பர்களை பற்றி 'திரித்'துச் சொல்லி யாராவது 'பற்ற' வைத்தால்.

● கே.ஆர். ரவீந்திரன், சென்னை

புதுச் செருப்பு கடிப்பதேன்?... புது மனைவி இனிப்ப தேன்..? (ஒரே வார்த்தையில் பதில் சொல்ல முடியுமா?

'புது ஸோல்' (செருப்புக்கு Sole, மனைவிக்கு Soul)...!

● ரேவதிப்ரியன், ஈரோடு

தங்கம், துவரம் பருப்பு இரண்டுமே காஸ்ட்லி அயிட்டங்களாக மாறிவிட்டதே... என்ன ஆகும்?

போற ரேட்டுல தங்கத்தை விலையில் துவரம் பருப்பு ஓவர்-டேக் செய்து சவரன் - பருப்பு ஆகலாம். வெங்காய சாம்பார் போல தங்காய சாம்பார். பறிமாறப்படலாம்... மளிகைக் கடைகள் எல்லாம் மாளிகைக் கடைகளாக மாறும்!



கிரேஸியைக் கேளுங்கள்

சட்டென தனக்குள் எதுவோ உடைவது போலிருந்தது தேன்மொழிக்கு.

தொபதொபவென கொட்டும் அருவி. அருகில் பட்டாம்பூச்சிகள் பறக்கும் ஒரு மலர்த்தோட்டம் இவையனைத்தையும் அக்கணத்தில் மனசினுள் அவளால் உணர முடிந்தது.

வாழ்வில் எப்போதாவது ஒருமுறை நிகழும் அப்படிப்பட்ட தருணம் அவளை அப்போது முழுவதுமாய் ஆட்கொண்டிருந்தது. மகிழ்ச்சியின் அலை அவள் உடலெங்கும் பரவியது.

யார் இவன்... எங்கிருந்து வருகிறான்? எதற்காக இந்த ரயில் இப்படி பாதியில் நிற்கவேண்டும். எதற்காகத் தான் இறங்க வேண்டும்? எதற்காக இவர்கள் இங்கே பாடிக் கொண்டிருக்க வேண்டும்? இத்தனைக்கும் இவன் இவர்களோடு வந்தவன் இல்லை. எப்படி இவன் இங்கு வந்தான்? சில நிமிடத்தில் இந்தச் சூழலில் ஹீரோவாகிவிட்டானே?

தேன்மொழி அவனைப் பார்த்தபடியே மனத்துக்குள் ஆயிரம் கேள்விகளைக் கேட்டுக் கொண்டாள். உள்ளத்தை உருக்கும் நல்ல இசைக்குத்தான் எத்தனை வசிகரம்? அவன் குரல்கூட அத்தனை பிரமாதமில்லை. ஆனால், பாடும்போது குரலிலும், அவன் காட்டும் பாவத்திலும் தான் எவ்வளவு உண்மை! பார்த்தால் நகரத்து ஆசாமியாக இருக்கிறான். கிராமத்துப் பெண்களின் வலி எப்படி இவனுக்குத் தெரிந்தது? அடிப்படையில் நல்ல மனிதனாக இருந்தாலொழிய சாத்தியமில்லை. அதோ அவன் சிரிக்கிறான். சிரிக்கும்போது அவனது கண்ணுக்குள் எதுவோ வெளிச்சம் போடுகிறதே... 'அகம் பளிங்காக இருந்தால் கண்களில் பளிக் கட்டி பளிச்சிடும்' அப்பா அடிக்கடி சொல்வது ஞாபகத்துக்கு வந்தது.

அந்த முதல் பாடலை அவன் பாடி முடித்தபோது அனைவரும் அவனைப் பாராட்டித் தள்ளிவிட்டனர். 'பார் உன்னை விடப் பிரமாதமாகப் பாடி அசத்திவிட்டேன்' என கர்வத்துடன் தன்னை அலட்சியமாகப் பார்ப்பான் என நினைத்தாள். ஆனால், அவனோ, ''உங்க குரல் பொறாமையா இருக்கு. ரெகுலரா ப்ராக்டீஸ் பண்றீங்களா?'' என ஆச்சர்யமாகக் கேட்டான். இவள் இல்லை என்று தலையசைத்தாள்.

சட்டென நினைவு வந்தவளாக திரும்பிப் பார்த்தாள். ரயில் இப்போதைக்கு எடுக்கிறாற்போல் தெரியவில்லை. கீழே இறங்கியவர்களில் பெரும்பாலான கூட்டம் இவர்களைச் சுற்றித்தான் இருந்தது. அவளது கூபேயின் ஆட்கள்கூட அங்கு குழுமியிருப்பதைப் பார்த்தாள்.

தொடர்ந்து அவன் பாடிக்கொண்டிருந்தான். இடையிடையே கைத்தட்டல்களுடன் மற்றவர்களும் பாடினர். அவ்வப்போது பஜனை பாட்டையும் பாடி தாங்கள் பூரி ஜெகன்னாதரைப் பார்க்கப் போவதை அனைவருக்கும் நினைவூட்டினர். பாடல்களுக்கிடையே அடிக்கடி கமெண்டுகள் பறந்தன. சிரிக்கக் கிடைத்த சந்தர்ப்பங்

பகல் மீன்கள்

களில் தேன்மொழி அருகிலிருந்த நடுத்தர வயதுப் பெண்மணியின் மேல் சாய்ந்தாள். மெத்தென்றிருந்தது. அந்த உணர்ச்சியும் வாசனையும் அவள் அம்மாவை ஞாபகப் படுத்தின. அந்த அம்மாள் தேன்மொழியை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டாள்.



''மடியில் படுக்கறியாம்மா?''

இவளுக்கு ஆச்சர்யமாக இருந்தது. புல் தரையென்றும் பார்க்காமல் சட்டெனப் படுத்துக் கொண்டாள். கையிலிருந்த செல்ஃபோன் லோ பேட்டரி காட்டி உயிருக்குப் போராடுவதாக மிச்சத் துளிகளுடன் எச்சரித்ததை அப்போது பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. காலை நேரம் ஆதலால் இதமான வெளிச்சம் சூழலுக்குத் தொந்தரவு இல்லாதிருந்தது. படுத்தபடியே அவனையும், வட்டமாக அமர்ந்தபடி அவனோடு கைதட்டியபடி உற்சாகமாக பாடிக் கொண்டிருந்த மற்றவர்களையும், அவர்களுக்குப் பின்னால் தொலைவில் தெரிந்த பனைமரங்களையும் அதற்கும் பின்னால் மேகமூட்டத்துடன் இருந்த வானத்தையும் கவனித்தாள். தேன்மொழியின் தலையை அந்த அம்மையாரின் குளிர்ந்த கை வருடிக் கொடுத்தது. தேன்மொழி படுத்த வாக்கில் நிமிர்ந்து அந்த அம்மாவின் முகத்தைப் பார்த்தாள். அவரும் தேன்மொழியைப் பார்த்துச் சிரித்தார்.

''இப்படி வெறும் தரையில் படுத்துட்டியேம்மா... டிரெஸ்ஸெல்லாம் அழுக்காகப் போவுது. நான் வேணும்னா பெட்ஷீட்டை எடுத்துக்கிட்டு வரச் சொல்லட்டா?''

''வேணாம்மா. இப்படி படுத்துக்கறதுதாம்மா எனக்குப் புடிச்சிருக்கு.''

''நல்ல பொண்ணும்மா நீ...''

''ம்மா... ஒண்ணு சொல்லட்டா... நீங்க எங்க அம்மா மாதிரி இருக்கீங்க''

அவள் செல்லமாய் அவரது கன்னத்தைப் பிடித்துக் கிள்ளி முத்தமிட்டாள்.

''அப்படியா செல்லம்... நீ கூடத்தான் என் பொண்ணு மாதிரி இருக்கே...'' எனச் சொல்லி வெள்ளந்தியாய்ச் சிரித்தவர்,

''எங்கிருந்தும்மா வர்ற... மெட்ராஸாம்மா?''

''ஆமாம்மா... பெசண்ட் நகர்''

''பேர் என்னம்மா?''

''தேன்மொழி''

''அட... என் பேரும் தேன்மொழிதாம்மா''

இவள் சடாரென நிமிர்ந்து அந்தம்மாவின் முகத்தை பட்டாம் பூச்சி பறக்கப் பார்த்தாள்.

ஆச்சர்யம், மகிழ்ச்சி இரண்டும் கண்களில் கலந்து கொட்டின.

அந்த அம்மாவோ வாயை மூடிக் கொண்டு ஆச்சர்யம் தாளாமல் சிரித்துக் கொண்டிருந்தாள். இவளுக்குச் சந்தேகமாக இருந்தது.

''இல்லை நீங்க பொய் சொல்றீங்க'' தேன்மொழி செல்லமாய்ச் சிணுங்கினாள்.

''அட நான் ஏம்மா உங்கிட்ட விளையாடப்போறேன். சத்தியமா...''

அந்தம்மா இவளின் தலையில் கைவைத்து எடுக்க,

''எங்கப்பா இன்னும் சுதந்திரத்துக்காகப் போராடுறார்...''

''புரியலையே...!''

''நீ கல்யாணம் பண்ணு... அப்புறம் தெரியும்!''

- பி.பாலாஜி கணேஷ்



இவளுக்கோ ஆச்சர்யம்!

''நீ எங்கம்மா போற...? கல்கத் தாவுக்கா?''

''ம்ஹூம்... விசாகப்பட்டினத்துல என்கூட படிச்ச பெண்ணுக்கு நாளைக்குக் கல்யாணம்...''

''கூட யாரும் வரலை?''

இவள் சிரித்துக்கொண்டே, இல்லை என்பதாகத் தலையசைக்க...

''அப்ப தனியாவா வந்திருக்க...?''

இதற்கும் தலையசைக்க...

''பரவாயில்லைம்மா இந்தக் காலத்துப் பொண்ணுங்க. பொறாமையாத்தான் இருக்கு... ம்ஹூம் நான் கல்யாணத்துக்கு முன்னாடி எங்க கிராமத்தைத் தாண்டி வெளியே வந்ததில்லை. முதல் பொண்ணு பிறந்த பிறகுதான் சினிமாவுக்கே கூட்டிட்டுப் போனாரு எங்க வீட்டுக்காரரு. அதுக்கே எங்க மாமியார் மூணுநாள் என்கூடப் பேசலை.''

''அக்கா அது அந்தக் காலம். இப்பல்லாம் பொண்ணுங்க ராக்கெட்லயே பறக் கறாங்க...'' என்று குறுக்கிட்ட ட்ரவுசர் அணிந்திருந்த மனிதரின் குரல் இவர்களின் அன்னியோன்யத்துக்கு வேட்டு வைக்க, அப்போதுதான் தேன்மொழி நிமிர்ந்து பார்த்தாள். அதுவரை அந்த அம்மையாருடன் அவள் பேசிக் கொண்டிருந்ததை, சுற்றியிருந்த பலரும் கேட்டுக் கொண்டிருந்ததைக் கண்டாள்.

''சரி சரி அக்கா நல்லா பாடிக்கிட்டிருந்த பொண்ணை இப்படி குழந்தையாட்டம் மடியில படுக்கவைச்சா எப்படி... எழுந்து பாட்டு பாடச் சொல்லுங்க'' எனச் சொன்ன கையோடு, தேன்மொழியை ஆவலுடன் பார்த்தார். தேன்மொழி எழுந்து அமர்ந் தாள். திடீரென கைதட்டல், விசில் பறந் தது.

''சைலண்ட்... எல்லாரும் கொஞ்சம் நேரம் சைலண்ட்... இப்ப நம்ம ஹீரோ சாரும் நம்ம ஜீன்ஸ் அக்காவும் சேர்ந்து ஒரு பாட்டு பாடுவாங்க. கம்னு இருங்க'' கூட்டம் அமைதியாக இருந்தது. தேன்மொழி அவனோடு சேர்ந்து 'சிட்டுக் குருவி முத்தம் கொடுத்து' பாடலைப் பாடினாள். அனைவரும் அமைதியாகக் கேட் டனர்.

''பறந்து செல்ல நினைத் திருந்தும் எனக்



தூக்கிப்போடு அரசு வேலையை...

திருவண்ணாமலையில் எந்த ஒரு பொது நிகழ்ச்சியென்றாலும் அதில் இந்திரா ராஜனின் பங்களிப்பு இல்லாமல் இருக்காது. எக்ஸ்னோரா, அரிமா சங்கம், ரெட்க்ராஸ் ஆகிய அமைப்பு களில் முக்கியப் பொறுப்பில் இருக்கும் இந்திரா ராஜன் அரசு வேலையைத் தூக்கிப் போட்டுவிட்டு பொதுச் சேவையில் குதித்தவர்.

பன்றிக் காய்ச்சலா? உடனே நோட்டீஸ் அடித்து, தெருமுனைக் கூட்டங்கள் போட்டு விழிப்புணர்வு ஊட்டுகிறார். மரம் நடுவதை ஒரு வாழ்க்கை முறையாகவே வைத்திருக் கிறார். மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளுக்கு இந்திரா ராஜனைக் கூப்பிட்டு விடுகிறார்கள். இதுவரை பல்வேறு அமைப்பு களால் பலமுறை சிறந்த சமூக சேவகர் என்ற விருதைப் பெற்றிருக்கிறார்.

கார்த்திகை தீபம், பௌர்ணமி போன்ற நாட்களில் பல்லாயிரம் மக்கள் கூடும்போது கிரிவலப் பாதையில் சுற்றுச் சூழல் காக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி பிரசாரம் செய்கிறார். உறுப்புகள் தானம் என்பது இப்போதுதான் பிரபலம். ஆனால் வெகு காலத்துக்கு முன்பே, தம் கண் களையும், உடலையும் தானமாகக் கொடுத்துவிட்டார் ராஜன்.

கும் சிறகில்லையே
பழக வந்தேன் தழுவ வந்தேன்
பறவை துணையில்லையே''

இந்த வரிகளை இருவரும் பாடும்போது ஒரே ஸ்தாயியில் குரல் ஒன்றோடு ஒன்று இணை பிரியாமல் அத்தனை சுத்தமாய்க் குழைந்தது.

''ஒரு பொழுது மலராக கொடியில் இருந்தேனா
ஒரு தடவை தேன் கொடுத்து மடியில் விழுந்தேனா''

காதல் வயப்பட்ட நல்லிதயம் கொண்ட ஒரு பெண்ணின் மனத்தை இத்தனை துல்லியமாக வேறு வரிகளில் சித்திரிக்க முடியுமா என ஆச்சர்யப்படுமளவுக்கு அந்த வரிகள் இருந்ததை தேன்மொழி பாடும்போது உணர்ந்தாள்.



“பழக வந்தேன் தழுவ வந்தேன் பறவை துணையில்லையே”

சட்டெனப் பாதியில் பாட்டு துண்டிக்கப்பட, திடீர்ப் பரபரப்பு. ரயில் புறப்படப் போவதற்கு அறிகுறியாக அனைவரும் அவசர அவசரமாக பெட்டிக்குள் ஏறத் தொடங்கினர். பாடிக் கொண்டிருந்த கூட்டம் நொடியில் கலைந்தது. தேன்மொழிக்கு பாட்டு பாதியில் நிறுத்தப்பட்டதால் மனத்தில் லேசான வலி. போகும்போது அவசர அவசரமாக அந்த அம்மையார் அவளிடம், ''வாம்மா பெட்டியில் ஏறு'' என அழைத்தாரே ஒழிய யாரும் நிற்கவில்லை. நொடி நேரம்தான் அந்த இடமே சட்டென காலியாகிக் கொண்டிருந்தது. மற்றவர்கள் ஒரு பேச்சுக்குக்கூட இவளிடம் போய் வருகிறேன் என்று சொல்லவில்லை. அவரவர்க்கு அவரவர் அவசரம். நடந்தது எல்லாம் கனவுதானோ என நினைத்தபடி அவனைத் தேடினாள். அவனையும் காணவில்லை.

ரயில் ஊளையிட்டது.

இவளைச் சீக்கிரம் ஏறச் சொல்லி பெட்டியிலிருந்து யாரோ கையசைத்தபடி குரல் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

இவள் தன் பெட்டியை நோக்கி வேகமாக ஓடினாள். அப்போதுதான் பாக்கெட்டைத் தொட்டுப்பார்க்க, ஒரு பாக்கெட்டில் செல்ஃபோன் இருந்தது. அட.... இன்னொரு பாக்கெட்டையும் தொட்டுத் தடவிப் பார்த்தாள். பின் பக்கம் சந்தேகமும் குழப்பமுமாக இருகைகளாலும் தடவிப் பார்த்தாள்.

பர்ஸ்... மணிபர்ஸைக் காணவில்லை. அதிர்ச்சியாக இருந்தது. அதில்தானே டிக்கெட்.... இரண்டு ஏ.டி.எம். கார்டு... மனசு பக்கென்றது.

சற்றுமுன் படுத்திருந்த புல்வெளியை இங்கிருந்தே திரும்பிப் பார்த்தாள்.

அந்த இடம் வெறுமையாக இருந்தது.

ரயில் இப்போது நகரத் துவங்கியது.

அதோ அவள் பெட்டி முன்னே நகர்ந்து கொண்டிருக்கிறது.

டிக்கெட்டில்லாமல் எப்படி பயணிப்பது?

கணநேரம்தான்.

அதற்குள் ரயில் வேகம் பிடிக்கத் தொடங்கியது.

(மீன்கள் துள்ளும்)

வட்டமேஜை

'தன்னம்பிக்கை மலரட்டும்; சுயமரியாதை பெருகட்டும்' தலையங்கத்தில் கூறியபடி மாணவர்களின் விருப்பத்துக் கேற்ப, பாடங்களை எடுத்துப் படிக்கச் சொல்ல வேண்டும். மேலும் 'Value education' என்ற கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துப் படிக்க வைத்தால், கண்டிப்பாக தவறுகள் ஏற்படாது.

- கிரிஜா ராகவன், கோவை

துக்கடா நியூஸ் துக்கடாவா இருந்தாலும் அதில் உள்ள விஷயங்கள் எல்லாமே படா தூள்.

- ஆர்.ரங்கநாதன், சென்னை - 17

காஞ்சியைவிட ஆரணி பெஸ்ட் என்பது புடைவைப் பிரியர்களுக்கு இனிப்பூட்டும் செய்தி.

- ஆர்.பிரகாஷ், பொன்மலை

சூர்யாவின் வெளிப்படையான தன்னடக்கமான பேச்சுதான் அவரை மென் மேலும் உயர்த்துகிறது.

- ஜி.அப்துல்பாரி, பழனி

வேலூர் மத்தியச் சிறை, ஓர் தொழிற்சாலையாக, அறச்சாலையாக உருமாறி வருவது வரவேற்கத்தக்கது!

- உமாதேவி பலராமன், வேட்டவலம்

அசோகமித்திரனின் நட்சத்திரச் சிறுகதை 'கோல்கொண்டா' பௌர்மணியாகப் பிரகாசித்தது என்றாலும் மிகையில்லை. சபாஷ்!

- எஸ்.ஆர்.ஹரிஹரன், சென்னை

தீப்பெட்டி தொழிற்சாலைகளைக் காப்பாற்ற எத்தனையோ முயற்சிகள் நடந்து கொண்டிருந்தாலும் பழைய செழிப்பு இப்போது இல்லை.

- எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்



'கையேந்தி பவன்' உணவைவிடச் சுவையாக இருந்தது 'நியூஸ் ஏந்தி பவன்' தகவல்கள்!

- தி.பச்சமுத்து, கிருஷ்ணகிரி

தங்கள் கட்சி தோற்றதும் கட்சித் தலைமையையும் தலைவரையும் தூற்றிவிட்டு ஆளும் கட்சிக்குத் தாவி பதவி சுகம் தேடும் இன்றைய அரசியல்வாதிகளுக்கு நடுவே, எத்தனை கசையடி பெற்றாலும் சுதந்திரப் போராட்டப் போராளிகளைக் காட்டிக் கொடுக்காத கக்கனின் தேசப்பற்று என்னை மலைக்க வைத்துவிட்டது!

- என். சங்கரதாஸ், ஸ்ரீவில்லிபுத்தூர்

தீபாவளி பலகாரங்கள் கொடுத்த மயக்கத்தில் இருந்த என்னை நிமிர்ந்து உட்கார வைத்தது துக்கடா நியூஸ்!

- 'வானவில்' மூர்த்தி, கடலூர்

அஞ்சலி



தேன்பொழியும் தேவாரம்!

''தருமபுரம் சுவாமிநாதன் சிறு வயதிலேயே தேவார திருமுறைகள் பாடப் பயிற்சி பெற்றிருந்தாலும், அவருடைய காசெட்டுகள் அவர் 60 வயதைக் கடந்த பின்தான் பதிவு செய்யப்பட்டன. சாதாரணமாக அந்த வயதில் பலருக்குக் குரல் வளம் இருக்காது. ஆனால் சுவாமிநாதனின் குரல் வளம் அப்போதும் குறையவே இல்லை. தேவாரப் பாடல்களை சாதாரண மக்களும் கேட்டுப் புரிந்து கொள்ளும்படி செய்த அவர் தம்முடைய காசெட்டுகளுக்கான ராயல்டி தொகையைக்கூட பெற்றுக் கொண்டதில்லை!'' என்கிறார் அவருடன் நெருங்கிப் பழகிய சி.எம்.அம்பலவாணன்.

சினிமா இசையில் நாட்டம் கொண்டிருந்த சுவாமிநாதன், தேவாரம் படிக்க மாட்டேன் என்று பிடிவாதமாக இருந்து, பின்னர் தருமபுரம் ஆதீனகர்த்தர் சண்முக தேசிக பரமாசாரியார் வற்புறுத்தியதால் தான் தேன் பொழியும் தேவாரம் பயிலச் சேர்ந்தாராம். 'அதுதான் என் வாழ்வில் திருப்புமுனை' என்று கூறியிருக்கிறார்.

எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் குறித்த நேரத்துக்கு முன்பாகவே வந்துவிடுவார். முக்கியமாக, சன்மானத்தைப் பற்றிக் கவலைப்படவே மாட்டார். இறைத் தொண்டு தான் அவருக்கு முக்கியம். குன்றத்தூரில் சேக்கிழார் கோயிலில் இரு முறை திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்திருக்கிறார்.

''பன்னிரு திருமுறை முழுதும், மாதம் ஒரு ஞாயிற்றுக் கிழமை என்று சொல்லி முடிக்க எட்டு வருடங்கள் ஆகும். சுவாமிநாதன் சென்னை சிவனடியார் திருக்கூட்டம் சார்பில் இந்து தியலாஜிகல் பள்ளியிலும், செங்குந்தர் கோட்டம் சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலிலும், மயிலை காரணீசுவரர் கோயிலிலும் - ஆக மூன்று இடங்களிலும் ஒரு ஞாயிறுகூட விடுபட்டுப் போகாமல் இதைச் செய்து முடித்தார்!'' என்கிறார் அம்பலவாணன்.

கலைமாமணி, இசைப் பேரறிஞர் உட்பட 27 பட்டங்கள் பெற்றவர் தருமபுரம் சுவாமிநாதன்.

தம் குருநாதர் வேலாயுத ஓதுவாமூர்த்தியின் பிறந்த நாளை புரட்டாசி மகத்தன்று, மூன்று நாள் தேவார இசைச் சொற்பொழிவு நிகழ்த்தி, கிடைக்கும் மொத்தத் தொகையையும் அப்படியே குருவின் குடும்பத்துக்குக் கடைசி வரை கொடுத்து வந்தவர் சுவாமிநாதன். (குருவின் பிறந்த நாளான புரட்டாசி மகம் அன்றே சுவாமிநாதன் காலமானார்!)

சிதம்பரம் சி.ப.தேவாரப் பாடசாலையில் பயின்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசையும் கற்றார். இசையரசு எம்.எம்.தண்டபாணி தேசிகரின் அன்புக்குப் பாத்திரமானவர். அவர்தான் சுவாமிநாதன் சென்னைக்கு வரக் காரணமானவர்.

இன்று தமிழ்நாட்டில் தேவாரப் பாடசாலை ஒன்றுகூட இல்லை. தருமபுரம் சுவாமிநாதன் நினைவாக அது நிறுவப் படுவது பொருத்தமாக இருக்கும்.

- சாருகேசி



கதைகள், கவிதைகள், பரிசுப் போட்டி...

கோகுலம்

நவம்பர் 2009 விலை ரூ.8/-

குழந்தைகளின் குதூகலம்!

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.